விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (24.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 187

UNION
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# நாட்டை ஆட்சி செய்ய கொள்கை அவசியம்

## ஹிட்லரின் ஆட்சி குறித்து அஸ்கிரிய பீடம் விளக்கம்



**(கொழும்பு) நாட்டை ஆட்சி செய்யும் போது நேரடியான கொள்கை அவசியமே தவிர, ஹிட்லர் போன்றவர்களின் கொலை செய்யும் சர்வாதிகார ஆட்சி தேவையில்லை என தாம் வலியுறுத்தியதாக வெளியான செய்திக்கு அஸ்கிரியபீடம் விளக்கமளித்துள்ளது.**

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் 69 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற மத அனுஷ்டான நிகழ்வில் தான் தெரிவித்த கருத்து தொடர்பில் அஸ்கிரிய 15

## சுதாகரின் விடுதலை தொடர்பில் முதல்வர், சம்பந்தன் பாராமுகம்

### ஆனந்தசுதாகரனின் தாயார் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஆனந்தசுதாகரனின் விடுதலை தொடர்பில் வடக்கு முதல்வர் சி.வி. விக்கினேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக கூறுகின்றனர்.

இருப்பினும் அவரது விடுதலை தொடர்பில் கதைப்பதாக 15

### ஒட்டுசுட்டானில் கிளைமோர் மீட்பு

## பிரதான சந்தேகநபர் நேற்று இரவு மாங்குளத்தில் கைது

(பனிக்கன்குளம்)

கிளைமோர், விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடை, புலிக் கொடி என்பவையுடன் முச்சக்கர வண்டி கைப்பற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் மாங்குளம் பொலிஸாரால் நேற்றிரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த கை ஒன்றை இழந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடை, கொடி மற்றும் 20 கிலோ கிராம் எடையுடைய கிளைமோர் குண்டு மற் 15

## தபால் கட்டணம் அதிகரிப்பு தபால் அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. கடந்த 15-ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த கட்டண அதிகரிப்பு விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சாதாரண தபால் மற் 16

## தேரரின் ஹிட்லர் பற்றிய கருத்து நாட்டில் மாயையை ஏற்படுத்தியது

### ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த



(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக கொண்டுவரப் போவதாக பொய்யான ஒரு மாயையை நாட்டில் ஏற்படுத்தி விட்டு, வேறு ஒருவரை வேட்பாளராக நியமிப்பதற்கே கூட்டு எதிர்க் கட்சியும் அதன் பின்னால் உள்ள 15

## சிறுத்தை கொலை; விசாரணை ஆரம்பம்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சியில் சிறுத்தை கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய இந்த 15

## கூட்டு எதிர்க் கட்சியால் ஆட்சிக்கு வர முடியாது

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியினர் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நாட்டின் ஆட்சியை கைப்பற்ற முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியில் 15

## அரசியல் கைதி ஆனந்தசுதாகரன் விடுதலையாகும் வாய்ப்புள்ளது

### சுதாகரனின் சட்டத்தரணி நவராஜ் தெரிவிப்பு



(கொழும்பு)

குற்ற ஒப்புதல் தவறாக வழுங்கப்பட்டுள்ளதுடன், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அரசியல் கைதி ஆனந்தசுதாகரனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளதால், அவர் விடுதலையாகக் கூடிய வாய்ப்புள்ளதாக அவரின் சட்டத்தரணியான பொ.நவராஜ் தெரிவித்துள்ளார்.

நவோதயா மக்கள் முன்னணி சார்பில் கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து 15

## திருவாசக அரண்மனை திறப்புவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவபூமி திருவாசக அரண்மனைத் திறப்பு விழா இன்று பிற்பகல் 4 மணியளவில் இடம்பெறும்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. 15

## வவு. ஆதிவிநாயகர் ஆலயத்தில் நேற்று கொள்ளை

(வவுனியா)

வவுனியா வைரளிங்குளத்தில் அமைந்துள்ள ஆதிவிநாயகர் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் நேற்று சனிக்கிழமை அதிகாலை கொள்ளையிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை வழமை போன்று ஆலயத்தினை 16

## மாகாண சபைத் தேர்தலை வலய முறையில் நடத்தலாம்

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பின் 14-வது திருத்தத்திற்கு அமைய மாகாண சபைத் தேர்தலை வலய முறையில் நடத்த முடியும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 24 தேர்தல் மாவட்டங்களையும் 48, 15

## மகிந்த அணியினருக்கு மட்டுமே எமது ஆதரவை வழங்க முடியும்!

### அரசிலிருந்து வெளியேறிய 16பேர் கொண்ட குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணிக்கு ஆதரவுகளை வழங்கினாலும் தம்மால் பொதுஜன பெரமுன கட்சியில் இணைந்துகொள்ள முடியாதென அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 பேர் கொண்ட குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிய சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களுக்கும் ஒன்றிணைந்த எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 15

**செவன**

திகதி 2018/06/23
சீட்டிழுப்பு இலக்கம் 94
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 17 31 34 44

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 23-06-2018
சீட்டிழுப்பு இலக்கம் 850
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 5 1 0 5 5 1
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**

திகதி 2018/06/23
சீட்டிழுப்பு இலக்கம் 1336
எழுத்து 04
வெற்றி இலக்கம் 08 21 48 51 36 02
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**

திகதி 2018.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 1799
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 32 37 42 43
தேசிய லொத்தர் சபை

# மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவில் நடவடிக்கை

## அமைச்சர் மனோ கணேசன்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க துரித நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

துறைமுக நகரத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு வாழ் மீனவர்களது பிரச்சினை தொடர்பில் ஆராயும் கூட்டமொன்று நேற்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டிருந்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு மாநகரத்துக்குள் உள்ள மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் துரித நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பு போர்ட் சிற்றி தொடர்பிலும், மண் அகழ்வு தொடர்பிலும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் கலந்துரையாடி, பிரச்சினைகள் ஒவ்வொன்றுக்கும் படிப்படியாக தீர்வினைப் பெற்றுக்கொள்வோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

# மல்லாகம் குழு மோதல் 12 பேருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் இடம்பெற்ற குழுமோதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட 6 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணையானது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவர்களை ஒரு வாரம் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சகாயமாதா கோவிலுக்கு அருகில் இடம்பெற்ற இந்த மோதலின் பின்னர் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயி ரிழந்திருந்தார்.

இந்நிலையில், குறித்த குழு மோத லுக்கு காரணமான 40 பேரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் இதன் முதற்கட்டமாக 6 பேர் கைது செய்ய ப்பட்டிருந்த நிலையில் மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

**Research Guider & Writer for MBA**

Research Guider Services In Sri Lanka provides the right kind of Guidance for MBA Research and thesis for the students. We are supporting to successfully complete the students study programme. Maintain standard among all other students by taking premium guidance and writing services. We are highly focused to reduce the plagiarism and maintain the professional standard of the work.

Note: Students have facilities to directly meet with us and discuss of their Research Proposal and the Research.

Contact No. 0765510111

Email id: info@assignmentguider.com

(4663)

# மட்டக்களப்பு ஒந்தாச்சிமடத்தில் இரு ஆலயங்கள் உடைத்து கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, ஒந்தாச்சிமடத்திலுள்ள இரு ஆலயங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒந் தாச்சி மடத்திலுள்ள மாரியம்மன் ஆலயம் மற்றும் சித்திவிநாயகர் ஆலயம் ஆகியனவே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதன்போது மாரியம்மன் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பெருமளவான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதுடன் அம்பாளின் நகைகள் மற்றும் பொருட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிகுடி பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7803, 021 567 1532

**விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை கடைக்கு புடைவை அனுபவம் உள்ள பழக ஆர்வம் உள்ள ஆண்கள் தேவை. நேரில் வரவும் இன்று ஞாயிறு (9-2) மணி.

**சென்னை பெசன் வேல்ட்**
63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். (4662)

**வான் விற்பனைக்கு**

லெடிக்கா ரக L300 ஹயஸ் வான் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:0778185017** (4653)

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் மைத்திரி களமிறக்கம்

## அமைச்சர் மகிந்த அமரவீர

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் மைத்திரிபால சிறிசேனவையே தாங்கள் களமிறக்கத் தீர்மானித்திருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக பேசிய அவர்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது உறுப்பினர் ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளது. அந்த வகையில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை களமிறக்க முடிவெடுத்துள்ளோம். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு அவரே பொருத்தமானவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் பலமடையச் செய்யும் வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

அதனைப் படிப்படி யாக முன்னெடுத்து வருகிறோம். ஆகவே விரைவில் மீண்டும் கட்சியை பலமான நிலைக்கு கொண்டு வருவோம்.

ஆகவே அவருக்கு ஆதரவு வழங்கும் எந்தக் கட்சியும் எம்முடன் இணைந்து செயற்பட முடியும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது பலத்தை நிரூபிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

திருவாசக அரண்மனை நாவற்குழி

**திறப்பு விழா**

காலம்:இன்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.00 மணிக்கு

**தலைவர்**
கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர்-சிவபூமி அறக்கட்டளை)

**அதிதி**
வைத்தியநிபுணர் வை.மனோமோகன் தம்பதிகள்
(அவுஸ்திரேலியா)

**கருங்கல் ரதம் திறந்து வைத்தல்**
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
(தலைவர்-மனிதநேயம் அறக்கட்டளை)

**திருவாசக ஆராய்ச்சி நூல்நிலையம் திறந்து வைத்தல்**
திரு.சூ.பாலசிங்கம்
(கணக்காளர்-இங்கிலாந்து)

**சிறப்புரை**
"திருவாசகம்"
கம்பவாரிதி இ.ஜெயராஜ்

**திருவாசக இசை விருந்து**
பேராசிரியர் தி.பாலச்சந்தர் தேசிகர்
(அண்ணாமலை பல்கலைக்கழகம்-சிதம்பரம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

சிவபூமி அறக்கட்டளை
இலங்கை

சிவபூமி திருவாசக அரண்மனை
A9 வீதி, நாவற்குழி

(4651)

**பணிநிலை வெற்றிடம்**

யாழ்.நகரில் நிறுவனம் ஒன்றிற்கு.

கணனி, கணக்கு பதிவாளர் பெண் பணியாளர் தேவை. வயது எல்லை 18-30 வரை.

**தொடர்புகளுக்கு:0775164928** (4660)

சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி
திருக்கோவில் நாவற்குழி

**மகா கும்பாபிஷேகம்**

காலம்:-25.06.2018 திங்கட்கிழமை
காலை 9.40 முதல் 10.45 மணிவரை

**பிரதமகுரு**
சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்
(பீடாதிபதி, வீணாகான குருபீடம், சித்தன்கேணி)

**அருளாசி**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
(முதல்வர்-நல்லை ஆதீனம்)

அனைவரும் வருகை தந்து சிவதட்சணாமூர்த்தியின்
திருவருளை பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.
இன்று (24.06.2018) காலை 6 மணிமுதல்
நண்பகல் 12 மணிவரை அடியார்கள்
எண்ணெய்க்காப்பு சாத்தலாம்.

சிவபூமி அறக்கட்டளை
இலங்கை

சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி
திருக்கோவில்
A9 வீதி, நாவற்குழி



**திருவாசக அரண்மனை**

**திறப்பு விழா**

**சிறப்புற பிரார்த்திக்கின்றோம்**

சைவ சமயத்திற்கு சிறப்பு தரும் வகையில் அமையப்பெற்ற திருவாசக அரண்மனை திறப்பு விழா சிறப்புற அமைய திருவாசகத்திற்கு பல தசாப்தங்களாக விழா எடுத்து சிறப்பு பெற்று விளங்கும் காரைநகர் மக்கள் சார்பாகவும் சைவமக்கள் சார்பாகவும் எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

(B-2964)

# வடக்கு-கிழக்கில் படைக்குறைப்பு இல்லை

# அதிருப்தியடைந்த அரசியல் சக்திகள்; இராணுவத் தலைமையகம் பாய்ச்சல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிலுள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது என வெளியான தகவல்களை இலங்கை இராணுவத் தலைமையகம் நிராகரித்துள்ளது.

அதிருப்தியடைந்துள்ள சில அரசியல் சக்திகள் தொடர்ச்சியாக தெரிவித்து வரும் தகவல்கள் காரணமாக உருவான வதந்தியே இது என இலங்கை இராணுவத் தலைமையகம் தெரிவித் துள்ளது.

இராணுவம் வடகிழக்கிலுள்ள படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கின்றது. இதன்மூலம் தேசத்தின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்ற தகவல்களை பொதுமக்களை பிழையாக வழிநடத்தும் நோக்குடன் இந்த அரசியல் சக்திகள் வெளியிட்டு வருகின்றன எனவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

படையினரை விட தாங்கள் தேசபக்தி மிகுந்தவர்கள் என காண்பிப்பதற்கு இந்த சக்திகள் முயல்கின்றன எனவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# 16 பேர் கொண்ட குழு பாரிய பிரச்சினைக்குள்

## அமைச்சர் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)


அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழு பாரிய பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தக் குழு கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வதாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சகல பொறுப்புக்களையும் விட வேண்டும் என கூட்டு எதிரணி நிபந்தனை விடுத்துள்ளது. இதனால், அக்குழு கடினமான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அமுனுகம தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச சந்தைக்குள் பிரவேசிப்பதே இலக்கு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய கைத்தொழில் துறையைப் பலப்படுத்தி சர்வதேச சந்தைக்கு தேசிய கைத்தொழில்துறையைக் கொண்டு செல்வதே எமது இலக்கு. அத்துடன் தேசிய கைத்தொழிலாளர்களுக்கு இயந்திரங்கள், உபகரணங்கள் இறக்குமதி செய்யும் போதும் அறவிடப்படும் 'வற்வரியை நீக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மில்லெனிய, பண்டாரகம பகுதியில் கட்டப்பட்ட உஸ்வத்த கோல்டன் பிஸ்கட் தொழிற்சாலையை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்ட பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய கைத்தொழிலை நாம் அழிப்பதாக சில தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை மறுத்த பிரதமர் தமது அரசாங்கம் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதுடன் அவற்றை பாதுகாப்பதற்கு பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தேசிய கைத்தொழில் துறையை பலப்படுத்துவதுடன் சர்வதேச சந்தைக்குள் செல்வதே எமது இலக்கு என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்த இலக்கை அடைவதற்கு நாங்கள் தேசிய கைத்தொழில் துறைக்குப் பக்கபலமாக பாரிய உதவிகள் பெற்றுக் கொடுக்கின்றோம். புதிய கைத்தொழிலாளர்களுக்கும் வரி நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குள் கொண்டு வரும் போதும் அதற்காக அறவிடப்படும் "வற்" வரியை நீக்குவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

அதேபோன்று கடனுக்கான வட்டி அறவீடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க தேவையான பேச்சுவார்த்தையை நடத்தி வருகின்றோம்.

மேலும் என்னென்ன நிவாரணங்களை, வசதிகளை கைத்தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கலாம் என்பது தொடர்பாகவும் நாம் பேச்சு நடத்தி வருகின்றோம் இதேபோன்று ஏற்றுமதியாளர்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கின்றோம்.

தேசிய உற்பத்திகளின் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்வதற்கும் ஒரு பகுதியை உள்நாட்டு சந்தைக்கு வழங்கவும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

2050ஆம் ஆண்டாகும் போது இப் பகுதியில் சனத்தொகை மேலும் அதிகரிக்கும். நாம் தூரநோக்குடன் சிந்தித்து எதிர்காலத்தை கருத்தில்கொண்டே செயற்படுகிறோம். அதிக இலாபத்தை நோக்காகக் கொண்டு இலங்கைக்கு தருவிக்கப்படும் பொருட்களை நிறுத்தவும் தேவையான சட்டங்களை தயாரித்து வருகின்றோம்.

தற்போது சிலர் உள்நாட்டு உற்பத்தித்துறையை நாம் அழித்து வருதாகக் கூறுகிறார்கள். ஆனால் இவற்றைப் பாதுகாக்கும் நோக்குடனேயே செயற்படுகின்றோம் என்பதே உண்மை. அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி பெற்றுக்கொடுக்கக் கூடிய நிறுவனமொன்றை உருவாக்க நாம் ஆயத்தமாக இருக்கிறோம். முன்னர் இவ்வாறான நிதியை அரசு பெற்றுக்கொண்டது. DFCC மற்றும் NDB வங்கிகளினூடாகவே. இருப்பினும் கடந்த கால ஆட்சியின் போது அவை தனியார் மயப்படுத்தப்பட்டன. எனவே நாம் இவ்வருடம் அபிவிருத்தி வங்கி வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்திருக்கின்றோம் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யோகா பயிற்சியில் ஜனாதிபதி மைத்திரி





(கொழும்பு)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யோகா பயிற்சி நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த திறந்தவெளி யோகா நிகழ்வை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வு கொழும்பு, சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலையின் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது. அதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்கேற்று யோகா பயிற்சிகளில் ஈடுபட்டார்.

சர்வதேச யோகா தினம் கடந்த ஜூன் 21 ஆம் திகதி இலங்கையிலும். உலக நாடுகளிலும் பரவலாகக் கொண்டாடப்பட்டது. அதன் ஒரு அங்கமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட யோகா நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 6 கிலோ; 36 மில்லியன் பெறுமதியான

# தங்கக்கட்டிகளைக் கடத்திய சிரேஷ்ட அதிகாரி சிக்கினார்



(கொழும்பு)

தங்கக் கட்டிகளைக் கடத்த முயன்ற சிரேஷ்ட குடிவரவு குடியகல்வு அதிகாரி ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 6 கிலோ நிறையுடைய 60 தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட தங்கக்கட்டிகளின் பெறுமதி 36 மில்லியன் ரூபாவென விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. குறித்த நபர் தங்கக்கட்டிகளை விமான நிலையத்திலிருந்து வெளியே கொண்டு வர முயற்சித்த சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட அதிகாரியை தடுத்து வைத்து தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (இ-7)

# இரும்புக்கரம் கொண்டு நசுக்க நினைத்தால் பாரிய எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும்

## தபால் ஊழியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இரும்புக்கரம் கொண்டு உழைக்கும் மக்களின் போராட்டத்தை நசுக்க நினைத்தால் பாரிய எதிர்விளைவுகளை அரசாங்கம் சந்திக்க நேரிடும் என தபால் ஊழியர் சங்க ஒன்றிணைப்பாளர் சிந்தக பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளில் சம்பளப் பிரச்சினை தொடர்பான கோரிக்கையை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இதுவரை எந்த ஒரு முயற்சியையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

தபால் சேவையாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் அரசாங்கத்திற்கு நாளொன்றுக்கு சுமார் 5 கோடி ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

எனினும் அரசாங்கம் அது தொடர்பில் எந்தப் பொறுப்பும் இன்றி செயற்படு கின்றது. இதனால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. பொதுமக்களே பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். ஆனால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

இந் நிலையில் அரசாங்கம் எமது விடுமுறை மற்றும் சம்பளம் என்பவற்றை நிறுத்தியுள்ளது.

இச் செயற்பாடு எம்மை ஏமாற்றி பணிக்கு திரும்பச் செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சியாகும். ஆனால் எமக்கான தீர்வு கிடைக்கும் வரை பணிப்பகிஷ்கரிப்பு தொடரும். மேலும் அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு உழைக்கும் மக்களின் போராட்டத்தை நசுக்க நினைத்தால் பாரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழும்பில் நோர்வேயின் நன்சன்



இந்து சமுத்திர கடற்பிராந்தியத்தில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உயர்தொழில்நுட்பங்களைக் கொண்ட நோர்வேயின் டாக்டர். பிரிட்ஜொப் நன்சன் ஆய்வுக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளது.

நோர்வேயின் பிரசித்தி பெற்ற ஆய்வுக்கப்பலான டாக்டர். பிரிட்ஜொப் நன்சன் இலங்கையைச் சூழவுள்ள கடற்பிராந்தியத்தில் கடல் வள ஆய்வு, மீன்வள ஆய்வு மற்றும் கடல் மாசாக்கல் காரணிகள் தொடர்பான ஆராய்ச்சி என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கிலேயே இலங்கைக்கு வருகை தந்துள்ளது. இக்கப்பல் எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதி வரை இலங்கையில் தரித்து நின்று தனது கடல் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இந்தக் கப்பல் மேற்கொள்ளும் ஆய்வின் மூலமாக இலங்கையின் கடல்வளத்தை பாதுகாத்தல், மீன்வளத்தை பேணுவதற்கான உத்திகள், கடல்வள மாசாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)



# மீண்டும் வென்றன 'சிவப்பு பேய்கள்'

துனிசியாவுக்கு எதிரான உலக கிண்ண கால் பந்து லீக் போட்டியில் கோல் மழை பொழிந்த பெல்ஜியம் அணி, 5-2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. அபாரமாக ஆடிய அணித் தலைவர் ஈட்ன் ஹசார்ட், ரோமெலு லூகாகு தலா 2 கோல்கள் அடித்து கைகொடுத்தனர்.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால் பந்து தொடர் நடக்கிறது. மொஸ்கோவில் நடந்த 'ஜி' பிரிவு லீக் போட்டியில் உலகின் 'நம்பர் 3' பெல்ஜியம் அணி, 21ஆவது இடத்தில் உள்ள துனிசியாவை எதிர்கொண்டது. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் அணித் தலைவர் ஈடன் ஹசார்டை, துனிசியாவின் சியாம் பென் யூசுப் 'பவுல்' செய்ய பெல்ஜியம் அணிக்கு 'பெனால்டி' வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் பெல்ஜியம் அணியின் தலைவர் ஹசார்ட் முதல் கோலடித்தார்.

### லூகாகு அபாரம்

பின், 16ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் மெர்டன்ஸ் 'பாஸ்' செய்த பந்தை ரோமிலு லூகாகு கோலாக மாற்றி 2-0 என, முன்னிலை பெற்றுக் கொடுத்தார். இந்நிலையில் 18ஆவது நிமிடத்தில் துனிசியாவுக்கு 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில் வக்பி காஸ்ரி தூக்கி அடித்த பந்தை டிலான் புரோன் தலையால் முட்டி கோலடித்தார்.

தொடர்ந்து அசத்திய பெல்ஜியம் அணிக்கு 'ஸ்ரொப்பேஜ்' நேரத்தில் (45+3வது நிமிடம்), பெல்ஜியத்தின் தோமஸ் மெனியர் 'பாஸ்' செய்த பந்தில் லூகாகு 2ஆவது கோலடித்தார். முதல் பாதி முடிவில் பெல்ஜியம் அணி, 3-1 என முன்னிலையில் இருநதது.



கோல்களின் மன்னன் லூகாகு

### ஹசார்ட் கலக்கல்

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய பெல்ஜியம் அணிக்கு 51ஆவது நிமிடத்தில் அல்டர்வெய்ரல்டு தூக்கி அடித்த பந்தை பெற்ற அணித் தலைவர் ஹசார்ட், துனிசியா கோல் காப்பாளர் பென் முஸ்தபாவை ஏமாற்றி, மீண்டும் கோலடித்தார். பின், 67ஆவது நிமிடத்தில் துனிசியாவின் அனிஸ் பத்ரி அடித்த பந்தை பெல்ஜிய கோல்காப்பாளர் கோர்டாய்ஸ் கச்சிதமாக பிடித்தார். இந்நிலை யில் 90ஆவது நிமிடத்தில் பெல்ஜியத் தின் டெலிமன்ஸ் 'பாஸ்' செய்த பந்தை மிக்கி பாட்ஷுவாய் கோலாக மாற்றினார். மனம் தளராமல் போராடிய துனிசியாவுக்கு 'ஸ்ரொப்பேஜ்' நேரத்தில் (90+3வது நிமிடம்) காஸ்ரி ஒரு கோல் அடித்து ஆறுதல் கொடுத்தார்.

ஆட்டநேர முடிவில் பெல்ஜியம் அணி, 5-2 என்ற கணக்கில் தொடர்ந்து 2ஆவது வெற்றியை பதிவு செய்தது. இதன்மூலம் 'ரவுண்ட் 16' சுற்றுக்கான வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது. தொடர்ச்சியாக 2 தோல்வியை சந்தித்த துனிசியா, அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழந்தது.

### முதன் முறை

பெல்ஜியம் அணி 5-2 என, துனிசியாவை வீழ்த்தியது. இதன்மூலம் உலக கிண்ண கால்பந்து வரலாற்றில் முதன் முறையாக ஒரு போட்டியில் 5 கோல்கள் அடித்தது.

### 4 கோல்

துனிசியாவுக்கு எதிராக 2 கோல் அடித்த பெல்ஜியத்தின் லூகாகு, இந்த சீசனில் இதுவரை 4 கோல் அடித்துள்ளார். ஏற்கெனவே இவர், பனாமா அணிக்கு எதிராக 2 கோல் அடித்திருந்தார். இதன்மூலம் இம்முறை அதிக கோல் அடித்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோவுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

### 5 கோல்

பெல்ஜியத்தின் லூகாகு, கடந்த 2014ல் 1. இம்முறை 4 என இதுவரை 5 கோல் அடித்துள்ளார். இதன்மூலம் உலக கிண்ண அரங்கில் அதிக கோல் அடித்த பெல்ஜியம் வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை மார்க் வில்மோட்சுடன் (1998ல் 2, 2002ல் 3 கோல்) பகிர்ந்து கொண்டுள்ளார்.

### 9ஆவது முறை

உலக கிண்ண கால்பந்து அரங்கில், போடடியின் முடிவு 5-2 என, 9ஆவது முறையாக கிடைத்துள்ளது. கடைசியாக 2014ல் பிரான்ஸ் 5-2 என, சுவிட்சர்லாந்தை வீழ்த்தி இருந்தது. முதன்முறையாக 1934ல் ஜேர்மனி 5-2 என, பெல்ஜியத்தை தோற்கடித்தது.

### 11 போட்டிகள்

உலக கிண்ண கால் பந்து லீக் சுற்றில், தொடர்ந்து 11 போட்டிகளில் (1998ல் 3 'சமன்', 2002ல் ஒரு வெற்றி, 2 'சமன்', 2014ல் 3 வெற்றி, 2018ல் 2 வெற்றி) தோல்வியை சந்திக்காமல் பெல்ஜியம் அணி வலம் வருகிறது.

### 13 போட்டிகள்


துனிசியா, உலக கிண்ண கால்பந்து அரங்கில் தொடர்ந்து 13 போட்டிகளில் (1978ல் 2 தோல்வி, 1998ல் ஒரு 'சமன்', 2 தோல்வி, 2002ல் ஒரு 'சமன்', 2 தோல்வி, 2006 ல் ஒரு 'சமன்', 2 தோல்வி, 2018ல் 2 தோல்வி) ஒரு வெற்றியை கூட பதிவு செய்யவில்லை

### 27 போட்டிகள்

பெல்ஜியம் - துனிசியா அணிகள் மோதிய போட்டி 5-2 என முடிந்ததன் மூலம், இம முறை விளையாடிய முதல் 27 போட்டிகளில் ஒரு முறை கூட 0-0 என 'சமன்' ஆக வில்லை. இதன்மூலம் உலக கிண்ண கால்பந்து வரலாற்றில், முதன்முறையாக இப்படி முதல் 27 போட்டிகள் கோல் எதுவுமின்றி 'சமன்' ஆனதில்லை. இதற்கு முன், 1954ல் சுவிட்சர்லாந்தில் நடந்த உலக கிண்ணத்தில் முதல் 26 போட்டிகள் 0-0 என, 'சமன்' ஆகவில்லை.

# நைஜீரியா 'நைஸ்'

ஐஸ்லாந்துக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில் அகமட் மூசா 2 கோலடித்து கைகொடுக்க நைஜீரிய அணி, 2-0 என்ற கோல் கணக்கில் முதல் வெற்றியை பதிவு செய்தது.



இரு கோல்களை அநாயசமாக அடித்த மூசா

ரஷ்யாவில், உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. வோல்கோகிராட் நகரில் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் உலகின் 'நம்பர் 48' நைஜீரியா அணி, 22ஆவது இடத்தில் உள்ள ஐஸ்லாந்து அணியை எதிர்கொண்டது. நைஜீரியா, தனது முதல் போட்டியில் குரோஷியாவிடம் தோல்வியடைந்திருந்தது. ஐஸ்லாந்து அணி, ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக 'சமன்' செய்திருந்தது. இதனால் இப்போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின.

ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் ஐஸ்லாந்து அணிக்கு கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பை சிகுர்ட்சன் வீணடித்தார். பின், 6ஆவது நிமிடத்தில் சிகுர்ட்சன் அடித்த பந்தை நைஜீரிய கோல்காப்பாளர் பிரான்சிஸ் உஜோகோ கச்சிதமாக பிடித்தார். இதேபோல 45ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில் சிகுர்ட்சன் அடித்த பந்து 'கோல் போஸ்ட்டில்' இருந்து விலகிச் செல்ல, ஐஸ்லாந்தின் கோல் வாய்ப்பு நழுவியது. நைஜீரிய அணியினர் அதிக நேரம் பந்தை தங்கள் 'வசம்' வைத்திருந்த போதிலும் கோலடிக்க முடியாமல் திணறினர். முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சமநிலை வகித்திருந்தது.

### மூசா அபாரம்

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட நைஜீரிய அணிக்கு 49 ஆவது நிமிடத்தில் விக்டர் மோசஸ் 'பாஸ்' செய்த பந்தை அகமட் மூசா கோலாக மாற்றினார். ஆட்டத்தின் 74ஆவது நிமிடத்தில் மூசா அடித்த பந்து 'கோல் போஸ்ட்டில்' பட்டுத் திரும்பியது. மீண்டும் கோலடிக்க முயற்சித்த இவர், பந்தை 'கோல் போஸ்ட்டுக்கு' மேலே தூக்கி அடித்தார். தொடர்ந்து அசத்திய மூசா, 75 ஆவது நிமிடத்தில் ஐஸ லாந்து கோல்காப்பாளரை ஏமாற்றி, 2 ஆவது கோல் அடித் தார்.

ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் ஐஸ்லாந்தின் ஆல்பிரோ பின்போகசனை, நைஜீரியாவின் டைரோன் எபியுஹி 'பவுல்' செய்தார். இதனை 'வீடியோ ரெப்ரல்' முறையில் உறுதிசெய்த 'மேட்ச ரெப்ரி, ஐஸ்லாந்துக்கு 'பெனால்டி' வாய்ப்பு வழங்கினார். ஆனால் இந்த வாய்ப்பை ஐஸ்லாந்தின் சிகுர்ட்சன், 'கோல் போஸ்ட்டுக்கு' மேலே தூக்கி அடித்து ஏமாற்றினார். கடைசி வரை போராடிய ஐஸ்லாந்து அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் நைஜீரிய அணி, 2-0 என்ற கணக்கில் முதல் வெற்றி பெற்றது. இதன்மூலம் 'ரவுண்ட 16' சுற்றுக்கான வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது.

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி, அணிக்கு 7பேர் 5 ஓவர்கள் கொண்ட இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 645 0755, 075 040 0867 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும். (க)


## சவூதி அரேபியாவில் வேலை வாய்ப்புக்கள்

المراعي Almarai

அல்மராய் கம்பனியானது உலகில் மிகப்பெரிய பால் பொருள் உற்பத்தி கம்பனியாக திகழ்வதுடன் 2016ம் வருடத்தில் மாத்திரம் US$ 4 பில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளது. அதன் ஊழியர் தொகையானது சுமார் 38,000 தை தாண்டியுள்ளது. அல்மராய் கம்பனி சகல அரபு நாடுகளுக்கும் தனது உற்பத்தி பொருட்களை விநியோகம் செய்கின்றது. மேலதிக விபரங்களுக்கு: www.almarai.com

**ட்ரேளர் சாரதிகள் LONG HAUL DRIVER Qty. 60**

கொடுப்பனவு : சவுதி றியால் 1,685 (சம்பளம் : சவுதி றியால் 1,005 + உணவு சவுதி றியால் 400 + மேலதிக கொடுப்பனவு 280)

செல்லுபடியான கனரக சாரதி அனுமதி பத்திரம், வயது 33 முதல் 47 வரை, ஆங்கில மொழியில் பேசுதல், எழுதுதல் மற்றும் வாசித்தல். 3 - 5 வருட ட்ரேளர் வாகன அனுபவம். அரபிய நாடுகளில் வேலை செய்த அனுபவம் விரும்பத்தக்கது.

**விற்பனையாளர் SALESMAN Qty. 60**

கொடுப்பனவு : சவுதி றியால் 1,900 (சம்பளம் : சவுதி றியால் 1,900 + மேலதிக கொடுப்பனவு)

செல்லுபடியான கனரக சாரதி அனுமதி பத்திரம், வயது 24 முதல் 35 வரை. 6 சக்கர டிரக் வண்டி ஓட்டும் அனுபவம் மற்றும் குறைந்தபட்சம் 2 வருட உணவு உற்பத்தி பொருட்கள் விநியோக விற்பனை அனுபவம் இருக்க வேண்டும்.

**உதவி விற்பனையாளர் SALES ASSISTANT Qty. 100**

கொடுப்பனவு : சவுதி றியால் 1,300 (சம்பளம் : சவுதி றியால் 900 + உணவு சவுதி றியால் 400 + மேலதிக கொடுப்பனவு)

செல்லுபடியான கனரக சாரதி அனுமதி பத்திரம், வயது 24 முதல் 30 வரை. உணவு உற்பத்தி பொருட்கள் விநியோக விற்பனையில் கிரேட்சு - பெட்டிகளை கையாளும் அனுபவம் குறைந்தது 2 வருடங்கள் இருத்தல் வேண்டும்.

**சமையல்காரர் COOK Qty. 20**

கொடுப்பனவு : சவுதி றியால் 2,062 (சம்பளம் : சவுதி றியால் 2,062 + மேலதிக கொடுப்பனவு)

வயது 25 முதல் 35 வரை. பிரசித்திபெற்ற பல்வகை உணவு உணவகத்தில் சமையல்காரராக குறைந்தபட்சம் 3 வருட காலம் வேலை செய்த அனுபவம்.

**குளிரூட்டி தொழில்நுட்பவியலாளர் REFRIGERATION TECHNICIAN Qty. 20**

கொடுப்பனவு : சவுதி றியால் 2,300 (சம்பளம் : சவுதி றியால் 1900 + உணவு - சவுதி றியால் 400 + மேலதிக கொடுப்பனவு)

வயது 27 முதல் 40 வரை. குளிரூட்டல் மற்றும் ஏர் கண்டிஷனிங் தொழில்நுட்பத்தில் 2 ஆண்டு டிப்லோமா சான்றிதல் இருக்க வேண்டும். குளிரூட்டப்பட்ட வாகனத்தின் குளிரூட்டும் அலகுகளில் 6 - 7 ஆண்டுகள் அனுபவம். குளிர்பதன அமைப்பின் மின் மற்றும் இயந்திர இரு கூறுகளையும் சரிபார்க்க முடியுமாக இருத்தல் வேண்டும்.

**மெக்கானிக் DIESEL MECHANIC Qty. 10**

கொடுப்பனவு : சவுதி றியால் 1,800 (சம்பளம் : சவுதி றியால் 1400 + உணவு - சவுதி றியால் 400 + மேலதிக கொடுப்பனவு)

வயது 24 முதல் 35 வரை. பெற்றோலியம், டீசல் மெக்கானிக் அல்லது 2 வருட ஆட்டோமொபைல் பாடத்திட்டத்தில் 2 ஆண்டு டிப்லோமா - சான்றிதல் இருக்க வேண்டும். கனரக டீசல் என்ஜின்கள், கனரக வேளாண்மை, தொழில்துறை உபகரணங்கள் மற்றும் பெரிய அளவிலான மோட்டார் தொழிற்சாலைகளில் குறைந்தபட்சம் 3 ஆண்டு அனுபவம்.

**ஓடோ எலக்ட்ரீஷியன் AUTO ELECTRICIAN Qty. 10**

கொடுப்பனவு : சவுதி றியால் 1,800 (சம்பளம் : சவுதி றியால் 1400 + உணவு - சவுதி றியால் 400 + மேலதிக கொடுப்பனவு)

வயது 24 முதல் 35 வரை. குறைந்தபட்சம் சாதாரணதர பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆட்டோமொபைல் எலக்ட்ரானிக்கில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் அனுபவம், பராமரிப்பு, தவறுகளை அடையாலம் காணுதல் மற்றும் மோட்டார் வாகனங்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்களில் மின் வயரின், கணினி அடிப்படையிலான உபகரணங்களை நிறுவுதல்.

**தீ ஆய்வாளர் FIRE INSPECTOR Qty. 05**

கொடுப்பனவு : சவுதி றியால் 4,560 (சம்பளம் : சவுதி றியால் 4,560 )

வயது 25 முதல் 38 வரை. தீ கண்டறிதல் மற்றும் அடக்குமுறை நிலையை கையாளும் பல பன்னாட்டு பணியாளர்களுடன் வேலை செய்த குறைந்தபட்சம் 5 வருட அனுபவம். தீ சம்பவம் மற்றும் விபத்து அறிக்கை, தீ சண்டை திறன்கள். ஆங்கில மொழியில் பேசுதல், எழுதுதல் மற்றும் வாசித்தல்.

வசதிகள் : தங்குமிட வசதி, போக்குவரத்து, மருத்துவ வசதி, ஆயுள் காப்புறுதி, இலவச சீருடை. வாரம் 6 நாள் வேலை. 8 மணித்தியால நாளாந்த வேலை. 2 வருட ஒப்பந்தம். 33 நாட்கள் வருடாந்த விடுமுறையுடன் இலவச விமான டிக்கட்.

வெளிநாட்டு பிரதிநிதிகளால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை விரைவில்

மேலதிக விபரங்களுக்கு : 077 4435810 / 077 4438361 / 077 4435257 / 077 4435735

Send your CV's to jobs@leadermanpower.lk

SR 1 = Rs. 42 (Subject to change)

AL/Advt/3124/0002/18

LEADER MANPOWER

Government Approved Manpower Consultant and Air Ticketing Agent

205-1/1 | Abdul Hameed Building | 1st Floor | 1st Division | Maradana | Colombo - 10 | Sri Lanka

License No: 3124

+94 11 4329602 | +94 11 4329603 | +94 11 4329604 | +94 11 4329605

jobs@leadermanpower.lk www.leadermanpower.lk

# டெங்கு நுளம்பு பெருக ஏதுவான சூழல்

## பொதுச் சுகாதார பரிசோதகருக்கு உயிரச்சுறுத்தல் விடுத்தவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறைப் பகுதியில் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்துள்ள நிலையில் பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.சுதாகரனும் பருத்தித்துறை பிரிவு 2 பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் ரொனால்டும் இணைந்து நுளம்பு பெருகும் இடம் என அடையாளப்படுத்தப்பட்ட நகர்ப் பகுதியிலுள்ள இடங்களை நேற்றுப் பரிசோதித்தனர்.

இதன்போது வாய்க்கால் ஒன் றினுள் ஏராளமான நுளம்புக் குடம்பிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதுபற்றி ஏற்கனவே கால அவகாசம் வழங்கிய அறிவித்தல் சம்பந்தப்பட்ட கால்வாயின் உரிமையாளருக்கு வழங்கப்படிருந்தும் தொடர்ந்தும் நுளம்புக்குடம்பிகளோடு சூழலை வைத்திருந்து உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நுளம்புகளால் பரவும் நோய்களை ஏற்படுத்த ஏதுவான குற்றம்புரிந்தமை தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட முற்படுகையில் சம்பந்தப்பட்ட நபர் கடமையைச் செய்யவிடாது இடையூறு விளைவித்ததோடு பொதுச் சுகாதரப் பரிசோதகர்களுக்கு பகிரங்கமாக உயிரச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இது குறித்து உடனடியாக நகர சபை தவிசாளர், செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததோடு பருத்தித்துறை பொலிஸிலும் முறைப்பாடும் செய்யப்பட்டது.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு அனைவரும் பிரசன்னமாகி சம்பந்தப்பட்ட நபரை கைதுசெய்யுமாறு வலியுறுத்தியதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-60)

# கொடிகாமம் அம்மன் ஆலயத்தில் ஐம்பொன் விக்கிரகம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பெரிய நாவலடி சிவகாமி அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் மூலஸ்தானத்திலிருந்த ஐம்பொன்விக்கிரகம், அம்மனின் நகை, உண்டியலில் இருந்த பணம் என்பவற்றை திருடிச் சென்றனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் கொடிகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)

# கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் முதியோருக்கான கொடுப்பனவு வழங்கல்

(கரணவாய்)

அஞ்சல் அலுவலகம் ஊடாக முதியோருக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார்.

அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக தபாலகங்கள் மூடப்பட்டுள்ளதால் முதியோர்களுக்கான கொடுப்பனவைதமது பகுதிகிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதி முதியவர்கள் தமக்கு அருகிலுள்ள சமுர்த்தி வங்கிக் கிளைகளில் உதவிப் பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-60)


## கண்ணீர் அஞ்சலி

அமரர். பொன்னையா பாலகிருஷ்ணன்



கைகொடுக்கும் நண்பர்கள் நிறுவனத்தின் முன்னாள் தலைவர்
பொன்னையா பாலகிருஷ்ணன் (சின்னப்பாலு)
அவர்களின் மரணச் செய்தி அறிந்து எமது நிறுவனத்தினரின் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இல.62, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
கைகொடுக்கும் நண்பர்கள் நிறுவனம்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

உருவமாக 1926 - 04 - 03

ஒளியாக 2014 - 07 - 08



## சின்னட்டியன் பசுபதி

திதி: வளர்பிறை ஏகாதசி :24.06.2018

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தன அப்பா. உம் நினைவுகள் எம் நெஞ்சில் நீங்காது நிலைத்து விட்டது. பாசமான உம் குரல் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்க பரவசமடைகின்றோம். நாவலம்பதி ஞானவயிரவர் ஆலயத்தின் சீரிய முகாமையாளராக மூன்று தசாப்த காலங்கள் தொடர்ந்து இறைபணியாற்றிய உத்தமரே. தூயஅன்பின் அடையாளமே தேவைகளை நிறைவேற்றிய தெய்வமே. பாரினில் நாம் வாழ்வதற்கு வாழ்வைக் கற்றுத் தந்த உத்தமரே. தேம்பித் தேம்பி நித்தம் உம் நினைவில் தேகம் குலுங்குகின்றோம்- வாழ்வில் எமக்கிருக்கும் ஒரே ஆசை மீண்டும் நீங்கள் எமக்கு அப்பாவாக வந்துதிக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம் இறைவனிடம். வருவீரோ எம் அன்பு அப்பாவே.

வளர்பிறை, ஊரெழு கிழக்கு.

ஊரெழு கிழக்கு

## அமரர் சின்னட்டியன் பசுபதி

ஞாபகார்த்த நிதியம்

## மூன்றாம் ஆண்டு நிறைவு விழா

காலம்:24.06.2018 ஞாயிறு பகல் 10.30 மணி
இடம்:ஊரெழு நாவலம்பதி ஞானவயிரவர் பொது நோக்கு மண்டபம்
தலைமை: திரு.மு.ஐங்கரன் (ஆசிரியர், பூநகரி விநாசியோடை அ.த.க.பாடசாலை)

பிரதம விருந்தினர்: உயர்திரு. நாகலிங்கம் வேதநாயகன்
(அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்
சிவஸ்ரீ தி.கிருஸ்ணமூர்த்திக் குருக்கள்
(விசேட குரு நாவலம்பதி ஞானவயிரவர் ஆலயம்)

பேராசிரியர் க.தேவராஜா
(முன்னாள் பீடாதிபதி, முகாமைத்துவத்துறை வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.அன்ரன் பிறேமதாஸ் (அதிபர், ஊரெழு கணேசா வித்தியாசாலை)
திரு.ம.இரங்கநாதன் (பகுதித்தலைவர், இடைக்காடு மகா வித்தியாலயம்)

கௌரவ விருந்தினர்கள்
திரு.ம.ஜெ.ஜெயகுமரன் (கிராம உத்தியோகத்தர், ஊரெழு)
திரு.ஐ.மகேந்திரன் (தலைவர், வளர்பிறை சனசமூக நிலையம்)
செல்வி.சுரேஸ்வரன் சரண்ஜா (விவசாய போதனாசிரியர், உடும்பிராய்)
திரு.இ.தர்மகுலசிங்கம் (தலைவர், ஞானவயிரவர் திருக்கோவில்)
திரு.இ.மன்மதராசன் (தலைவர், சர்வதேச ஒன்றியம், ஊரெழு)
விருந்தினர்களின் உரையுடன் பாடசாலை, ஆலயம், சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு நிதி அன்பளிப்பு வழங்குவதுடன் 2017ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணம்/உயர்தரம் பரீட்சைகளின் சாதனையாளர்களுக்கு நிதி வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(4636)

- அமரர் சின்னட்டியன் பசுபதி நிதியம் -


## இராசி பலன்

**மீனம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், முயற்சிகளில் தடை, தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, விரயங்கள் கூடும் நாள்.

**மேடம்:** விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகுலமுண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வாகன சுகமுண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** பெற்றோர் மீது பிரியம் கூடும், விருப்பங்கள் நிறைவேற, வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்; சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| | இராசி பலன் | | ராகு, சுக், புத |
| செவ், கேது | சந்திராஷ்டமம் ரேவதி இரவு 1.20 மணிக்கு. விருச்சிகம் | | |
| சனி | | குரு, சந் | |

24.06.2018
ஆனி 10; ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 6.51 மணிவரை
சுவாதி காலை 6.27 மணிவரை
சுபநேரம் 8.55-10.25 மணிவரை
இராகுகாலம் 4.25-5.55 மணிவரை
ஏகாதசி விரதம்

வள்ளுவன்

**தனுசு:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்; அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**துலாம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், திடீர் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** மக்கள் போற்றும் வாழ்வமைய கண்ணனை வழிபட வேண்டிய நாள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.



நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சின் நிதி உதவியுடன் வலி.வடக்கு பலாலியில் மரக்கறிகள் மற்றும் பழங்கள் கொள்வனவு நிலையம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சின் பிராந்திய செயலாளரும், பிராந்திய அமைச்சருமான ஜென்ஸ் புரோலிஜ் ஹோல்ட்டே உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-சக்தி)

# தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுவிக்க இந்தியா வலியுறுத்த வேண்டும்

## யாழ்.இந்தியத் துணைத் தூதுவரிடம் கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரனை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து ஆனந்தசுதாகரனின் விடுதலை தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் கலந்துரையாடினார்.

தாயை இழந்தும், தந்தை சிறையில் அடைக்கப்பட்டதாலும் அநாதரவாக்கப்பட்டு, வயதான பேர்த்தியாருடன் வாழும் இரு சிறுவர்களின் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பும் மற்றும் இரு சிறார்களின் மன உளைச்சல் எதிர்காலத்தில் பாதிக்காத வகையில் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை ஜனாதிபதியின் கருணை அடிப்படையில் விடுவிக்கப் படவேண்டுமென வடக்கு, கிழக்கு, தெற்கு,மேற்கு என இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் வாழும் தமிழ் மற்றும் சமூக, அரசியல் அமைப்புக்கள் ஏராளமான கையெழுத்துப் போராட்டங்களை நடத்தியிருந்தன. அதனைத் தொடர்ந்து ஆனந்த சுதாகரன் கடந்த தமிழ், சிங்கள புத்தாண்டளவில் விடுவிக்கப்படுவார் என்ற செய்தியும் ஜனாதிபதியிடமிருந்து வெளிவந்தது.

எனினும் அவரது விடுதலையை உத்தரவாதப்படுத்த மேலும் வலியுறுத்தல்கள் தேவை என்ற அடிப்படையில் பிள்ளைகளை நினைத்து தினமும் சிறையில் தவித்துக் கொண்டிருக்கும் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கோரி கடந்த சில மாதங்களாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் வட மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன், வடமாகாண கல்விச் சமூகமாகிய கல்விமான்கள், அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரிடமிருந்து 3 இலட்சம் கையெழுத்துக்கள் மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனால் பெறப்பட்டு நேரடியாக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து 22.06.2018 அன்று 3 இலட்சம் கையெழுத்துக்கள் மாகாணக் கல்வி அமைச்சர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைக் கடிதங்களுடன்கூடிய மனு யாழ். இந்தியத் துணைத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. தற்போது தடுப்பிலுள்ள ஆனந்த சுதாகரன் ஆயுதப்பயிற்சி பெற்ற ஒருவர் அல்லாது ஒரு அரசியல் கைதியாகவே இருப்பதால் அவரது குழந்தைகள் அநாதையாக்கப்படாது இருப்பதற்காக, இந்திய அரசு அவரது விடுதலையில் கவனம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவ் விடயத்தினை இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவரின் ஊடாக பாரதப் பிரதமரிடம் தெரியப்படுத்தி இலங்கை அரசிடம் சிறுவர்களின் எதிர்காலத்தையும் நலனையும் கருத்தில் கொண்டு இவ்விடயம் பற்றி கவனம் எடுப்பதாக வட மாகாணக் கல்வி அமைச்சரிடம் நம்பிக்கையூட்டும் முகமாக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார். (இ-7)

## இணுவில் திருப்பதியில் மஹாலட்சுமி தாயார் குடமுழுக்குத்திருமுகம்

(யாழ்ப்பாணம்)



ஆந்திராவிலிருந்து மஹா லட்சுமி திருவுருவச் சிலை இணுவில் திருப்பதி திரு வேங்கடேஸ்வரர் ஆலயத் திற்கு கொண்டு வரப்பட் டுள்ளது.

இத் திருவுருவச் சிலை க்கு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை பாலாபிஷேகம் நடைபெறும்.

மறுநாள் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து லட்சுமி நாராயணன் திருக்கல்யாணம், கருவறைப் பிரவேசம், மஹா லட்சுமி நாராயணர் ஏகாந்த சேவை என்பன இடம்பெறும். (இ)

## தகவல் தொழில்நுட்ப துறை குறித்து யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் (JMF), "வடமாகாண பொருளாதார அபிவிருத்திக்கு தகவல் தொழில்நுட்ப துறை" பற்றிய கலந்துரையாடல் நிகழ்வினை ஒழுங்கு செய்துள்ளது. இந்நிகழ்வானது எதிர்வரும் புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவன ICTA தலைவர் பேராசிரியர் ரோகான் சமரஜீவ கலந்து கொண்டு சிறப்புரை வழங்கவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி யாழ்.முகாமையாளர் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

# மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமையளித்து அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்

## முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் ஒவ்வொன்றும் மக்களின் தேவைகளுக்கேற்ப முன்னுரிமை அடிப்படையிலும் தேவைகளை அறிந்தும் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய ஒரு பொறிமுறையை மேற்கொள்வதனூடாகவே யாழ்.மாநகரின் அபிவிருத்திப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் ஆனோல்ட் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது யாழ். மாநகரின் உள்ளக வீதிகள் புனரமைப்பு, மின்சார விளக்குகள் பொருத்துதல், சனசமூக நிலையங்கள் அபிவிருத்தி ஆகிய தேவைப்பாடுகளுக்காக 65 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்காக சபையின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டது.

இதன்போது கருத்துத்தெரிவித்த முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா சபையிலுள்ள 45 உறுப்பினர்களின் பங்களிப்புடன் இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதுடன் அவை தேவைகளை அறிந்தும் முன்னுரிமை அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கு முதல்வர் ஆனோல்ட் தெரிவுகளின் அடிப்படையிலேயே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தமையால் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அபிவிருத்திகள் யாவும் முன்னுரிமையின் அடிப்படையிலும் மக்களின் தேவைகள் கருதியுமே மேற்கொள்வது நன்மையளிக்கும் எனச் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை மாநகர சபையில் ஒருவர் பேசும் போது அதனைக் குறுக்கீடு செய்து குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கையை தாம் மாகாண சபையை பார்த்தே பழகியதாகவும் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

சுற்றுலா நிறுவனத்திற்கு பண்ணை கடற்கரை பகுதியை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக நிபந்தனைகளை உறுப்பினர் சட்டத்தரணி மணிவண்ணன் ஏனைய சபை உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருந்தார்.

இதன்போது ஏனைய சபை உறுப்பினர்கள் அதற்கு குறுக்கீடாக தமது கருத்துக்களையும் கூறிக்கொண்டிருந்தனர். இதற்கு முதல்வர் ஆனோல்ட், ஒருவர் பேசுவதை முற்றாக செவிமடுத்த பின்னர் ஏனையவர்கள் பேச வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இதன்போது முன்னாள் மாநகர மேயரும் தற்போதைய உறுப்பினருமான யோகேஸ்வரி பற்குணராஜா, மேயர் கூறுவது மாகாண சபைகளிலேயே கடைப்பிடிக்கப்படுவதில்லை அதனை நாம் தொலைக்காட்சிகளில் பார்த்துள்ளோம், பிறகு எவ்வாறு இங்கே கடைப்பிடிப்பது எனக் கேள்வியெழுப்பினார். இதன்போது உறுப்பினர் றெமிடியஸ் இது மாகாண சபையைப் பார்த்து பழகிய பழக்கம் தான் எனத் தெரிவித்தார். (இ-4)

## மூன்றாவது மன்ற யாகம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் வாரவழிபாட்டு மன்றம் மேல்மருவத்தூர் சுயம்பு ஆதிபராசக்தியின் மூன்றாவது மன்றயாகம் எதிர்வரும் புதன்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்.கல்வியங்காடு மன்றத்தில் இடம்பெறும். (இ)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவுவிழா "நல்ல பிள்ளைகளை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை நாயன்மார்கட்டு நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு சமூகவியல், ஆன்மீக நாட்டம், நேரமுகாமைத்துவம், சுயகற்றல் போன்ற விடயங்கள் குறித்து கற்பிக்கப்படும். (இ)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான தென்னாபிரிக்க தூதுவர் எச்.ஈ.ரொபினா மார்க்ஸ் நேற்று யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்ற மறைந்த முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் நூறாவது பிறந்த தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். தொடர்ந்து பொது நூலகத்திற்கான நூல்களை கையளித்ததோடு, பொது நூலகத்தில் நெல்சன் மண்டேலாவின் நினைவுகள் தாங்கிய உருவப்படங்களையும் திறந்து வைத்தார். இந் நிகழ்வுகளில் யாழ்.மாநகர சபையின் முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அயூப் அஸ்மின், யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், யாழ்.பொது நூலக பிரதம நூலகர் சுகந்தி சதாசிவமூர்த்தி ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-உ.சாளின்)

# கடலட்டை பிடிப்போரை நாம் சிறை பிடிப்போம்!

## வடமராட்சி மீனவர்கள் எச்சரிக்கை

(கரணவாய்)

கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினர் கடலட்டை பிடிப்போர் விடயத்தில் சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாது விட்டால் சட்ட விரோதமான முறையில் கடலட்டை பிடிப்போரை சிறை பிடிக்க வேண்டிவரும் என வடமராட்சி கிழக்கு மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடிப்போர் விடயத்தில் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அண்மையில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு முன்பாக மறியல் போராட்டம் இடம்பெற்ற போது தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அவர்கள் உரிய முறையில் சட்ட நடவடிக்கை எடுக்காததாலேயே சட்ட விரோதமான முறையில் கடலட்டை பிடிப்போரை மீனவர்கள் சிறைபிடித்தனர்.

நீரியல் வளத்திணைக்களத்தினர் கடலட்டை பிடிப்போர் விடயத்தில் சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாது விட்டால் சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடிப்போரை சிறைபிடிப்போம் என வடமராட்சிப்பகுதி மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ-6C)

# அஞ்சல் பணியாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## அமைச்சர் ஹலீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அஞ்சல் பணியாளர்களின் பிரச்சினைக்குத்தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் மற்றும் அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

சம்பள நிர்ணய ஆணைக் குழுவின் தலைவருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்கு அமைய, அஞ்சல் பணியாளர்களின் இரண்டு பிரதான கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவர்கள் அதனை உடனடியாக அமுல் படுத்துமாறு கோருகின்றனர்.

ஆனால், எந்தவொரு நிறுவனமும் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டால், அதனை அப்போதிலிருந்தே அமுல் படுத்த முடியாது என அஞ்சல் சேவைகள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவற்றில் நடைமுறை ரீதியான விடயங்கள் உள்ளன.

சம்பள நிர்ணய ஆணைக் குழு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தான் கூடி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும். இதையடுத்து, அந்தத் தீர்மானத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு நடைமுறை ரீதியான விடயங்கள் உள்ளன.

எனவே, அஞ்சல் தொழிற்சங்கங்கள் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை என அஞ்சல் மற்றும் அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது கோரிக்கைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி அஞ்சல் பணியாளர்கள் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பு நேற்று 13ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்நிலையில், அவர்கள் நேற்று மத்திய அஞ்சல் பரிமாற்றத்திற்கு அருகில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பணிப்புறக்கணிப்பு காரணமாக நீதித்துறை பணிகளுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பதற்கான மாற்றுவழியை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து விளக்கமளித்துள்ள அதன் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி சில்வா, நீதிமன்றதினால் பிறப்பிக்கப்படுகின்ற அறிவித்தல்கள் பிரதிவாதிகளுக்கு உரிய காலத்திற்குள் கிடைக்கப் பெற வேண்டும்.

இந்த நிலையில், அஞ்சல் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்வதனால் அந்தப் பணிகளில் பாதிப்பு ஏற்படக் கூடும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த பணிப் புறக்கணிப்பு அடுத்த வாரமும் தொடருமாயின், நீதிச் சேவைகள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் பதிவாளர்களுடன் கலந்துரையாடி இதற்கான மாற்று வழியொன்றை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

**தேவை**

Air Ticketing இல் அனுபவமுள்ளவர்கள் மற்றும் Marketing செய்யக்கூடியவர்களும் தேவை.

தொடர்புகளுக்கு:0766911083

**(20L)குடிநீர் விநியோகம்**

போத்தலில் அடைத்த சுத்தமான குடிநீர் (Nature Green) உங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும்.

விலை 200/=

தொடர்புகளுக்கு:-077 254 3253

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1ஆம் பாதம்<br>கி.பா: சூரி செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7768 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1ஆம்பாதம்<br>கி.பா: செவ் 1 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/8167 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 51 செவ் 4 இல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்:BSc அரசதொழில்<br>தொ.இ: B/7769 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4ஆம் பாதம்<br>கி.பா: 16<br>தகைமை/தொழில்: BPT இயன் மருத்துவர்<br>தொ.இ: G/8171 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் விதவைகளும் ஏற்கப்படும்<br>வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7771 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4 ஆம் பாதம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 149cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/8173 |
| பிறப்பு: 1984 RC கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: சதயம் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L மலேசியா<br>எதிர்பார்ப்பு: சைவசமயமும் ஏற்கப்படும் வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7772 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1ஆம்பாதம்<br>கி.பா: 51 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: உயர்கல்வி அமெரிக்கா பிரஜாவுரிமை<br>தொ.இ: G/8135 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

**IELTS™**
English for International Opportunity



REGISTER FOR FREE

ஏன்? எப்படி? யாருக்கு?
இலவச விளக்கமளிப்பு
By
British Qualified Lecturer with teaching experience in UK & Maldives
British Council Alumni Member.
PTLLS(UK), PGD(Bradford,UK)
on
30.06.2018 (10.00 am & 11.00 am)

COURSES BY THE LECTURER
IELTS / A1, B1 – for student visa & migration to UK, USA, Canada, NZ & Aus
General English – for Nurses, Bank staff, University entrants, Teachers
Advanced Writing – for Law College students
- வார இறுதி நாள் வகுப்புக்கள்
- ஒவ்வொரு பிரிவிலும் 15 பேர் மாத்திரமே
- தவணை முறையிலான குறைந்த கட்டணம்
- பரீட்சைக்கு பதிவு செய்யும் அனைத்து சேவைகளும் வழங்கப்படும்

Learn English the fast & Easiest way; Success Guaranteed

அன்றைய தினம் இணைபவர்களுக்கு
COME & JOIN US 30% OFF
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகை தரவும்
YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கன்னாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

# மாத்தறையில் கொள்ளை

# பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சுட்டுப்படுகொலை

## கைக்குண்டு வீச முற்பட்டாராம்




(மாத்தறை)

மாத்தறையிலுள்ள தங்க ஆபரண விற்பனை நிலையத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கொள்ளையர்களில் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மாத்தறை நகரில் அமைந்துள்ள தங்க ஆபரண விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் 7 பேர் அடங்கிய கொள்ளைக் கும்பலொன்று கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட நிலையில், பொலிஸாருக்கும் கொள்ளையர்களுக்குமிடையில் பரஸ்பர துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றது.

இதன்போது மூன்று பொலிஸ் அதிகாரிகள் உட்பட ஐவர் காயமடைந்தனர். இதில், ஒரு பொலிஸ் அதிகாரி சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, காயமடைந்த நிலையில் தலைமறைவாகியிருந்த கொள்ளையர்களில் மூவர், காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட பிரபல பாதாள உலகக்குழுத் தலைவரான கொஸ்கொட தாரக்க கராபிட்டிய வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரது சகோதரரான மகேஷ் மற்றும் மேலும் ஒருவரும் குறித்த வைத்தியசாலையில் பொலிஸாரின் பாதுகாப்பில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்நிலையில், மாத்தறை தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது நேற்று முன்தினம் வெயாங்கொட பகுதியில் வைத்து சாமர இந்திரஜித் என்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரான சாமர இந்திரஜித் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார்.

இவர் தனது பையில் இருந்த கைக்குண்டொன்றின் மூலம் பொலிஸாரைத் தாக்க முயற்சித்துள்ள நிலையில், உடனடியாக செயற்பட்ட பொலிஸார் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ள நிலையில், அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாமர இந்திரஜித் என்பவர் அண்மையில் அத்தனகல்லையில் இடம்பெற்ற இசை நிகழ்வொன்றின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் சந்தேக நபர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கொள்ளையர்கள் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒரு தானியங்கி துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளொன்று கொஸ்கொட தாரகவின் தாயின் பெயரில் பதிவாகியுள்ள நிலையில், அவரது தாயாரும் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

மாத்தறை கொள்ளைச் சம்பவத்தில் ஏழு பேர் ஈடுபட்டதுடன் அவர்களில் நால்வர் இதுவரை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த சந்தேக நபர்கள் அனைவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதியை வரவேற்ற பிரதமர்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மங்கள சமரவீர, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் இணைந்து வரவேற்றனர்.

எண்டபிரைஸ் ஸ்ரீலங்கா, எனும் தொனிப் பொருளில் அரசாங்கத்தின் இலகு வட்டிக் கடன் திட்ட அறிமுக நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ள வருகை தந்த ஜனாதிபதியே இவ்வாறு வரவேற்கப்பட்டார்.

அரசாங்கத்துக்குள் நெருக்கடி. பிரதமர் ஒரு கோணத்தில் செயற்படுகின்றார். ஜனாதிபதி இன்னொரு கோணத்தில் செயற்படுகின்றார். இருவருக்கிடையிலும் முறுகல் நிலைமையுள்ளது.

இரு பெரும் கட்சிகளினதும் தலைவர்களுக்கிடையில் காணப்படும் முறுகல் நிலை அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை பாரியளவில் பாதித்துள்ளதாக மகா சங்கத்தினர் கூட சுட்டிக்காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 06.2018 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1509 - எட்டாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1571 - மணிலா நகரம் அமைக்கப்பட்டது.
- 1664 - நியூ ஜேர்சியில் குடியேற்றம் ஆரம்பமானது.
- 1812 - ரஷ்யாவினுள் ஊடுருவும் முயற்சியில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் நேமன் ஆற்றைக் கடந்தனர்.
- 1849 - அமெரிக்கப் பெண்மணியான எலிசபெத் பிளாக்வெல் என்பவரே அமெரிக்காவில் முதன் முதலாக மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணியாவார். அவர் இப்பட்டத்தினை 1849 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.
- 1860 - புளோரன்ஸ் நைற்றிங்கேலின் எண்ணக் கருக்களுக்கமைய முதலாவது தாதிகள் பயிற்சி நிலையம் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.
- 1938 - 450 மெட்ரிக் தொன் எடையுள்ள விண்கல் பென்சில்வேனியாவின் சிக்கோராவில் வீழ்ந்தது.
- 1975 - அமெரிக்க விமானம் நியூயோர்க்கில் வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 1981 - 17 ஆண்டுகளாக உலகின் மிக நீளமான தொங்கு பாலமாக இருந்த ஹம்பர் பாலம் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.
- 1983 - அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீராங்கனை சாலி றைட் தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு பூமி திரும்பினார்.
- 1997 - ஈழப்போர்: பன்றிக்கெய்தகுளம், பனிக்கநீராவிப் பகுதியில் ஜெயசிக்குறு படையெடுப்பின் போது இடம்பெற்ற தாக்குதலில் 200 இராணுவத்தினரும் 90 விடுதலைப்புலிகளும் கொல்லப்பட்டனர்.
- 2002 - தான்சானியாவில் இடம்பெற்ற பெரும் தொடருந்து விபத்தில் 281 பேர் கொல்லப்பட்டனர்.
- 2004 - நியூயோர்க்கில் மரண தண்டனை சட்டபூர்வமற்றதாக்கப்பட்டது.
- 2007 - கராச்சியில் இடம்பெற்ற மழை மற்றும் சூறாவளியில் 200க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

- 1542 - சிலுவையின் புனித யோவான், எசுப்பானியப் புனிதர். (இ. 1591)
- 1619 - ரைக்லாவ் வொன் கூன்சு, ஒல்லாந்த இலங்கையின் ஆளுநர். (இ. 1682)
- 1883 - யோன் மெட்சிங்கர், பிரான்சிய ஓவியர். (இ. 1956)
- 1885 - தாரா சிங், சீக்கிய அரசியல், சமயத் தலைவர். (இ. 1967)
- 1907 - கா. அப்பாத்துரை, தமிழகத் தமிழறிஞர். (இ. 1989)
- 1915 - பிரெட் ஆயில், ஆங்கிலேய வானியலாளர். (இ. 2001)
- 1921 - கண்ணதாசன், தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர். (இ. 1981)
- 1928 - எம். எஸ். விஸ்வநாதன், தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர். (இ. 2015)
- 1929 - கரோலின் சூமேக்கர், அமெரிக்க வானியலாளர்.
- 1937 - அனிதா தேசாய், இந்திய-அமெரிக்க எழுத்தாளர்.
- 1938 - நீல. பத்மநாபன், தமிழக எழுத்தாளர்.
- 1953 - வில்லியம் ஈ. மோர்னர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர், இயற்பியலாளர்.
- 1966 - விஜயசாந்தி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை, அரசியல்வாதி.
- 1968 - போரிசு கெல்பண்ட், உருஷ்ய-இசுரேலிய சதுரங்க வீரர்.
- 1974 - மதுபாலகிருஷ்ணன், தென்னிந்தியத் திரைப்படப் பாடகர்.

### இறப்புக்கள்

- 1564 - ராணி துர்காவதி, கோண்டுவானா அரசி. (பி. 1524)
- 1908 - குரோவர் கிளீவ்லாண்ட், அமெரிக்காவின் 22 ஆவது, 24ஆவது அரசுத்தலைவர் (பி. 1837)
- 1947 - தர்மானந்த தாமோதர் கோசாம்பி, இந்தியப் பௌத்தப் பேரறிஞர். (பி. 1876)
- 1957 - பிரான்டிசேக் குப்கா, செக் நாட்டு ஓவியர். (பி. 1871)
- 1963 - மரிய குவாதலூபே கார்சியா சவாலா, மெக்சிக்கோ புனிதர். (பி. 1878)
- 1992 - மகாராஜபுரம் சந்தானம், தமிழக கர்நாடக இசைப் பாடகர். (பி. 1928)
- 2006 - சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், தமிழக எழுத்தாளர், திரைப்பட விமர்சகர். (பி. 1910)
- 2007 - கிறிஸ் பென்வா, கனடிய மற்போர் வீரர். (பி. 1967)
- 2008 - லியோனிடு ஹர்விக்ஸ், நோபல் பரிசு பெற்ற உருஷ்ய-அமெரிக்க பொருளியலாளர். (பி. 1917)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 120 | 100 | 160 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 120 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 400 | 400 | 250 |
| தக்காளி | 300 | 300 | 280 | 280 | 260 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 50 | 40 | 40 |
| கோவா | 200 | 180 | 160 | 200 | 120 |
| கரட் | 250 | 220 | 320 | 400 | 250 |
| பூசணி | 40 | 20 | 30 | 40 | 50 |
| புடோல் | 120 | 120 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 35 | 80 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 100 | 180 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 95 | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 400 | 220 | 280 | 320 | 280 |
| வெண்டிக்காய் | 130 | 90 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 120 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 150 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 250 | 280 | 360 | 400 | 300 |
| பீற்றூட் | 140 | 80 | 160 | 200 | 100 |
| கறிமிளகாய் | 300 | 120 | 240 | 400 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 320 | 400 | 320 | 500 |
| போஞ்சி | 320 | — | 400 | 320 | 220 |
| கத்தரி தம்புள்ள | 180 | — | — | 80 | 140 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 80 | 90 | 120 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 25-30 | 60 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 160 | 160 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | — | 140 | 300 | 250 |
| முள்ளங்கி | 140 | 40 | 120 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 60 | 60 | 80 | 100 | 100 |

# அதிகாரப்பகிர்வு அமுலானால் நிரந்தரத் தீர்வு காணமுடியும்

## நோர்வே அமைச்சரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு உரிய முறையில் அமுல்படுத்தப் பட்டால் பொருளாதார, சமூகப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் எனவும் காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழ் மக்களின் போராட்டம் ஆகியவற்றுக்கு தீர்க்கமான நிலைப்பாட்டை அரசு எடுக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கை வந்துள்ள நோர்வேயின் அபிவிருத்தி விவகாரங்களுக்கான இராஜாங்க செயலாளர் ஜென்ஸ் புரோலிஜ்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவிற்குமிடையில் பாராளுமன்றிலுள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம் பெற்றது.

நாட்டில் நிலவும் தற்கால அரசியல் நிலைகுறித்து செயலாளரை தெளிவுபடுத்திய எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த காலங்களில் இலங்கை தொடர்பில் விசேடமாக இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றினை எட்டுவது தொடர்பில் நோர்வே அரசாங்கத்தின் பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கும் தொடர்பில் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன் மக்கள் பிரதிநிதிகளாக எம்முன்னே எழுந்துள்ள இந்த சந்தர்ப்பத்தினை உதாசீனம் செய்ய முடியாது என தெரிவித்த அதேவேளை, இந்த முயற்சிகள் தோல்வியுறும் பட்சத்தில் அது மேலும் மாக்களிடையே பிரிவினையை உருவாக்கும் எனவும் வலியுறுத்தினார். மேலும் புதிய அரசியல் யாப்பு நிறைவேறுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்பதனை ஏற்க முடியாது என தெரிவித்த அவர், கடந்த காலங்களில் இதனை முன்னெடுத்து செல்வதில் ஏற்பட்ட தாமதங்கள் தொடர்பில் திருப்தியடைய முடியாது எனவும் வலியுறுத்தினார். உண்மையான அர்ப்பணிப்பும் அரசியல் உத்வேகமும் இருந்தால் கடந்த காலங்களில் செய்ய தவறியவற்றினை இந்த அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியும் என தெரிவித்தார்.

மேலும் தமிழ் மக்கள் தமது விருப்பத்திற்கும் சம்மதத்திற்கும் எதிராக ஆளப்படுவதினையும் சுட்டிக்காட்டிய அவர். 1956 ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டின் அரசாங்கக் கட்டமைப்பில் மாற்றத்தினை வேண்டி தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வாக்களித்து வந்துள்ளமையை எடுத்துக் கூறினார். தொடர்ந்து இந்த ஜனநாயக கோரிக்கையானது தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு மறுக்கப்பட்டுள்ளதனையும் தெளிவுபடுத்தினார். அதிகாரப்பகிர்வு தொடர்பிலான எமது கோரிக்கைகள் சர்வதேச சட்டங்களுக்கும் நியமங்களுக்கும் அமைவாகவே இருப்பதனை எடுத்துரைத்த அவர், புதிய அரசியல் யாப்பு தொடர்பான கருமங்கள் 1988 ஆம் ஆண்டிலிருந்தே முன்னெடுக்கப் பட்டு வந்துள்ளமையையும் ஒவ்வொரு அரசாங்கமும் இது தொடர்பில் கருமங்களை முன்னெடுத்துள்ளதனையும் சுட்டிக்காட்டினார். இவ்விடயம் தொடர்பில் தேவையற்ற தாமதங்களை இனிமேலும் ஏற்கமுடியாது என தெரிவித்த அவர், வரைபு யாப்பு பாராளுமன்றிக்கு சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெருன்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட பின்னர் அது ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்தினை பெற வேண்டும் எனவும் துவேச சிந்தையுடன் செயற்படுவோர் இந்நாட்டில் பெரும் எண்ணிக்கையில் இல்லை எனவும் அவர்கள் துரதிஷ்டவசமாக மென் போக்காளர்களைவிட அவர்களின் கருத்துக்கள் முதன்மை பெறுவதாகவும் ஆனால், மென் போக்காளர்கள் ஒன்று சேர்ந்து இயங்குகின்ற பட்சத்தில் புதிய அரசியல் அமைப்பானது மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றப்படுவதனை உறுதி செய்யலாம் எனவும் தெரிவித்தார்.

இராஜாங்க செயலாளரின் கேள்வியொன்றிக்கு பதிலளித்த இரா. சம்பந்தன், பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றில் எமக்கு சமவுரிமை வழங்கப் படுவதில்லை. இதனால் எம் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். மாறாக அதிகாரப் பகிர்வு சரியாகப் பகிரப்படுமிடத்து இந்தப் பொருளாதார சமூக பிரச்சினைகளைமிக பயனுள்ள, நேர்த்தியான வகையில் நிவர்த்தி செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். வடக்கு-கிழக்கிலுள்ள காணி விடுவிப்பு தொடர்பிலும் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், இந்த விடயம் தொடர்பில் முன்னேற்றம் காணப்பட்டாலும் யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்துள்ளமையை கருத்திற் கொள்ளுகின்ற போது இந்த கருமங்கள் இன்னும் துரிதமாக இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதனையும் வலியுறுத்தினார். ஆயுதப்படையினர் இந்த நிலங்களில் பயிர்ச்செய்கை செய்து விளைச்சலை இந்த காணியின் உரிமையாளர்களுக்கே விற்கின்ற துர்ப்பாக்கிய நிலைமையை எடுத்துரைத்த அதேவேளை நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தினை நோக்கி செல்வதற்கு இப்படியான நடவடிக்கைகள் தடையாக அமைவதனையும் எடுத்துக் கூறினார்.

மேலும் வடக்கு- கிழக்கிலுள்ள பல பிரதேசங்களில் காணிவிடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் தொடர்பில் குழுவினரை தெளிவு படுத்திய இரா.சம்பந்தன், எமது மக்களின் இந்த பிரச்சினைகளுக்கான சரியான தீர்வினை எட்டுவதற்கு சர்வதேச சமூகம் காத்திரமான ஒரு நிலைப்பாட்டினை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இலங்கை தொடர்பில் நோர்வே அரசாங்கம் எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்த இரா. சம்பந்தன் தொடர்ந்தும் அவர்களது ஆக்க பூர்வமான பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதனையும் வலியுறுத்தினார்

நோர்வே வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளும் இலங்கைக்கான நோர்வே தூதுவரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யாழ்.அத்தியார் இந்துக் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை மாணவர்கள் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர்.

# விநியோகிக்கப்படாத நிலையில் 4000 இற்கும் அதிகமான வெளிநாட்டு தபால்கள் தேக்கம்

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக கட்டுநாயக்க சர்வதேச. விமானநிலையத்தில் 4000 இற்கும் அதிகமான வெளிநாட்டு தபால் பொதிகள் தேங்கிக் கிடப்பதாக ஒன்றிணைந்த தபால் ஊழியர் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பிலுள்ள பிரதான தபால் நிலையம் மற்றும் பிராந்திய தபால் நிலையங்களில் 15 இலட்சத்திற்கும் அதிகமான தபால்கள் தேங்கிக்கிடப்பதாகவும் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

இதேவேளை தபால் ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கொடுப்பதாக தெரிவிக்கப்பட்ட பின்னரும் இவ்வாறு தபால் ஊழியர்கள் தொடர்ந்தும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை நியாயமற்ற விடயம் என தபால் அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறுத்தை கொல்லப்பட்டதற்கு அசமந்தப் போக்கே காரணம்

## வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள் மீது தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் பொறுப்பற்ற தன்மையுமே கிளிநொச்சியில் சிறுத்தை மனிதாபிமானமற்ற முறையில் அடித்துக் கொல்லப்பட்டதற்கு பிரதான காரணம் என தேசிய சுதந்திர முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் ஜயந்த சமரவீர எம்.பி.தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் சிறுத்தையின் தாக்குதலுக்குள்ளான விடயத்தை வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கு அறிவித்தும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று அப்பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இச் சம்பவமானது வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் முன்னிலையிலேயே இடம்பெற்றுள்ளது. எனவே அவர்களின் அசமந்தப் போக்கும் பொறுப்பற்ற தன்மையுமே இதற்குப் பிரதான காரணம் என்பதனால் அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

அத்துடன் இச் சம்பவத்துடன்தொடர்புடையவர்களைத் தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் சிறுத்தையை அடித்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரஷ்ய தூதுவர் பதவிக்கு தயான் ஜெயதிலக்கவா?

## சிவில் சமூகம் போர்க்கொடி



(கொழும்பு)

நல்லாட்சியின் அடிப்படைக் கருத்தியலையும் இந்த நிர்வாகத்தின் அங்கத்தவர்களையும் நிராகரிப்பவரான கலாநிதி தயான் ஜயதிலக்கவை ரஷ்யாவிற்கான இலங்கைத்தூதுவராக நியமிக்கக்கூடாது என சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவரான தயான் ஜயதிலக்க போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளும் முற்போக்கான அமைச்சர்களையும் நடப்பு அரசாங்கத்தின் தலைவர்களையும்தொடர்ச்சியாக கருத்துக்களால் தாக்கி வந்ததாகவும் சிவில் சமூக அமைப்பினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போது வெற்றிடமாக காணப்படும் ரஷ்யத் தூதுவர் பதவிக்கு பிரபல அரசியல் ஆய்வாளரான கலாநிதி தயான் ஜயதிலக்க மற்றும் சிலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. அத்தோடு, அவர்களுக்கான ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதனை தெரிவிக்குமாறு அரசாங்கம் அறிவித்தல் ஒன்றையும் விடுத்திருந்தது.

அதன் பிரகாரம், தயானுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது கருத்தை பதிவுசெய்துள்ளனர்.(இ-7)

# மாணவர்கள் சிலரால் தாக்கப்பட்ட மாணவ தலைவன் பரிதாபமாக பலி!

(சிலாபம்)

மாணவர்கள் சிலரால் தாக்குதலுக்குள்ளான நிலையில்கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த மாணவனொருவன்நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

சிலாபம் பிரதேச பாடசாலை யொன்றில் தரம் 11இல் கல்வி கற்றுவந்த 16 வயது மாணவனொருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் குறித்த பாடசாலையின் பிரதான மாணவ தலைவன் என தெரியவந்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி இரவு ஒரு நிகழ்வொன்றில் கலந்து



கொண்டு மீண்டும் வீடு திரும்பிய போது அவரை மறித்த மாணவர்கள் சிலர் இவ்வாறு தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தாக்குதலில் படுகாயமடைந்த மாணவன் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதன்போது . மாணவன் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் இதுவரை 3 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அதில் இருவர் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

மற்றைய மாணவன் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# 130வது வருட நிறைவில் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்



கத்தோலிக்க மக்களின் ஆன்மீக நம்பிக்கையின் மையங்களாக கத்தோலிக்க தேவாலயங்கள் விளங்குகின்றன. அக்காலத்தில் தேவாலயங்களை அண்டியதாகவே ஆன்மீகம் கல்வி, கலை அனைத்தும் வளர்க்கப்பட்டன. அந்த வகையில் 130 ஆவது ஆண்டினை எட்டி நிற்கின்ற சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆலயமாகத் திகழ்கின்றது.

**ஆலயத்தோற்றம்**

வலிகாமம் தெற்கில் சுண்டுக்குளியே பிரதான கோவிற்பற்றாகக் காணப்பட்டது. அக்காலத்தில் (தற்போதைய) நாவலர் வீதியில் இருந்து தெற்கே கடற்கரைவரையும், மேற்கே வண்ணார்பண்ணை, கிழக்கே கொழும்புத்துறைக்குட்பட்ட பகுதிகள் சுண்டிக்குளிப் பற்றாகவே வழங்கி வந்தன. இன்று இப்பிரதேச எல்லை மிகவும் சுருங்கி புனித திருமுழுக்கு யோவான் ஆலயமே சுண்டுக்குளிப் பிரதேசத்தின் ஒருமையமாக தற்போது காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தோற்றமும் பல்வேறு சவால்களின் மத்தியில் உருவாக்கம் பெற்றமையை அறிய முடிகின்றது.

இதன் ஆலய வரலாற்றினைக் கூறுபவர்கள், புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் இப்பொழுது இருக்கும் ஆலயத்தின் தென்கிழக்காக இருநூறு மீற்றர் தூரத்துக்கு அப்பால் 1634 இல் அமையப் பெற்றிருந்தது என்கின்றனர். இது போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த பதினோராவது கோவில் என்றும் கூறுகின்றார்கள்.

அவ்வாறு அமைக்கப்பெற்ற ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் முற்றாக சிதைக்கப்பட்டது. அங்கிருந்த புனிதரின் திருவுருவத்தினை மக்கள் மறைவாகப் பேணி தமது ஆன்மீகத்தினை காத்திருக்க வேண்டும். புனித யோசவ்வாஸ் முனிவரின் வருகை அவர்களை நிலைத்து நிற்கச் செய்தது. பின்னர் மீண்டும் ஆங்கியேலர் காலத்தில் எழுந்த மதச்சுதந்திரத்தின் பின்னர் கோவை தியான சம்பிரதாய சபைக் குருமார் பல கோவில்களைக் கட்டியபோது 'பிரபுக்கள் குடியிருப்பு' என அழைக்கப்பட்ட தற்போதைய ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் சிறிய கொட்டிலாக இந்த ஆலயம் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. 1888 இல் யாழ்ப்பாண பேராலயத்தின் மூப்பரும் முதலியாருமாக இருந்த புவிமன சிங்கியால் புதிய ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றில் இருந்து தான் இந்த ஆலயத்துக்கான வரலாறு கணிக்கப் பெறுகின் றது. ஆனால் அதற்கு முன்னரே இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பின்புலத்தினை இந்த ஆலயம் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

**ஆலய கட்டட வளர்ச்சி**

ஆலய கட்டடவேலைகளை முதலாவது மூப்பரும் கட்டடக்கலைஞருமாகிய யாக்கோபு சாமுவேல் பொறுப்பாக நின்று நிறைவேற்றினார். அப்போதைய ஆயர் பேரருட்திரு ஹென்றி யூலன் ஆண்டகை வழங்கிய ஒத்துழைப்பும் பங்குமக்களின் பங்களிப்பும் ஆலயத்தினை அழகிய தோற்றத்துடன் வளரச்செய்தன. 1897 இல் முதலாவது பங்குத்தந்தையாக சுவாமி எஸ். அந்தோனி (அ.ம.தி.) நியமிக்கப்பட்டார் அவர் காலத்தில் 1898 இல் பங்குக் குருமனை கட்டி முடிக்கப்பட்டது. 1905 ஆம் ஆண்டு அழகிய தோற்றம் தருகின்ற மணிக்கூட்டுக் கோபுரம் பிரபல வர்த்தகர் சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளையால் அன்பளிப்பாக கட்டிக்கொடுக்கப்பட்டது. ஆலய முகப்பில் இருக்கின்ற புனிதரின் அழகிய சீமெந்தினாலான சிற்பம், பிரபல சிற்பி யோண் பிலிப்புவால் உருவாக்கப்பட்டது. அலங்கார வேலைப்பாடுகள் சலமோன் பிரான்சிஸ் துரையப்பாவால் மேற்கொள்ளப்பட்டது. 1974இல் அருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் (முன்னாள் ஆயர்) காலத்தில் பங்குமனைக்கு முன்பாக திறந்த வெளி அரங்கு அமைக்கப் பட்டது. அவ்வரங்கு ஆலயத்தின் நூற்றாண்டு நினைவாக 1988இல் அருட்திரு இராயப்பு யோசேப்பு ( முன்னாள் மன்னார் ஆயர்) காலத்தில் எட்மன் ராஜன் டோமினிக் (பொறியியலாளர்) அனுசரணையில் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட திறந்த வெளி அரங்காக உருமாற்றம் செய்யப்பட்டது. அவ்வாறே பங்கு மண்டபமும் அமைக்கப்பட்டது. இவ்வாறு காலத்துக்காலம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் பேறாகவும் பெருமக்கள் பலரின் உதவிகளினாலும் பங்குத்தந்தையர்களின் ஊக்கத்தினாலும் திருமுழுக்கு யோவானின் அழகிய ஆலயம் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

**புனிதரின் சிறப்பு**

புனித திருமுழுக்கு யோவான் (John the Baptist) என அழைக்கப்படும் இவரை "சஞ்சு வான்" "யுவானியார்" " ஸ்நாபகர்" "திருமுழுக்கு அருளப்பர்" என்று மொழி ஒலிப்பு வேறுபாட்டுக்கு அமைய பல்வேறு விதமாக தமிழில் அழைத்து வந்தாலும் தற்போது 'திருமுழுக்கு யோவான்' என்ற சொல்லே பொது வழக்காக பயன்படுத்தப்படுகின்றது. கத்தோலிக்க புனிதர்களில் இவர் மிகவும் முக்கியமானவர்: 'புரட்சிப் புனிதர்'. 'பெண்களில் பிறந்தவர்களில் திருமுழுக்கு யோவானை விட மேலானவர் யாருமில்லை' என்று இயேசுவே இவருக்குச் சாட்சியம் புரிந்துள்ளார்.

இன்று நீதி தவறிய மண்ணில், பல்வேறு நுகர்வுக்கலாசாரங்களுக்கு சிக்கித்தவித்து பிறழ்வு நடத்தைகளுடன் வாழும் எமது சமூகத்திற்கு திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளும் வாழ்வு முன்மாதிரிகையும் பலவகைகளில் வழிகாட்டியாக உள்ளது. புனிதரின் பிறப்பின் திருவிழாவாகிய இன்று பலரும் அதனை உணர அழைக்கப்படுகின்றார்கள்.

**ஆன்மீக சிறப்பு**

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு ஆலயச் செயற்பாடுகள் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத்தினையும் உறவையும் வளர்ப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வந்திருக்கின்றன. பீடப்பணியாளர் சபை, திருப்பாலத்துவ சபை, மரியாயின் சேனை, புனித சூசையப்பர் சபை, புனித வின்சன்டிபோல் சபை போன்ற பக்திச் சபைகளின் மூலமாக ஆன்மீக நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. மறைக்கல்வி கல்விச் செயற்பாடுகள் மிகவும் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன. பாராட்டும்படியான பாடகர் குழாம் எக்காலமும் இந்த ஆலயத்தில் இருந்துள்ளது. அரப்பணிப்பு மிக்க பல பங்குத்தந்தையர்கள், தமது சிறப்பான பணிகளை ஆற்றி வந்துள்ளனர். தற்போது அருட்திரு றெஜி இராயேஸ்வரன் அடிகளார் அப்பணிகளை மிகவும் சிறப்பாக தொடர்ந்து வருகின்றார்.



இத்தகைய செயற்பாடுகளினால் இந்த ஆலயப்பங்கில் இருந்து இதுவரை 20 குருக்களும், 19 அருட் சகோதரிகளும் உருவாக்கப் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதுமட்டுமன்றி முன்னாள் ஆயர்களாக இருந்த எல். ஆர். அன்ரனி ஆண்டகை, கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, இராயப்பு யோசேப்பு ஆண்டகை என்போர் இந்தப்பங்கின் பரிபாலகர்களாக இருந்தபோதே ஆயத்துவ அழைப்பினைப் பெற்றுச் சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**பங்கின் சிறப்பு**

சுண்டுக்குளி பங்கானது பல வகைகளிலும் ஆன்மீகம் கலை, இலக்கியம், கல்வி என பல விடயங்களிலும் முன்னணியில் திகழ்கின்றது.

இப்பங்கில் பல கலைஞர்களும் எழுத்தாளர்களும் கல்வியியலாளர்களும் தோன்றியுள்ளார்கள்.

இவ்வாறு நீண்ட பாரம்பரியத்தினைக் கொண்டதாகவும் பல்வேறு ஆக்கப்பணிகளினதும் ஆன்மீகப்பணிகளினதும் மையமாக விளங்கும் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 130ஆவது ஆண்டின் நிறைவானது பெருமை கொள்ளவேண்டியஒன்றாகும்

**காவலூர் யோவான்**

# சு.கவின் அதிருப்திக்குழுவுக்கு கூட்டு எதிரணியில் இடமில்லை

## காஞ்சன விஜேசேகர எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் அணிக்கு கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு இடமளிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளைஞர் முன்னணி கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையை ஏற்றுக்கொள்பவர்கள் கூட்டு எதிரணியின் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என கடந்த வாரம் கூட்டு எதிர்க்கட்சியின் குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.



இதன்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையை ஏற்றுக்கொள்ளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் அணியினால் கூட்டு எதிர்க்கட்சியின் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது. இரு பக்கமும் கால்களை வைத்துக்கொண்டிருக்கும் அத்தரப்பினால் கூட்டு எதிர்க்கட்சியின் குழுக் கூட்டத்தில் எவ்வாறு கலந்து கொள்ள முடியும்?

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் அணி, கூட்டு எதிர்க்கட்சியின் குழுக்கூட்டத்தில் கலந்துகொள்வதானால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையை மாத்திரம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்பவர்களே கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தன்னைத்தானே காணாமலாக்கிய நபர்

## பொலிஸார் விசாரணை

(சிலாபம்)

சிலாபத்தில் காணாமற்போனதாக கூறப்பட்ட நபர் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

கடலில் அடித்து செல்லப்பட்டு காணாமற்போனதாக கூறப்பட்ட நபரே கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி அதிகாலை 3.10 மணியளவில் இந்த நபர் காணாமல் போயுள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

சிலாபம் - அம்பகந்தவில பிரதேசத்தை சேர்ந்த 45 வயதான அன்டனி லக்ஷ்மன் என்ற நபரே இவ்வாறு காணாமற்போயிருந்தார்.


இன்னுமொரு மீனவருடன் படகில் கடலுக்குச் சென்ற இவர் சிலாபம் மோய கட்டட இடத்திற்கு சென்றுள்ளார். அங்கிருந்து குறித்த நபர் காணாமல் போயுள்ளார். இவர் கையில் இருந்த மின் விளக்கு அந்த இடத்தில் காணப்பட்டுள்ளது.

எனினும் திட்டமிட்டு வேண்டுமென்று அவர் காணாமல் போனதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சிகிச்சை பெற்று வருபவரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொள்ள தயாராகி வருகின்றனர். (இ-7)



நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜென்ஸ் ஃபுரேலிச் ஹோல்டே கடந்த வியாழக்கிழமை யாழ்.குருநகர்ப் பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு கடற்கரையோர சுத்திகரிப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் மற்றும் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (படங்கள்:-குருநகர் செய்தியாளர்)


யாழ்ப்பாணம்- வண்ணை ஸ்ரீ வீர மாகாளி அம்மன் கோவில் 18 ஆம் திருவிழா (மஞ்சம்) கடந்த வியாழக்கிழமை மாலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

(படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# தனிநபர் சுகாதார தகவல்கள் கணனி மயப்படுத்தப்படும்



## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அனைத்து நபர்களின் சுகாதார நிலைமைகள் பற்றிய தகவல்களை கணனி மயப்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகள் வளர்ச்சியடைந்தாலே நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரிக்கும். தற்போதை அரசாங்கத்தின் கீழ் சுகாதாரத் துறையின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# தேரரின் ஹிட்லர் ஆட்சி குறித்த கருத்து தவறு வீதியில் இறங்கத் தயாராம் குமார வெல்கம

(கொழும்பு)

இந்த நாட்டை ஆட்சி செய்ய ஹிட்லர் ஒருவர் தேவை என முக்கிய மகாநாயக்க தேரர்களில் ஒருவர் கூறிய கருத்தை தெளிவாகவே மறுக்கின்றோம் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

ஹிட்லர் ஒருவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவாராக இருந்தால் அதற்கு எதிராக எமது உயிரைக் கொடுத்தாவது போராடத் தயாராகவுள்ளோம். இதற்காக கட்சியிலிருந்தும் வெளியேறத் தயங்க மாட்டோம்.

எமக்கு இந்நாட்டை ஆட்சி செய்ய ஜனநாயகத் தலைவர் ஒருவரே தேவை. இராணுவத்துக்கும் இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாது எனவும் குமார வெல்கம தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் 69ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இடம்பெற்ற மத அனுஷ்டான



நிகழ்வில் உரையாற்றிய அஸ்கிரி பீட துணைத் தலைவர் வெடருவே உபாலி தேரர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இக்கருத்துக் குறித்து குமார வெல்கமவிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ரப் கணனி விரைவில் வழங்கப்படும்



## கல்வியமைச்சர் காரியவசம்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தினால் ஏற்கனவே திட்டமிடப்பட்டு, ஒத்திவைக்கப்பட்டுள்ள உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான "ரப் கணனி" வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

காலி பாடசாலையொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

இதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சில மாற்றங்களுடன் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். இன்னும் ஓரிரு வாரங்களில் அமைச்சரவையின் அனுமதி இதற்கு கிடைக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)




### அருளே தந்துவிடு

வேண்டும் வரமளிப்பாய் - நாகபூஷணி
வேதியர் புகழ்பாடும் - வேதநாயகி
அருளே தந்துவிடு - விசாலாட்சி
அன்பாக அரவணைப்பாய் - காமாட்சி
பத்தரெல்லாம் பாடுகின்றார் - மீனாட்சி
பாரிலெமை காத்தருள்வாய் - மகமாயி
பாவியெமை ஆண்டருள்வாய் - பராசக்தி
பார்த்தாலே போதுமம்மா - பரமேஸ்வரி
பண்ணிய பாவமெல்லாம் - இராஜேஸ்வரி
பறந்தோட வந்திடாயோ - நயினைத்தாயே

ச.அரிகரன்
கரணவாய்.

### தாயே சரணம் சரணம்மம்மா

அருள் மழைபொழியும் அன்னையாம்
அனைவரையும் காத்திடும் தாயவளாம்
நயினையில் குடிகொண்ட நாகபூஷணியாம்
நாளும் எம்மைக் காக்கும் நல்லவளாம்

நாற்றிசையும் உன் புகழ் பாட
நானிலமும் உன் அருள் கிடைக்க
நயினையில் எழுந்தருளியுள்ள தாயே
நன்மையளித்திடுபவளே சரணம் சரணமம்மா

அரியாலையூர் கு.யசிந்தன்.


### நல்லருள் சுரந்தெமை ஆளுமையாளே

நயினையில் நடனம் புரிபவளே
எமதிடர் அறந்தொளி தருபவளே
அல்லல் அறுக்கும் மருந்தே நீ
அமிர்த சுரபியாக நீ இருந்து
நல்லருள் சுரந்தெமை ஆள்பவளே
நலம்மிகு ஞான அன்னையே

ஜெ.ஜெயவினோதன்
யா/பரியோவான் கல்லூரி



# வவுனியாவில் தபால் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு




(பனிக்கன்குளம்)

வவுனியாவில் தபால் ஊழியர்கள் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு, நியமனத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் தபால் துறையை தனியார்மயமாக்கலை எதிர்த்து நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக நேற்று முன் தினம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட தபால் ஊழியர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணியொன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு முன்பாக ஆரம்பமான இப் போராட்டம் பேரணியாக வவுனியா பழைய பேருந்து நிலையத்தினை சென்றடைந்து அங்கிருந்து ஏ9 வீதி வழியாக புதிய பேருந்து நிலையத்தினை சென்றடைந்து அங்கிருந்து மீண்டும் மாவட்ட செயலகத்தினை வந்தடைந்திருந்தது.

மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றினை கையளித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த மகஜரை ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு தெரிவித்திருந்தனர். (7-281)

# இன, மத பேதங்களுக்கு அப்பால் மக்களுக்கு சேவை செய்வேன்

## பிரதியமைச்சர் மஸ்தான் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதியமைச்சருமான காதர் மஸ்தான் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது அமைச்சுப் பணிகளை பொறுப்பேற்றார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த அவர், என்னை நம்பி இப்பதவியை ஒப்படைந்திருக்கும் ஜனாதிபதிக்கும் எனது நன்றிகளை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதுடன் எனது தாய் நாட்டின் இறைமையைப் பேணிக் காப்பதுடன் சிரேஷ்ட அனுபவசாலியான அமைச்சர் சுவாமிநாதனுடன் இணைந்து பணியாற்றுவதை ஒரு வரப்பிரசாதமாக கருதுகிறேன் எனத் தெரிவித்தார்.

பிரதமரின் வழிகாட்டலில் எனது அமைச்சுப் பணிகள் தொடரும் அதேவேளை இன, மத பேதங்களுக்கு அப்பால் நின்று மகத்தான மக்கள் பணி செய்வேன் எனவும் இதன் போது தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்வில் அமைச்சர் சுவாமிநாதன், பௌஸி, துமிந்த திஸாநாயக்க, நிமால் ஸ்ரீபால டி சில்வா, மகிந்த அமரவீர, பைஸர் முஸ்தபா உள்ளிட்ட அமைச்சர்களோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (7)




# வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய் அதிகரிப்பு

## பரிசோதனைகள் தீவிரம்



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கடந்த இரண்டு வாரமாக நகரை அண்மிய பகுதியான கற்குழி, தேக்கவத்தை, வெளிவட்ட வீதி போன்ற பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் அப்பகுதிகளில் டெங்கு நுளம்பு பரிசோதனைகளை அதிகாரிகள் தீவிரமாக மேற்கொண்டனர்.

அப்பகுதியில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும் பகுதிகளில் நேற்று பரிசோதனைகளை அதிகாரிகள் நேரில் சென்று மேற்கொண்டனர். அப்பகுதி மக்கள் போதிய ளவில் ஒத்துழைப்புக்களை வழங்கினர்.

அவர்களுடன் இணைந்து சுகாதாரப் பரிசோதகர்களும் தனியாக பரிசோதனைகளை மேற்கொண்டு நுளம்பு பெருக்கெடுக்கும் இடங்களை இனங்கண்டு அவற்றை அழிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

கடந்த இரு வாரங்களில் குறித்த பகுதிகளில் 10இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் தொற்றுக்குட்பட்டுள்ளமை பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (7-281)

# ஆட்டோவில் கிளைமோர் மீட்பு

# மூன்றாவது சந்தேக நபரும் அரச புலனாய்வாளர்களால் கைது

(பனிக்கன்குளம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வெடிபொருட்கள் உடை மற்றும் கொடியுடன் ஆட்டோவில் பயணித்தபோது நேற்று முன் தினம் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். ஒருவர் தப்பியோடியிருந்தார்.

இந்நிலையில் தப்பியோடிய நபரை இராணுவம், பொலிஸார், புலனாய்வாளர்கள் இணைந்து தேடிவரும் நிலையில் குறித்த வெடி பொருள் கடத்தும் நடவடிக்கையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் அரச புலனாய்வாளர்களது தீவிர தேடுதல் மற்றும் விசாரணைகள் அடிப்படையில் நேற்று முன்தினம் மதியம் புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ச்சியாக விசாரணை மற்றும் தேடுதல்களை நடத்தி வரும் அரச புலனாய்வாளர்கள் மற்றுமொரு சந்தேக நபரை நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதோடு தப்பியோடியவரை தேடும் பணியும் தீவிரமாக இடம்பெற்று வருவதாக அறியமுடிகிறது. (7-281)

# குளவிக்கூட்டை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை



(பரந்தன்)

கிளிநொச்சி உதயநகர் மேற்கு கிராமத்தில் மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் காணப்படும் குளவிக்கூட்டினால் எவ் வேளையும் ஆபத்து ஏற்படலாம் எனவும் எனவே அதனை பாதுகாப்பாக அகற்றி உதவுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பெரியளவிலான குளவிக் கூடானது உயரமான பருத்தி மரத்தில் காணப்படுகிறது.

இது வீசுகின்ற காற்றின் வேகம் காரணமாக உடைந்து விழக் கூடிய ஆபத்தில் உள்ளது.

எனவே அதனை பாதுகாப்பாக அகற்றி தருமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை பொது மக்கள் வேண்டி நிற்கின்றனர். (7-312)

திருவாசகத்துக்கு உருகார்;
ஒரு வாசகத்துக்கும் உருகார்
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## திருவாசக அரண்மனை அமைத்து மன்னர்க்கு ஈடாகிய பெருமை

மணிவாசகப் பெருமான் தந்தருளிய திருவாசகம் எனும் தேன் மனிதர்களை வாழ வைக்கும் அருமருந்து.

பொதுவில் தேன் என்பது உயர்வான மருத்துவச் சிறப்புடையது போன்று திருவாசகத் தேன் உள்ளும் புறமும் நம்மைப் பாதுகாக்கவல்லது.

மணிவாசகரால் அருளப்பட்ட திருவாசகத்தை மெய்யுருகிப் படிக்க படிக்க தெய்விகம் வலுப்பெறும்.

அத்தகைய சிறப்புமிக்க திருவாசகத்தை சைவசமயத்தவர்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களும் மனமுருகிப் படித்து தாம் பெற்ற பேரானந்தத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு மனிதர்களைத் தெய்விகமாக்க வல்ல திருவாசகத்தை கருங்கற்களில் பொறித்து அவற்றைப் படிக்கவும் ஆவணப்படுத்தவும் என நாவற்குழி மண்ணில் திருவாசக அரண்மனையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் அமைத்துத் தந்துள்ளார்.

முன்பெல்லாம் தமிழ் மன்னர்கள் சிவாலயங்கள் அமைத்து மக்களை ஆன்மிக நாட்டத்துடன் வழிப்படுத்தினர்.

மன்னர்கள் அமைத்த ஆலயங்கள் என்றவுடன் தஞ்சைப் பெருங்கோயில் இராஜராஜ சோழ மன்னனின் நாமத்தை உச்சரிக்கும்.

உலகம் வியந்து போற்றுமளவில் தஞ்சைப் பிரகதிஸ்வரர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் அதன் பெருமை பேசப்படுகிறது எனும்போது இராஜராஜசோழனின் சிவாலய அமைப்பில், இறையருள் எத்துணை தூரம் வலிமை கொடுத்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வது கடினமன்று.

ஆனால் இன்று சைவ சமயத்தைப் பாதுகாக்க மன்னர்களும் இல்லை, பரோபகாரிகளும் இல்லை என்று ஏங்கி நிற்கின்ற வேளையில்,

மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அறுநூற்றுக்கும் மேற்பட்ட திருவாசகத்தை கருங்கல்லில் பொறித்து அதற்கென அரண்மனை அமைத்து அதில் நிலைநிறுத்தி இருப்பதென்பது சாதாரண விடயமன்று.

கருங்கக்கஹறின் அக்காலத்து மன்னர்கள் செய்த சமயப் பணிக்கு ஈடாக - இணையாக கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அமைத்த திருவாசக அரண்மனையை ஒப்பிட்டுக் கூறுவதே பொருத்துடையது.

அரண்மனையில் இருந்து கொண்டு இட்ட கட்டளையை நிறைவேற்ற நாட்டு மக்கள் காத்திருக்கும்போது, ஆயிரம் கால் மண்டபம் அமைப்பது அரிதன்று.

ஆனால் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள், மணிவாசகர் தந்த திருவாசகத்துக்கு அரண்மனை அமைத்தார் எனும்போது, அதற்குள் இருக்கக்கூடிய தெய்விகத்தின் திருவருளை மனிதரால் உணர்ந்து நெக்குருக முடியுமேயன்றி அதனை வார்த்தையால் தெளிவுபடுத்த முடியாதென்பதே நம் முடிவு.

சூரிய சந்திரர் இருக்கும்வரை நாவற்குழி மண்ணில் நிலைத்திருக்கக்கூடிய திருவாசக அரண்மனையும் தெட்சணாமூர்த்திக்கென திருக்கோயிலும் அமைத்துத் தந்த கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை என்றும் தமிழ் உலகம் போற்றும்.

கூடவே, அவரின் இந்துப் பணிக்கும் சிந்தனைக்கும் பல வழிகளிலும் உதவியாற்றிய அத்தனை பேரும் இறைவனின் திருவருள் சக்தி கிடைக்கப் பெற்ற மாதவத்தவர்கள் என்பதே உண்மை.

# வடக்கில் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

## கிளி., முல்லை பெண்கள் மாநாட்டில் ஆராய்வு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பெண்களின் மாநாடு நேற்று சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

'மக்கள் மன்றம்' என்று தலைப்பிடப்பட்ட குறித்த பெண்கள் மாநாட்டிற்கு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது நுண்கடன், போதைப்பொருள் பாவனை, பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் பெண்களிற்கான அரசியல் பிரவேசம் உள்ளிட்ட விடயங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அதில், வடக்கில் 40 ஆயிரத்துகு மேற்பட்டோர் பெண தலைமைத்துவ குடும்பங்களாக உள்ளதாகவும், அதிகளவான மாற்று திறனாளிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்ட அதேவேளை நுண்கடன் திட்டத்தினால் பல பெண்கள் பாதிக்கப்படுவதாகவும் அங்கு குறிப்பிடப்பட்டது.

இதன்போது பெண்களை விழிப்பூட்டும் நாடகமொன்றும் அரங்கேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அனந்தி சசிதரன் தெரிவிக்கையில்,

"பெண்கள் மற்றும் சிறுவர்கள் இன்று பல்வேறு சவால்களிற்கு முகங்கொடுத்து வருகின்றனர். அதிகமான பெண்கள் நுண்கடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த திட்டத்தினை மத்திய அரசும், மத்திய வங்கியுமே நிறுத்த முடியும். இவ்வாறான நுண்கடன் திட்டங்களிற்குப் பதிலாக கிராம மட்டங்களில் பல்வேறு இலகு கடன் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் கிராமமட்ட அமைப்புக்கள் அவற்றை தமது உறவினர்களிற்கு முன்னுரிமையாக வழங்குவதால் உண்மையான தேவை உடையோர் பாதிக்கப்படுகின்றனர்.

வடக்கு மாகாண சபை மிகப்பெரிய தொழிலை வழங்க ஏற்பாடு செய்துள்ளது. அந்தவகையில் முதன் முதலாக பாரிய நிதியில் யாழ்ப்பாணத்தில் உப்பளம் அமைக்கப்பட்டு வருகின்றது" என்று தெரிவித்தார். (ம)

# சிறுத்தை கொலை விவகாரம்

## அரசு சட்ட நடவடிக்கை எடுக்கும்

### சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல

கிளிநொச்சியில் சிறுத்தைப் புலியொன்றை இளைஞர்கள் கொன்றமை தொடர்பில் அரசாங்கம் முறையான விசாரணையை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்குமென சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

புலியை கொன்றவர்கள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வியெழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் சிறுத்தையை அடித்துக் கொலை செய்தமை சம்பந்தமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை கைது செய்ய வேண்டும் என்றும், இளைஞர்களின் அந்த செயற்பாடானது ஒரு வெட்கக்கேடான, மனிதகுலத்திற்கு ஒரு "அவமானமான செயல் என் புத்தசாசன அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேராவும் கூறியிருந்தார்.

மேலும், சிறுத்தையை கொன்றவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக உரிய தண்டனை வழங்குவதாக, இதன போது வனஜீவராசிகள் பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும கூறியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தங்க ஆபரணங்களை கடத்தியவர்

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

ஒரு தொகை தங்க ஆபரணங்களை தனது உடலில் மறைத்துக் கொண்டு வந்த இலங்கைப் பிரஜை ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்ல, பெலவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூருக்கு சொந்தமான எஸ்.கியூ - 469 என்ற விமானம் மூலம் நேற்று அதிகாலை அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதுடன், அவர் தனது காற்சட்டை பை மற்றும் சப்பாத்து உறை என்பவற்றில் மறைத்து இந்த தங்கமாலைகளை எடுத்து வந்துள்ளார்.

சுமார் 340 கிராம் நிறையுடைய இவற்றின் பெறுமதி 22,95,000 ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# வடமராட்சியில் சுவரொட்டி

(கரணவாய்)

தியாகிகள் தினத்தினை முன்னிட்டு வடமராட்சி பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எப்பினால ஒட்டப்பட்ட இச் சுவரொட்டியில் தமிழ் மக்களின் இன்றைய தேவை ஜனநாயகத்தினூடாக ஐக்கியத்தை நிறுவி சமாதானத்தை உருவாக்குவதே என அச்சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீட்டில் மங்களம் உண்டாக பெண்கள் செய்ய வேண்டியவை எவை?**

பெண்கள் பின் தூங்கி முன் எழுதல் வேண்டும்.

அதிகாலையில் எண்ணெய் குளியல் கூடாது.

நீரில இருந்து கொண்டு ஜபம் வழிபாடு செய்தல் கூடாது.

முன்னோர்களின்நினைவு நாளில் சிரார்த்தம் வெந்நீரில் குளிக்கக் கூடாது.

லட்சுமி வீட்டிற்குள் வர சூரிய உதயத்திற்கு முன் எழ வேண்டும்.

இரவில் பால், தயிர், சுண்ணாம்பு இவைகளை வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாது.

திருமணமான பெண்கள் கணவன் எழுந்திருக்கும் முன் எழுந்து நீராடி விடுதல் வேண்டும்.

கணவனை மிஞ்சி எதுவுமில்லை என்று நினைவூட்டவே மிஞ்சி போடுகிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மோதிர விரலால் குங்குமம் இடுதல் வேண்டும்.

உண்பதில், உறங்குவதில், பேசுவதில், எழுதுவதில் நிதானத்தை அதிகம் கடைப்பிடித்தல் அவசியம்.

சங்கு வளையல் முதலாவதாகவும் முத்து வளையல் இரண்டாவதாகவும் தங்க வளையல் மூன்றாவதாகவும் கண்ணாடி வளையல் நான்காவதாகவும் அணிய வேண்டும். இவைகள் தெய்வ சக்தியைத் தருவதாகும். *(தொடரும்)*

# புவனேஸ்வரி அம்பாள் தேர்த் திருவிழா இன்று

(அரியாலை)

அரியாலைவெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு தேர் உற்சவம் இடம்பெற வுள்ளது.

நாளை திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஹட்டன் விபத்தில் பெண் உயிரிழப்பு

ஹட்டன், மஸ்கெலியா பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. குறித்த பெண், பாதையைக் கடக்க முற்பட்டபோது, ஹட்டனிலிருந்து மஸ்கெலியாவை நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸின் முன்சில்லில் சிக்குண்டதாலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் தொடர்பில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நோர்வூட் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)




வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த இளைஞர் விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் மணல்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் அ.ஆனந்தபவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது, இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் தாங்கவேலாயுதம் ஐங்கரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் க. கனகேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாண என்.வை.எஸ்.சி. உதவி இயக்குநர் ஐ.தவேந்திரன் மற்றும் பருத்தித்துறை தொகுதி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உ.நிதர்சன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க-60)




# சஞ்யனின் சாதனைச் சதம் யாழ்.மத்திய கல்லூரி வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து நடத்தும், பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் ஒரு ஆட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, சஞ்சயனின் அதிரடித் துடுப்பாட்டத்தில் ஓட்டங்களை வேகமாகக் குவித்தது. அதிரடியாக ஆடிய சஞ்சயன் இரட்டைச் சதமெடுத்து கலக்கினார். ஆட்டநாள் முடிவில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 61.2 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 366 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் எம்.சஞ்சயன் 200 ஓட்டங்களையும், எஸ்.சாரங்கன் 39 ஓட்டங்களையும், வி.கவிதாஸன் 36 ஓட்டங்களையும், பி.ஏ.கஜன் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கனகரத்தினம் மத்திய மதா வித்தியாலய அணி சார்பாக, லஜிந்தன், சௌதயன் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி, 31 ஓவர்களில் 100 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்து. துடுப்பாட்டத்தில் கதிரவன் 37, அருண்குமார் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக, சயந்தன் 40 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை கைப்பற்றினர். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், ஆட்டமிழந்ததும், ஆட்டமும் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

போட்டி முடிவு எட்டப்படாத விடத்து. முதல் இனிங்ஸில் முன்னிலை பெறும் அணி வெற்றி பெறும் அணியென்ற போட்டி விதிமுறைக் கமைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

சஞ்சயனின் 200 ஓட்டங்கள் 15 வயதுப்பிரிவில் வடக்கில் தனிநபர் பெற்ற அதிகூடிய ஓட்டமாகவுள்ளது. வடக்கு கிரிக்கெட் தொடர்பில் சரியான பதிவுகள் எதுவும் இதுவரையில் பேணப்படாமையால் அதனை சரியாக உறுதிப்படுத்தவும் முடியவில்லை. (க-26)

# வடமாகாண சதுரங்கப்போட்டி முடிவுகள்

2018ஆம் ஆண்டுக்கான வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதின் கீழ் ஆண்கள் பெண்கள், 17 வயதின் கீழ் ஆண்கள் பெண்கள், சதுரங்க குழு சுற்றுப்போட்டி கடந்த 10 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டிகள் மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சத்தியபாலன் தலைமையில் நடைபெற்றது.

20 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில்:-முதலாம் இடத்தினை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் மூன்றாம் இடத்தை யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

20 வயதின் கீழ் பெண்கள் பிரிவில்:-முதலாம் இடத்தை யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் மூன்றாமிடத்தை யாழ்/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

17 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில்:-முதலாம் இடத்தை யாழ்/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் இரண்டாம் இடத்தை யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரியும் மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

17 வயதின் கீழ் பெண்கள் பிரிவில்:- முதலாம் இடத்தை யாழ்/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையும் இரண்டாம் இடத்தை யாழ்/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை யாழ்.அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.


ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணியினர் வரும் செப்டெம்பர் மாதம் 16,17,18 ஆம் திகதிகளில் காலி அம்பலாங்கொடையில் நடைபெறும். தேசியப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (கு)

# பந்தைச் சேதப்படுத்திய விவகாரம் தினேஸ் சந்திமாலுக்கு போட்டித்தடை

தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு எதிராக தினேஷ் சந்திமால் செய்த மேன்முறையீடு, அதனை விசாரணை செய்த நீதித்துறை குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இதனைத் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



இலங்கை- மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3ஆம் நாள் ஆட்டத்தின் போது பந்தை சேதப்படுத்தியதாக தினேஷ் சந்திமால் மீது நடுவரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

பந்தை சேதப்படுத்திய குற்றத்திற்காக தினேஷ் சந்திமாலுக்கு ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், போட்டிக்கான பணத்தில் 100 வீதத்தை தண்டப் பணமாக செலுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த குற்றச்சாட்டுக்கு எதிராக தினேஷ் சந்திமால் மேன்முறையீடு செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-7)




காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன 30 ஆவது விளையாட்டு விழா கடந்த 17ஆம் திகதி காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஐக்கிய தேசிய கட்சியின் இணைப்பு செயலாளரும் மாநகர சபை உறுப்பினர் சி.குலேந்திரராஜா மற்றும் காரைநகர் பிரதேச சபை ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் சு.கிருஸ்ணவரன், யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந்திரன், சக்தி இலவசக் கல்வி மேம்பாட்டு நிலைய இயக்குனர் நா.இந்திரன், இளைஞர் சேவை உத்தியோகத்தர், மாவட்ட சம்மேளன தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் இளைஞர்களினதும் சிறார்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் காரைநகர் பிரதேச ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சுந்தரேஸ்வரன் கிருஸ்ணவரனின் நிதி ஒதுக்கீட்டில் புத்தகப்பைகள் வழங் கப்பட்டது. (க-9)

## சுதாகரின் விடுதலை...

கூறுகின்றனரே தவிர இதற்கான முடிவை வழங்கவில்லை என அவரது தாயார் குற்றம் சாட்டியுள்ளார்.

நவோதயா மக்கள் முன்னணி சார்பில் கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் எந்த வொரு அரசியல்வாதிகளும் தங்களுடன் வந்து பேசவில்லை என்று கூறிய அவர், நவோதய மக்கள் முன்னணியின் தலை வரே தற்போது அழைத்து பேசியதாகவும் உத விகளை வழங்குவதாகவும் அவர் குறி ப்பிட்டார். (ம)

## சிறுத்தை கொலை...

விசாரணைகளை ஆரம்பித்துள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது சிறுத்தை விவகாரத்தில் தொட ர்பு டையவர்களை அடையாளங் காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வும், விரைவில் அவர்கள் கைது செய்யப்படு வார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் சமூக ஊடக ங்களில் வெளியான புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் தொடர்பில் தற்போது கிளி நொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக பொலிஸ் பேச்சா ளர் தெரிவித்துள்ளார். அத்துடன் சிறுத் தையை தாக்கியவர்கள் தொடர்பில் கிராம சேவையாளர்களின் உதவியையும் நாடியு ள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

## அரசியல் கைதி ஆனந்த...

கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஆன ந்த சுதாகரின் விடுதலை தொடர்பில் ஜனா திபதி உரிய கவனம் செலுத்த வேண்டுமென சட்டத்தரணி இதன்போது தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் பிள்ளைகளின் பாதுகா ப்பை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே நடவடிக்கை எடு க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் அரசியல் கைதியாக இருந்தா லும், வேறு எந்த கைதிகளாக இருந்தாலும் அவர்களை பொதுமன்னிப்பின் பேரில் விடு விப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதி என்ற ரீதியில் மைத்திரிபால சிறிசேனவிற்கு உண்டு என்றும் குறிப்பிட்டார்.

மேலும், ஆனந்தசுதாகரிடம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது எழுதப்பட்ட தும், அங்கு தட்டச்சு செய்யப்பட்டதும், அவர் வழங்கிய வாக்குமூலத்திற்கு மாறாக உள்ள தாகவும் சட்டத்தரணி இதன்போது சுட்டிக் காட்டியதுடன், இதனை வைத்துக்கொண்டே அவருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கி யதாக கூறினார்.

இது தொடர்பில் தற்போது மேன்முறை யீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்து மட் டுமே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ள தால் அவர் விடுதலை செய்யப்படக்கூடிய வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டினார். (ம)

## மகிந்த அணியினருக்கு...

உறுப்பினர்களுக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரி வித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்ச ரான சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியில் அங்கத்துவம் வகி க்க முடியாத நிலைமை தமக்கு காணப்படுவ தாகவும், வேறு ஒரு கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவாகி, பின்னர் இன்னொரு கட்சியில் இணைந்துகொண் டால் தமக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடு க்க வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இதனைக் கருத்தில் கொண்டே பொதுஜன பெரமுன கட்சியில் இணையப் போவதில்லை எனத் தெரிவித்த சுசில் பிரே மஜயந்த, எவ்வாறாயினும் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியில் இணைந்து செயற்படு வோம் என்றும் கூறினார்.

அதேநேரம், அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்த எதிரணியின் கூட்டங்களில் கலந்துகொள்வதாயின், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் உள்ளிட்ட அந்தக் கட்சியின் எந்த வொரு கூட்டத்திலும் கலந்துகொள்ளக் கூடா தென ஒன்றிணைந்த எதிரணியின் கூட்ட த்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பி டத்தக்கது. (ம)

## நாட்டை ஆட்சி செய்ய...

பீட துணைத் தலைவர் வெடருவே உபாலி தேரர் விளக்கமளித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்யும் போது நேரடி யான கொள்கை இருக்க வேண்டும் என்றும் ஹிட்லர் போன்று மனிதர்களை கொலை செய்து ஆட்சி செய்ய வேண்டும் என்று அர்த்தப்பட தான் கூறவில்லை என்றும் வெட ருவே உபாலி தேரர் விளக்கமளித்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

தன்னுடைய நீண்ட உரையை சுருக்கி ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக்கொண்டு முழுமையாக அர்த்தப்படுத்துவது தவறாகும் என்றும், இது தொடர்பில் முக்கிய அரசியல் தலைவர்கள் விமர்சிப்பது வருத்தமளிப்பதா கவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் முன்னாள் சர்வாதிகாரி ஹிட்லர் போன்று இராணுவ ஆட்சியை கொண்டுவந்தாவது இலங்கையைக் கட்டியெழு ப்புமாறு அண்மையில் வெடருவே உபாலி தேரர் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரதான சந்தேக நபர்...

றும் கிளைமோர் குண்டை மறைவிலிரு ந்து இயக்கும் ரிமோல்ட் உள்ளிட்ட கருவிக ளுடன் முச்சக்கர வண்டி ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் ஒட்டுசுட்டான் பகுதியில் பொலிஸாரால் மீட்க ப்பட்டது.

சம்பவத்தையடுத்து முச்சக்கர வண்டி சாரதி உட்பட நால்வர் கைது செய்யப்பட்ட னர். மேலும் ஒருவர் தப்பிஓடிவிட்டார் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்திரு ந்தனர்.

தப்பி ஓடிய பிரதான சந்தேகநபரான கிளி நொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்தவர் நேற்று சனிக்கிழமை இரவு 9 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

மாங்குளம் பொலிஸ் பிரிவில் மல்லாவி வீதியில் பேருந்திலிருந்து இறங்கி நடந்து சென்ற போது கைது செய்யப்பட்டார்.

அவர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடு ப்பதால் அவர்களிடம் பிரதான சந்தேகநப ரும் ஒப்படைக்கப்படுவர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

இதேவேளை, முல்லைத்தீவு பொலிஸா ரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டு வவு னியாவில் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்ப ட்டது. (ம-281)

## கூட்டு எதிர்க்கட்சியால்...

இருப்பவர்கள் பல்வேறு கொள்கைகளை கொண்டுள்ளனர். இந்த பரஸ்பர கொள்கை கள் காரணமாக குறித்த நிலைமை ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜா-எலயில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே காவிந்த ஜயவர்தன இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு கொள்கை இருக்கின்றது. அதேபோல் ஸ்ரீலங்கா சுதந் திக் கட்சிக்கு ஒரு கொள்கை இருக்கின்றது. இந்த இரண்டு கட்சிகள் இணைந்து ஆட்சி நடத்தும் போது சில பிரச்சினைகள் ஏற்படும்.

ஆனால், கூட்டு எதிர்க்கட்சியில் உள்ளவ ர்களுக்கு பல கொள்கைகள் இருக்கின்றன. அவர்கள் நிலைத்து ஆட்சியமைக்க முடி யாது. 2020ஆம் ஆண்டு ஆட்சியை கைப் பற்றவும் முடியாது.

குறைந்தது இரண்டு கொள்கைகள் இரு ந்தால் கூட சமாளிக்கலாம். 2020ஆம் ஆண்டு என்ன நடக்க போகிறது என்பதை நாங்கள் பார்ப்போம் எனவும் காவிந்த ஜயவர்தன குறி ப்பிட்டுள்ளார். (ம)

# ஏ9 வீதி நாவற்குழி பகுதியில் ஓட்டோவை மோதிய டிப்பர்

### சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-ஏ9 வீதியில் நாவற்குழி பகுதியில் பயணித்த முச்சக்கர வண்டியை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதித் தள்ளிவிட்டு தப்பிச்சென்றது என பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டி சாரதி, தெய்வாதீன மாக தப்பித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

ஏ9 வீதியில் பயணித்த முச்சக்கர வண் டியை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதிவிட்டு, தப்பிச் சென்றது.

வீதியில் தடம்புரண்ட முச்சக்கர வண்டி சேதமடைந்தது. பயணிகள் எவரையும் ஏற் றிச் செல்லாத நிலையில் முச்சக்கர வண்டி சாரதி, தெய்வாதீனமாக படுகாயமின்றி தப்பி த்தார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள னர். (ம)

# யாழிலிருந்து வீடு திரும்பிய படைச்சிப்பாய் கூரிய கத்தி, விளையாட்டு துப்பாக்கியுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து விடுப்பில் வீடு திரும்பிய இராணுவச் சிப்பாயின் பயணப் பொதியிலிருந்து சிறுவர்களின் விளையாட்டு துப்பாக்கி மற்றும் படைகள் பயன்படுத்தும் கூரிய கத்தி என்பன மீடகப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மாங்குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி சென்ற பேருந்தில் பயணித்த இராணுவச் சிப்பாய் ஒருவர், மதுபோதையில் பெண் பயணி ஒரு வருடன் தகாத முறையில் நடக்க முயன்ற குற்றச்சாட்டில் மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பெண் பயணி முறைப்பாடு வழங்க மறுத்ததால், பேருந்து நடத்துநர், இராணுவச் சிப்பாயை இறக்கி விட்டு சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ முகா மொன்றில் கடமையாற்றும் அந்த இராணு வச் சிப்பாய் விடுப்பில் வீடு திரும்பியுள்ளார்.

இராணுவச் சிப்பாய் மது போதையில் இரு ந்ததால், அவரது பயணப் பையை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். அதற்குள் சிறுவர்க ளின் விளையாட்டு துப்பாக்கி ஒன்றும் படை யினர் பயன்படுத்தும் கூரிய கத்தி ஒன்றும் அதற்குள் மீட்கப்பட்டன.

அவற்றை அவர் எடுத்துச் செல்லும் நோக் கம் தொடர்பில் சந்தேகம் கொண்ட பொலி ஸார், அவரை தடுத்து வைத்து மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் பின்னர், இராணுவ பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## மாகாண சபைத்...

வலயங்களாக பிரித்து, அதன் பரப் பளவை சிறிதாக்கி தேர்தலை நடத்துவதற்கே 14ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

எனினும் அந்த திட்டம் நடைமுறைக்கு வரவில்லை.

இந்த திட்டத்தை மையமாக வைத்து திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்பட்சத்தில், அதிக கால அவகாசம் தேவைப்படுபது.

அத்துடன், கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஏற்பட்ட குறைபாடுகளை சரி செய்து எதிர்வரும் மாகாணசபைத் தேர் தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

எனவே எந்த முறையிலாவது இந்த வருட இறுதிக்குள் மாகாணசபை தேர்தலை நடத்த முடியும் என தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணசபை தேர்தல் காலதாமதமின்றி நடத்தப்படுவதன் அவசி யம் குறித்து தெளிவுபடுத்துவதற்கான அரசி யல் கட்சி பிரதிநிதிகள் மட்டத்திலான சந்திப் பொன்று எதிர்வரும் 26ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இந்த சந்திப்பு தேர்தல் ஆணைக்குழு வுடன் நடத்தப்படவுள்ளது.

அத்துடன், மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது குறித்த நாடாளுமன்ற விவாதம் ஒன்று அடுத்த மாதம் ஆறாம் திகதி இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நீல் இத்தவெல குறிப்பிட்டுள்ளார். (ம)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் முத ன்மைநிலை-01 மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு ஞானகாந்தன் விளையாட்டு மைதானத்தில் பாடசாலையின் அதிபர் என் மகேந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ் சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ள தோடு யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட சாலையின் ஆசிரியர் திருமதி இராஜராஜே ஸ்வரி சத்தியசீலன் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ம)

## மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் நாளை சங்காபிஷேகம்

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலய அஷ்டோத்திரசத சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை அனுஷ நட்சத்திரமும் திர யோதசி திதியும் கூடிய சுபவேளையில் நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மகேஸ் வர பூசை இடம்பெறவுள்ளதாக ஆலய பரி பாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம)

## திருவாசக அரண்மனை...

திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அவுஸ்ரேலியாவில் இருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர் வை. மனோமோகன், வைத்திய கலாநிதி சிவ கௌரி தம்பதியர் திருவாசக அரண்மனை யைத் திறந்து வைப்பர்.

தொடர்ந்து கருங்கல்லில் உருவாக்கப்ப ட்ட 21 அடி உயர இரதத்தினை கொழும்பு மனித நேய அறக்கட்டளைத் தலைவர் அபி ராமி கயிலாசபிள்ளை திறந்து வைப்பார்.

நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜின் திருவாசகம் பற்றிய சிறப்புரையும் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரி யர் தி.பாலசந்தர் தேசிகரின் திருவாசக இசை விருந்தும் இடம்பெறவுள்ளன. (ம)

## தேரரின் ஹிட்லர் பற்றிய...

கடும்போக்காளர்களும் நாடகமாடு கின் றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் 69வது பிற ந்த தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற மத அனுஷ்டான நிகழ்வில் உரையாற்றும் போது அஸ்கிரிய பீட துணை தலைவர் வெடருவே உபாலி தேரர் தெரிவித்திருந்த ஹிட்லர் ஆட்சி குறித்து, ஊடகவியலாளர் ஒரு வர் இவரிடம் வினவிய போதே இதனைக் குறிப்பிட்டார். (ம)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

தொடர்புகளுக்கு:- 077 777 0916

(4069)

## காவலாளி தேவை

தங்கி நின்று கடமை செய்யக் கூடிய படித்த காவலாளி தேவை.

தொடர்பு:
சிற்றி ஹொட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
55,57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் புடைவைக் கடைக்கு வேலையாட்கள் தேவை.
அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும். (ஆண், பெண் இருபாலாரும்) தொடர்புகொள்ளவும்.

(4058)

தொடர்புக்கு:- 077 202 6295

## கார் விற்பனைக்கு

Suzuki: A-STAR 2011 model
(Full option)
Price Negotiable
Car Saleing Jaffna.
T.P:- 077 796 8805

(4657)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 38 வயது செவ்வாய் குற்றமற்ற கம்பியூட்டர் கிராபிக்ஸ் (மீடியா) சொந்தமாக தொழில் புரியும் அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை.
*சீதனம் பெரிதும் எதிர்பார்க்கப்படமாட்டாது.*

தொடர்புக்கு:- 077 905 8615

## பணிப்பெண் தேவை

தங்கி நின்று வீட்டுப்பணி செய் வதற்கு அனுபவம் உள்ள வீட்டுப்பணிப்பெண்தேவை.
சம்பளம்
20,000/= - 25,000/=
தொடர்பு:-
077 788 5175, 077 908 4950

## வவு. ஆதிவிநாய...

கோயிலின் கணக்காளர் திறந்துள்ளார். இதனைத் தொடர்ந்து அறையினுள் பூட்டி வைக்கப்பட்டிருந்த இரு உண்டியல்களை யும் கணக்காளர் ஆலயத்தினுள் எடுத்து வைத்துள்ளார். பின்னர் ஆலயத்தினை சுத் தம் செய்வதற்காக கோயிலின் பின்பக்கம் அவர் சென்றபோது உண்டியல் கொள்ளை யிடப்பட்டது தெரியவந்துள்ளது.

மேலும் திருடப்பட்ட உண்டியலில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணம் காணப்பட்டதாக ஆலய கணக்காளர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை குறித்த உண்டியலினை கொள்ளையிட்ட திருடர்கள், வவுனியா பண்டாரிக்குளத்தருகில் உடைத்து பணத் தினை எடுத்துக் கொண்டு உண்டிய லினை குளத்தினுள் தூக்கி வீசிவிட்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனி யா பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன் னெடுத்து வருகின் றனர். (ம)

## வீடும் காணியும் விற்பனைக்கு

நெல்லியடி, முடக்காட்டுப் பகுதியில் மூன்று (03) பரப்பு காணியும், அதற்குட்பட்ட வீடும் விற்பனைக்கு உண்டு. நெல்லியடி பருத்தித்துறை பிரதான வீதிக்கு அண்மை யில் அமைந்துள்ளது.

(4654)

தொடர்புகளுக்கு:-
077 881 2923
076 652 1901 -Viber இலும் தொடர்பு கொள்ளலாம்.

## வேலையாட்கள் தேவை, Room வாடகைக்கு உண்டு

✷ சைவ உணவகம் ஒன்றிற்கு பகுதி நேர மற்றும் முழு நேர வேலையாட்கள் தேவை.

1. சப்பிளையர் (ஆண்/பெண் இருபாலாரும்)
2. சுத்திகரிப்பாளர்
3. ஏனைய குசினி வேலையாட்கள்

✷ பாதுகாப்பான சூழல், வாகன தரிப்பிட வசதியுடன் வைமன் றோட்டில் அமை ந்துள்ள மேல் மாடி வீடு ஒன்றில் மேற் பகுதி பல்கலைக்கழக மாணவிகள், பயிற்சி தாதியர், ஏனைய உத்தியோக பெண்களுக்கு வாடகைக்கு வழங்கப் படும். கீழ்ப்பகுதி விசேட வைபவங் களுக்கு தங்குவதற்கு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 791 7753

(4655)

## தபா...

றும் பதிவுத் தபால் கட்டணங்கள் ஐந்து ரூபாயால் உயர்த்த ப்பட்டுள்ளது.

தபால் அட்டை ஒன்றின் விலை 8 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்த ப்பட்டுள்ளது. டெலி மெயிலின் முதல் பத்து சொற்களுக் கான கட்டணங்கள் 20 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக உயர் வடைந்துள்ளது.

தபால் ஊழியர் சம்பளங்கள், போக் குவரத்து மற்றும் பராமரிப்பு செலவு களை ஈடுசெய்யும் நோக்கில் கட்டண அதிகரிப்பு அறிவி க்கப்பட்டுள்ளதாக தபால் அமைச்சு சுட் டிக்காட்டியுள்ளது. (ம)

## புதிய கிளை உதயமாகிறது
## பொதிகை மல்ரி சென்ரர்

பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு
(புதுக்குடியிருப்பு சந்திக்கு அருகில்)

25.06.2018 நாளை திங்கட்கிழமை காலை 09.30-11.30 வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்



உரிமையாளர்
பொதிகை மல்ரி சென்ரர்
புதுக்குடியிருப்பு.

(சீ-2063)

## எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

● அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
● அருள்ஸ் இறைவெற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

# அருள்

சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடி
இல. 01 பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576

கிளிநொச்சி
இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்)
076 443 1576

(C-3002)

## CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-3048)

## Vacancies

**Assistant Customer Care Center Manager**
**(Full time/Part time)**

Requirements:

1. Excellent communication and interpersonal skills
2. Ability to handle email and other applications.
3. Good command in English is a must.
4. Ability to work independently with minimal supervision
5. Ability to work 6 days per week
6. If You are interested, e-mail or call us.

Careers.penguin@gmail.com
T.P:- 021 222 7077, 078 700 9411

(4651)

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

(C-3019)

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

076 822 6240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 222 5050 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம் - நாவலாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம் - முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

## யாழ் மதர் கெயார் ✚ Dental Unit

Reg.No.#PV85794

நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட உயர்தர சேவைகள்

- பல் வெண்மையாக்கல்
- வேரடைப்பு
- மிதப்புப்பல் சீராக்கல்
- பல், வாய் வைத்தியசேவை
- சிறுவர் பற் சிகிச்சை
- மற்றும் பல நவீன சேவைகள்



514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel: 021 492 7308
Mob: 077 375 4490, 077 220 2769

(C-2957)

## மணமகள் தேவை

1985.08.30 இல் பிறந்த பிரான்ஸ் நாட்டை வதிவிடமாக கொண்ட மணமகனிற்கு (PR உண்டு) மணமகள் தேவை.
T.P:- 075 265 1172

## வீடு வாடகைக்கு

யாழ். நகரின் மையப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய (4Rooms) மாடி வீடு மேற்தளம் மாத்திரம் வாடகைக்கு.
T.P:- 076 173 4858

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 171

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 24.06.2018 தொலைபேசி : 021 222 3378



# ஒற்றுமை பலப்படட்டும்





# நாவற்குழியில் ஒரு வரலாற்று சரிதம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினால் அவர் இராணுவ ஆட்சி நடத்துவார். எனவே இராணுவ ஆட்சிதர்ன் தேவை என்று பௌத்த பீடங்கள் கருத்துக் கூறியிருக்கினம். விதானையார் விசுவலிங்கம் முணுமுணுத்தார்.

தலையால அழியிற சிந்தனைதான் இது. இரண்டாவது தடவையும் தமிழ் மக்களை அழிக்கிறதுக்கான ஏற்பாட்டை பௌத்த பீடங்களும் மகாநாயக்கர்களும் செய்கினம். ஆனால் இது தொடர்பில வெளிநாடுகளின்ர கவனமும் இருக்கிறதென்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேணும்.

சாத்திரியார் சதாசிவம் எதிர்வுகூறல்போலக் கூறினார்.

**கங்காணி:** நல்லவர்கள் என்று நாங்கள் நினைக்கிறவர்களும் ஆட்சிக்கு வந்தவுடன தமிழ் மக்களுக்கு எதிரானவர்களாக மாறிவிடுகினம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தமிழ் மக்கள் நம்பிச்சினம். ஆனால் அவரும் தன்ர சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்துவிட்டார்.

கங்காணியார் இப்படிக் கூறியதும் பண்டிதர் பரமலிங்கத்திற்கு கடும் கோபம் வந்தது. கங்காணியார் நீங்கள் சொல்லுறது ஜனாதிபதி மைத்திரியைப் பொறுத்தவரை பொருந்தாது எண்டுதான் நான் சொல்லுவன்.

**கங்காணி:** ஏன் பண்டிதர் ஐயா அப்படிச் சொல்லுறியள்.

**பண்டிதர்:** மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்ததில தமிழ் மக்களின்ர பங்களிப்புத்தான் அதிகம்.

ஜனாதிபதித் தேர்தலில மைத்திரியை ஆதரிப்பதென்றால் தமிழ் மக்களின்ர முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று நிபந்தனை விதித்து ஒப்பந்தம் எழுதுறதில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனம் செலுத்தாததால தனக்குக் கிடைத்த தமிழ்மக்களின்ர வாக்குகளையும் ஜனாதிபதி மைத்திரி மறந்து போயிற்றார்.

**கங்காணி:** கூட்டமைப்பு ஒப்பந்தம் செய்யாதது மிகப்பெரிய தவறு. ஆனால் ஆனந்தசுதாகரனை விடுதலை செய்வன் என்று சுதாகரனின்ர பிள்ளைகளுக்கு உத்தரவாதம் கொடுத்ததையாவது ஜனாதிபதி மைத்திரி செய்திருக்கலாமல்லோ.

**பண்டிதர்:** ஜனாதிபதி மைத்திரி தமிழ் மக்களின்ர இயல்பு வாழ்க்கைக்கு உதவ நினைத்தவர் என்பது மறு


அவலத்தைப் பார்க்க வேணுமெண்டு கூறினவர் ஜனாதிபதி மைத்திரி.

**மூப்பர்:** பண்டிதர் சொல்லுறதிலும் நியாயம் இருக்குது. மாணவி வித்தியா கொல்லப்பட்ட தகவல் அறிந்ததும் யாழ்ப்பாணத்திற்கு வந்து மாணவி வித்தியாவின்ர பெற்றோரைச் சந்தித்தவர் ஜனாதிபதி மைத்திரி.

அடிப்படையில அவர் நல்லது செய்திருக்கிறார். செய்யவும் நினைத்திருக்கிறார்.

தருவார் என்பது போலவும் காட்டிக்கொள்ள, அது ஜனாதிபதி மைத்திரிக்குக் கடும் கோபத்தைக் கொடுத்தது. நான் இவ்வாறெல்லாம் செய்ய கூட்டமைப்புக்காரர் பிரதமர் ரணிலைத்தான் முதன்மைப்படுத்துகிறார்கள். இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணுமெண்டு ஜனாதிபதி மைத்திரி முடிவெடுத்து விட்டார். அதன் விளைவு தான் இப்ப நடக்கிற சம்பவங்கள்.

**மூப்பர்:** தமிழ்த் தேசி



## ஆட்சிக்கு வந்தவுடன நல்லவியளும் கெட்டுப் போகிறதுதான் வழமை

க்க முடியாத உண்மை.

மாவீரர் தினத்தில சுடர் ஏற்றுதல் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் போன்ற விடயங்களில் படையினரின்ர கடும் பிடியைத் தளர்த்தினவர் ஜனாதிபதி மைத்திரி என்பதை நாங்கள் ஏற்றுத்தானாக வேண்டும்.

மகிந்தவின்ர காலத்தில நவம்பர் 27 மாவீரர் தினம் வருகுதெண்டால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சூழலில படையினர் குவிக்கப்பட்டு விடுவினம்.

அதுமட்டுமல்ல வலி. வடக்கிற்குச் சென்று எங்கட மக்கள் சமைத்த சாப்பாட்டைப் பார்த்துவிட்டு; இனவாதம் பேசுகிற சிங்களவர்கள் ஒருக்கா வலி. வடக்கிற்கு வந்து மக்களின்ர

**கங்காணி:** அப்ப ஏன் அதை இப்ப செய்ய முடியவில்லை.

(கங்காணியாரின் மறுத்தானுக்கு பண்டிதரோ அல்லது மூப்பரோ தான் பதிலளித்திருக்க வேணும்.

ஆனால் கங்காணியாரின் கேள்விக்கு விதானையார் விசுவலிங்கம் அவசரப்பட்டுப் பதிலளித்தார்)

**விதானையார்:** இதெல்லாம் செய்த ஜனாதிபதி மைத்திரியுடனான உறவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துண்டித்துவிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோட உறவை ஏற்படுத்திக் கொண்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான் எல்லாம் செய்வது போலவும் அவர்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

யக் கூட்டமைப்புத்தான் அப்படி நடக்கிறது எண்டால், தமிழ் மக்களையாவது ஜனாதிபதி மைத்திரி நினைத்தல்லோ இருக்க வேணும்.

**விதானையார்:** என்ன செய்யிறது மக்கள் பிரதிநிதிகள் சொல்லுறதைத்தானே உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளுது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தவறான அணுகுமுறைகளை தமிழ் சிவில் அமைப்புக்கள் சுட்டிக்காட்டினால்கூட, அதனையும் நிராகரிக்கிற அளவிலதான் சர்வ தேசத்தின்ர கொள்கை இருக்குது. இப்படி நிலைமை இருக்கும் போது தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பினர் பிரதமர் ரணில் விக்கிரம

சிங்கவோட நிண்டால் அது பதவியில இருக்கிற ஜனாதிபதிக்கு மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தத்தான் செய்யும்.

**வாத்தியார்:** அது சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் விக்கிரமசிங்கவோட சேர்ந்து நிற்கிறதுக்கு என்ன காரணம்.

**பண்டிதர்:** இதற்குப் பல காரணங்கள் இருக்குது. அதில முக்கியமான காரணம் ஐக்கிய தேசியக் கட்சியின்ர மிக நெருக்கமான விசுவாசிகள் ஒரு சிலர் கூட்டமைப்பிற்குள்ள இருந்து கொண்டு கூட்டமைப்பின்ர போக்கைத் தீர்மானிக்கினம்.

அவையளைப் பொறுத்தவரை பிரதமர் ரணிலோட சேர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் அழித்து தமிழரின் அரசியல் தலைமையை செல்லாக்காசாக்கிறதுதான். அந்தத் திட்டம் 75 விதம் நடந்து விட்டது.

**சாத்திரியார்:** அட சங்கதி அப்படியோ

**பண்டிதர்:** அப்படி எண்ட படியால்தானே பிரதமர் ரணிலையும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவையும் கதைக்காமல் செய்து, நான் முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்திக்கமாட்டன், அவரோட கதைக்கவும் மாட்டன் என்று பிரதமர் ரணிலால் சொல்லப்பட்டது.

**மூப்பர்:** தென்மராட்சிப் பிரதேசத்தில இரண்டு பிரதேச செயலகத்தைப் புதிதாக அமைக்க வேண்டும் எண்டு கேட்டுக் கொண்டதைக்கூட அடியோடு நிராகரித்தவர் பிரதமர் ரணில். 60 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட தீவகத்தில நான்கு பிரதேச செயலகம் இருக்குது.

ஆனால் அதே 60 கிராம சேவையாளர் பிரிவைக் கொண்ட தென்மராட்சியில ஒரு பிரதேச செயலகம்தான் இருக்குது. இதைக்கூட ஏற்றுக் கொள்ள முடியாத பிரதமர் ரணில் வேறு எதைத் தான் செய்து தரப் போகிறார்.


**விதானையார்:** எங்கடயள் எங்கள விற்று தங்கட சீவியம் நடத்த வெளிக்கிட்டிட்டினம். இனி தமிழரின்ர பாடு கஷ்டம் தான். ஏதோ வடக்கின் முதலமைச்சர் ஜனாதிபதி மைத்திரியோட சேர்ந்து ஏதேனும் நன்மை செய்தால்தான் உண்டு.

இவ்வாறு விதானையார் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# முதல்வரின் புதிய கட்சியை தடுப்பதுதான் த.தே. கூட்டமைப்பின் புனரமைப்பு





## மக்களுக்குப் புனர்வாழ்வு என்றால் இங்கோ கட்சிக்குப் புனர்வாழ்வு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை- இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் புனர்நிர்மாணம் செய்வதென கட்சித் தலைமை முடிவு செய்துள்ளது.

எங்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுத் தருவார்கள் என்று தமிழ்மக்கள் நம்பியிருக்க, இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளதெனும் போது கட்சிக்குள் உடைவுகள், பிளவுகள் ஏற்பட்டுள்ளதென்பது உறுதியாகின்றது.

மிகக்குறுகிய காலத்திற்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக மோசமான அளவில் தமிழ் மக்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ளதெனும் போது அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வது யார் என்ற கேள்வி எழுகிறது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரின் உடல் நிலை, அவரின் முதுமை என்பன எதிர்காலத்தில் அவரால் கூட்டமைப்பு தழைக்கும் என்ற எதிர்பார்ப்பு இம்மியும் இருக்க முடியாது.

மாறாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா தன் கட்சித் தலைமைக்கான பண்பை இன்றுவரை வெளிப்படுத்தவில்லை.

யாழ்ப்பாண மாநகர சபையின் மேயர் வேட்பாளர் என்பதைக்கூட அவரால் நிறுதிட்டமாக அறிவிக்க முடியவில்லை எனும் போது பெயரளவுத் தலைவர் என்ற பதவியிலேயே அவர் இருப்பது உறுதியாகிறது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கட்சியை வளர்த்தெடுப்பர் என்றோ அல்லது ஒரு புதிய பாதையில் வேகமான பயணத்தை ஆரம்பிப்பார்கள் என்றோ எதிர்பார்ப்பது முடியாத காரியம்.

இதை நாம் கூறும்போது இரண்டு தலைவர்களாலும் முடியவில்லை எனும் போது கூட்டமைப்பை வழிப்படுத்துவது யார் என்ற கேள்வி எழுவதில் நியாயமுண்டு.

இந்தக் கேள்விக்கான பதில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் என்பதாக இருக்கும்.

தலைவர்கள் பலவீனமானவர்களாக , வேகமற்றவர்களாக இருக்கும் போது இரண்டாம் படிநிலைத் தலைவர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துவது தவிர்க்க முடியாத நிகழ்வு.

ஒரு பாடசாலையில் அதிபர் பலவீனப்பட்டவராக இருந்தால் பிரதி அதிபர், அதிபரின் அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்வார் என்பதை தலைமைத்துவ அடிப்படைகள் எவையும் நிராகரிக்க வில்லை.

ஆக, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் ஒரு காலத்தில் ஆளுமை மிக்கவராக இருந்தார். எனினும் முதுமை அவரை ஆட்கொண்டு விட்டது. அதே நேரம் பதவி ஆசை அவரிடம் வேகம் கொள்ள அதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட இரண்டாம் படிநிலைத் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அவருக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு அடுத்தபடியாக இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழன் இராஜவரோதயம் சம்பந்தன் என்ற பெருமை மோட்சம் தரவல்ல அருமருந்து என்ற நினைப்போடு கட்சியின் இதர செயற்பாடுகள் அனைத்தையும் அப்படியே கைவிட்டார் இரா.சம்பந்தர்.

இது தவிர, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களோ சுமந்திரன் போன்ற இன்னும் ஐந்தாறு பேர் கட்சிக்குத் தேவை என்கிறார்.

எனவே மாவை. சேனாதிராஜா அவர்களும் தன் கட்சித் தலைமையை கம்பீரத்தோடு அலங்கரிக்கவில்லை என்பது பட்டவர்த்தனமாகிறது.

இந்நிலையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கை இரண்டாம்படி நிலைத் தலைவர்கள் தம தாக்குகின்றனர்.

ஒரு கட்சியின் தலைமை பலவீனப்படும் போது இரண்டாம் படிநிலைத் தலைவர்கள் கட்சியைப் பொறுப்பெடுத்து அதன் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறுவதில்- மாற்றுவதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டிய- திருத்தியமைக்க வேண்டிய கட்சியாக இருக்கிறதெனும் போது கட்சி உடைந்து விட்டது என்பது உறுதியாகிறது.

ஆக, முதலாம், இரண்டாம் தலைவர்கள் கட்சியை உடைத்துவிட்டனர் என்ற உண்மையின் அடிப்படையில், கட்சி உடைவதற்குக் காரணம் என்ன? உடைந்த கட்சியை புனர்நிர்மாணம் செய்வது எப்படி என்ற வினாக்கள் ஆராயப்பட வேண்டியவை.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு பலமான அமைப்பை மிகச் சொற்ப காலத்திற்குள் முறியடித்தது யார். இந்தப் பொறுப்பை அவர்(கள்) ஏற்பாரா என்ற பல விடயங்களுக்கு அப்பால், தனது பதவியில் இருந்து விலகுதல் என்ற முடிவைத் தான் எடுத்த விட்டதாகவும் எழுபத்தைந்து வீதம் தனது பதவி விலகல் கடிதம் எழுதப்பட்டு விட்டதாகவும் இன்னமும் 25 வீதமே எழுதப்படாமல் உள்ளது எனவும் பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதைக்கூறும் போது எதற்காகப் பதவி விலகல் என்ற கேள்வி உங்களிடம் ஏற்படுகிறதோ இல்லையோ மிகுதியாக இருக்கின்ற 25 வீதமானது எப்போது எழுதி முடிக்கப்படும் என்ற வினா உங்களை உலுக்கவே செய்யும்.

25 வீதம் என்றவுடன் அதனை யாரும் குறுகியதாக நினைத்துவிடாதீர்கள். பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் பதவி விலகல் கடிதம் என்பது பத்துப் பரப்புக்களை ஒரு வெள்ளைத் தாளில் படம் வரைவது போன்றது.

அதாவது நில அளவைப் படத்தில் மிக நுண்ணிய வரைகோடு நூற்றுக்கு மேற்பட்ட அடி அளவைத் தருவதாகும்.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எம்.ஏ. சுமந்திரன் இடம்பெற்ற காலத்தில் இருந்து இன்றுவரை 75 வீதமான பதவி விலகல் கடிதமே எழுதப்பட்டுள்ளதெனில்,மிகுதி 25 வீதம் என்பது எத்தனை ஆண்டுகளைக் கொண்டது எனக் கணக்கிடுவது உங்கள் யாருக்கும் கடினமாக அமையாது.

இதை நாம் கூறும் போது அட, இவ்வளவு வருடங்கள் இன்னும் எடுக்குமென்றால், பதவி விலகல் ஏன்? கட்சியே இல்லை என்ற போது யாரும் பதவி விலக வேண்டியதில்லையல்லவா என்று நீங்கள் முணுமுணுப்பதும் நமக்குப் புரிகிறது.

சரி, இவைபற்றி ஆராய்ந்து அதனை அரசியல் ஆய்வு என்று பெயரிட்டுக் கொள்ள நாம் விரும்பவில்லை.

அரசியல் ஆய்வு என்றால்- அரசியல் எதிர்வுகூறல் என்றால் அதில் 80 வீதமானவை நடந்தாக வேண்டும்.

ஒரு அரசியல் ஆய்வாளர் தான் செய்த ஆய்வில்- ஆய்வாக எழுதிய ஆக்கங்களில் இவை இவை நடந்தேறின என்பதை நிரூபிக்க வேண்டும்.

அதுவே அரசியல் ஆய்வு என்ற தகைமைக்குள் அடக்கப்படும். ஆனால் இதையெல்லாம் ஆய்வு என்று கூற யாம் விரும்பவில்லை.

மாறாக யதார்த்தமானவை பற்றிப் பேசுவதுதான் இப்போதைக்கு உகந்தது. அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புனர்நிர்மாணம் என்பது வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் புதிய கட்சி அமைப்பதைத் தடுப்பது என்பதேயாகும்.

அதாவது வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் புதிய கட்சி அமைத்து முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கினால், கூட்டமைப்பினதும் தமிழரசுக் கட்சியினதும் கதை முடிவுக்கு வந்துவிடும்.

எனவே நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை தம்மோடு வைத்திருப்பது தான் ஒரே வழி என்ற முடிவை கூட்டமைப்பு எடுத்துவிட்டது . இதுதான் அவர்களின் கட்சிப் புனரமைப்பு.

அதேநேரம் தனக்கு எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை நீதியரசர் விக்னேஸ்வரன் மறந்து விடுவாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

திருநீலகண்டன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில் உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை
அனுப்பி வையுங்கள்.







## நன்றி மறவாதே



மாளவதேசத்தில் பிறந்த கௌதமன், பிறப்பால்அந்தணன் ஆனால் அதற்குரிய எந்த குணாதிசயங்களும் அவனிடம் இல்லை. பணம் சம்பாதிப்பது மட்டுமே அவனது குறிக்கோளாக இருந்தது. வேதம் எதுவும் படிக்காமல் ஊர் சுற்றித் திரிந்தான்.

ஒருநாள் திருடர்கள் மட்டும் வசிக்கும் ஊருக்கு அந்தணன் சென்றான். திருடிப் பிழைப்பதில் சுகம் இருப்பதாக நினைத்தான். அவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தான். விலங்கு, பறவைகளை வேட்டையாட கற்றுக் கொண்டான். மேலும் மேலும் பொருள்சேர்க்க எண்ணி பக்கத்து நாட்டிற்கு சென்றான்.

செல்லும் வழியில் மதம் பிடித்த யானை ஒன்று, ஊர் மக்களை துரத்திக் கொண்டிருந்தது. கௌதமனும்அந்த கூட்டத்தில் சிக்கி, திக்குத் தெரியாமல் ஓடி காட்டிற்குள் புகுந்தான். களைப்பில் ஒரு ஆல மரத்தடியில் இளைப்பாறி கொண்டிருந்தான். அப்போது பிரம்மலோகத்தை சேர்ந்த நாடீஜங்கன் என்ற கொக்கு, அம்மரத்தில் வந்து அமர்ந்தது. அந்த கொக்கின் சிறகுகள் தங்கமாக மின்னின. உடல் வைடூரியமாக ஜொலித்தது. அந்த பறவை கௌதமனை கண்டு இரக்கம் கொண்டது.

உதவும் நோக்கில் அவனிடம், "கௌதமனே! பக்கத்து நாட்டில் எனது நண்பனான விருபாட்சகன் என்னும் மன்னன் இருக்கிறான். அவன் தினமும் ஆயிரம் பேருக்கு தானம் செய்பவன். எனவே நீயும் அங்கு சென்று அவனிடம் உனக்கு தேவையானதை பெற்றுக் கொள்" என்றது.

விருபாட்சகனை சந்தித்த கௌதமனும் விருந்தில் பங்கேற்று, அளவுக்கு அதிகமான பொன்னையும் பொருளையும் மூடையில் கட்டிக் கொண்டு காட்டு வழியாக புறப்பட்டான்.

நடந்த களைப்பால் பசி மேலிட்டது. ஏற்கனவே தங்கியிருந்த ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு கிடைத்த செல்வத்தை கண்ட கொக்கு மகிழ்ந்தது. ஆனால்கௌதமனுக்கோ கையில் அளவுக்கதிகமான பணமிருந்தும் பயனில்லாமல் போனது. பொன்னையும், பொருளையும் அள்ளி சாப்பிடவா முடியும்? காய், கனிகளை தேடினான். எதுவும் கிடைக்கவில்லை. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான். கொக்கின் மீது குறி வைத்து அம்பு தொடுத்தான். அது சுதாரிப்பதற்குள், அம்பு அதன் கழுத்தில் பாய்ந்து துடிதுடித்து விழுந்தது. கொக்கை சுட்டு சாப்பிட்டான்.

இந்த விடயம் மன்னன் விருபாட்சகனுக்கு தெரிய வந்தது.

தன் நண்பனான கொக்கைக் கொன்ற கௌதமனை கைது செய்து மரண தண்டனை விதித்தான்.

விலங்குகள் கூட அவனது மாமிசத்தை சாப்பிட விரும்பவில்லை.

ஆதலால், நன்மை செய்தவருக்கு எப்போதும் நன்றியுடன் இருங்கள். நன்றி மறந்த பாவத்திற்கு பரிகாரம் கிடையாது.


## விடுகதைகள்

1. எத்தனை திறந்து மூடினாலும் ஓசை வராத கதவு. அது என்ன?
2. காலையில் வெளிப்பட்டவன் இரவுக்குக் கட்டுப்படுவான். அவன் யார்?
3. பையைத் திறந்தால் பவள முத்துக்கள். அது என்ன?
4. உச்சியிலே ஒரு இனிப்புக் கோட்டை. அது என்ன?
5. வாயில்லாத சின்னவளுக்குப் பயிற்சி கொடுத்தால் பேசவும் செய்வாள். அது என்ன?

**விடைகள்:**

1. கண் இமை. 2. சூரியன் 3. மாதுளை 4. தேன்கூடு 5. கிளி.


## ஆச்சரியமான தகவல்கள்



பெய்வதில்லை.

11. பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை.
12. மலைப் பாம்புகளுக்கு விஷம் இல்லை.
13. கிவி பறவைகளுக்கு இறக்கை இல்லை.
14. சிங்கமும் புலியும் ஒரே காட்டில் வாழ்வதில்லை.
15. கடலில் முதலைகள் இருப்பதில்லை.
16. யானையின் தும்பிக்கையில் எலும்புகள் இல்லை.
17. நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.
18. நண்டுக்குத் தலை இல்லை.
19. ஆமைக்குப் பற்கள் இல்லை.
20. வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை.
21. பாம்புகளுக்கு காது இல்லை.
22. பிரான்சில் கொசுக்கள் இல்லை
23. காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
24. ஜோர்தான் நதியில் மீன்கள் இல்லை.
25. உத்திரப்பிரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை.







# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## பேஸ்புக் மூலம் பிறரின் வாழ்க்கையை சீரழிக்கும் கயவர்கள் பற்றி?

## கவிதையில் விண்ணனான நீங்கள் கவிஞர் வைரமுத்துவைச் சந்தித்தீர்களா?

## சீனா இலங்கையை தனது அழகான மாநிலங்களில் ஒன்று என கனவு...

**அபி — வதிரி**

**உங்களுக்கும் மனைவிக்கும் சண்டை வந்தால் என்ன நடக்கும்?**

அவளுக்குக் கோபம் வந்தால் கையில் கிடைக்கும் பாத்திரங்களால் எனக்கு எறிவாள். நான் இலாவகமாக விலகிக் கொள்வேன். என்மீது பட்டுவிட்டால் அவள் சிரித்து சந்தோசமாவாள். என்மீது படாது விட்டால் நான் சிரித்து குதூகலம் அடைவேன்.

இப்படி எங்களுக்குள் வரும் சண்டையைக் கூட ஒலிம்பிக் போல மாற்றி வைத்து வாழ்வை விளையாடிக்கொண்டிருக்கிறேன் ஐம்பது வருடங்களாக அவளுடன்.

**ராஜ் — சண்டிலிப்பாய்**

**கவிதையில் விண்ணனான நீங்கள் கவிஞர் வைரமுத்துவைச் சந்தித்தீர்களா?**

யாழ்ப்பாணத்தில் உழவர் விழா நடைபெற்ற போது அதற்கு அந்த வைரக் கவிஞர் வந்திருந்தார். அப்போது அவரைச் சந்தித்து அளவளாவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அந்த வைரவரிகளுக்கு சொந்தமான கறுத்த கைகளைப் பற்றிப் பிடிக்கும் சந்தர்ப்பம் ஒன்றே போதுமானது. கம்பன் வீட்டுக் கைத்தறியும் கவி பாடும் என்பது உண்மைதான். அவர் கைதொட்ட என் கைகளும் கவி படைக்க முனைகிறது.

**தவம் — இணுவில்**

**உங்கள் இராசிக்கு பலன் எப்படி இருக்கிறது வியாசரே?**

லொறியின் பின்னால் இருக்கும் இரண்டு சில்லிற்கு நடுவில் இருக்கும் இடைவெளியில் மாட்டிய சுண்டெலி போல இருக்கிறது எனது நிலை. தன்வினை தன்னைச் சுடும் என்பார்கள். எல்லாம் நான் தேடிக் கொண்டவை. நேற்றுத் தான் மனைவி ஊரில் இருந்து வந்தாள்.

**பிரியா — நெல்லியடி**

**பேஸ்புக் மூலம் பிறரின் வாழ்க்கையை சீரழிக்கும் கயவர்கள் பற்றி?**

இந்த வாழ்க்கை என்பது நமக்கு ஒருமுறை தான். இந்த பூமியில் வாழும் சந்தர்ப்பம் நமக்கு இன்னொரு முறை கிடைக்கப் போவதில்லை. வாழும் காலத்தில் நாம் மற்றவரை காயப்படுத்தாமல் வாழ்ந்து விடுவோமே. இது பலருக்குப் புரிவதில்லை. அடிக்கு அடி, சூட்டுக்கு சூடு, துரோகத்துக்கு துரோகம் என்று குரோதங்களை மனதில் விருட்சமாக்கி வைத்துக் கொண்டு சீரழிக்கிறார் சின்னாபின்னமாகிறார். திருடனைப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

**நிகேஸ் — வடமராட்சி**

**வியாசரே த.தே.கூ., ஐ.தே.க. இரண்டும் ஒரு வருடையது என நண்பன் சொன்னான் உண்மையா?**

நல்ல நகைச்சுவை. ஆனால் அதில் உண்மை இருக்கிறது என்பது எனக்குப் புரிந்து விட்டது. உங்களுக்கும் புரியும் என்று நம்புகிறேன். ஏனென்றால் நீங்கள் அவ்வளவு முட்டாள்கள் என்று நான் நினைக்கவில்லை.

**சுதன் — குப்பிளான்**

**கூட்டமைப்பு இப்போது ஏன் தடம் மாறுதாம்?**

தம்பி சுதன் 2009 இல் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி கேட்டதில் இருந்து அதன் தடமாற்றம் ஆரம்பமாகி விட்டது. என்ன அப்போது அது எங்களுக்குப் புரியவில்லை. இப்போது புரிகிறது அவ்வளவு தான். இப்போதாவது புரிந்திருக்கிறதே எனும் போது நிம்மதி பெருமூச்சு எம்மை அறியாமல் வந்து விடுகிறது. ம்ம்ம்...




**அனுராம் — சாவகச்சேரி**

**ஜோக் ஒன்று சொல்லுங்கள் நண்பா?**

பாடசாலை விட்டு வீடு வந்த மகன் அப்பா சுரேஸ் என்னை அடித்துவிட்டான் அப்பா. தகப்பன் சொல்கிறார். உடனே வகுப்பாசிரியரிடம் சொல்லியிருக்கலாமே. அதற்கு மகன் பதில் சொல்கிறான். அப்பா அந்த சுரேஸ் தான் வகுப்பாசிரியர்.

**சயன் — யாழ்ப்பாணம்**

**வெடி மருந்து கண்டுபிடிப்பின் பின்னணி?**

என்னமோ நடக்குது மர்மமாய் இருக்குது. விசாரணைகள் நேர்மையாக இருக்க வேண்டும். திசை திருப்பல்களுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதே எமது கருத்து.

**நிது — வெள்ளவத்தை**

**சீனா போன்ற பௌத்த நாடுகள் அபிவிருத்தி அடைந்தாலும் இலங்கை அபிவிருத்தி அடையாதது ஏன்?**

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மக்கள் நாட்டுக்காக உழைக்கிறார்கள். ஆனால் இங்கோ அவரவர் பொக்கற்றை நிறைக்க உழைக்கிறார்கள். அவ்வளவுதான்.

**கிருஸ்டி — குருமன்காடு**

**காலா வசூல் நிலவரம்?**

பொதுமக்கள் மீது பொலிஸாரின் சூட்டுச் சம்பவத்தைப்பற்றி ரஜினி கூறிய சில விடயங்கள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது என்னமோ உண்மைதான். ஆனாலும் ரஜினி என்கிற கலைஞனுக்கு அதனால் எந்த பாதிப்பும் இல்லை என்பதை காலா வசூல் காட்டிவிட்டது. தற்போதைய நிலவரப்படி 150 கோடியைத் தாண்டிவிட்டதாக தயாரிப்பாளர் தரப்பு அறிவித்துள்ளது.

**விது — செட்டிகுளம்**

**சீனா இலங்கையை தனது அழகான மாநிலங்களில் ஒன்று என கூற கனவு கண்டேன்?**

தாமரைக் கோபுரத்து உச்சியில் ஏறி நின்று சீனப் பிரதமர் டெலஸ்கோப் மூலம் தனது நாட்டையும் இந்தியாவையும் அவதானிப்பது போல நான் கனவு கண்டேன். சில கனவுகள் பலிக்கும் பொறுத்திருந்து பார்ப்போம் ராசா.

**கனிஸ்ரா — தெல்லிப்பழை**

**சாதி வெறி பிடித்தவர்கள் பற்றி?**

குரங்காய் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் பரிணாம வளர்ச்சி பெற்று மனிதனாகி பசிக்கு உணவு தேடி, வாழ்க்கைக்குத் துணை தேடி, வெட்கம் மறைக்க ஆடை தேடி, அந்தஸ்து கௌரவம் என்று பணத்தைத் தேடி ஓடி ஓடி மனிதம் என்பதை நாடி நிற்கும் இந்த வேளையில் மறுபடியும் குரங்காய் ஆவேன் என்று அடம்பிடித்தால் என்ன செய்ய முடியும். சொல்லுங்கள்.

**கோகுலன் — அல்வாய்**

**கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பார்களே. அதன் அர்த்தம்?**

யானை தூங்கும் போது தனது தும்பிக் கையை காதின் அருகில் வைத்து காதால் தும்பிக்கைக்கு விசிறிவிட்டுக் கொண்டே தூங்கும். ஏன் தெரியுமா? அதன் தும்பிக் கைக்குள் ஒரு சிறிய எறும்பு புகுந்துவிட்டாலே யானையின் கதை அவ்வளவுதான். கடுகளவு இருக்கும் எறும்பால் மலைபோல் இருக்கும் யானையை நிலைகுலைய வைக்க இயல்கிறதே. அதுதான் இது.



## வருவாயா...?

என் வாழ்வின்
வசந்த காலத்தென்றலாய்
காதல் மணம் வீசி
தேன் மழைச் சாரலால்
நினைவு தந்து
திகட்டாத இன்பமாய்
வாழ்வு தந்து
தன்னம்பிக்கையின் தனிவடிவம் தர்
இன்று தெய்வத் திருவடியில்
தீபச்சுடராய் ஒளிவீசி
என் நினைவில் நிலைத்திருக்கும்
என்னவனே
நீ வருவாயா...

**இடைக்காடு**
**க.செல்வமலர்**

## மனிதர்

மனம்விட்டு கதைத்தால்
மனம்விட்டு போகுமென்று
மனம்மூடிவாழ்வர்–பின்பு
மனச்சுமை போகவழியின்றி
மனம்விட்டு கதைப்பர்
மனநோயாளிகளாக

## செய்தி

வேர் எரிந்த மரங்களில்
இரு சிறகுகளிருந்தும்
நொண்டுக்கிளிகளாகும்
பறவைகளின் கதை
வாழையடி வாழையாய்
தொடர்கின்றது
நம்நாட்டு பத்திரிகைகளின்
தலைப்புச் செய்தியாய்...

**இணுவில் வாகீசன்**



## தற்கொலை தவிர்

மலையதனை உடைத்து வாழும் விதையல்லோ
விலையில்லா உயிர் தன்னை அழிப்பதுவோ
விடியலுக்காய் நீ காத்திருந்தால் மாவீரனாவாய்
விடம் அருந்தி நீ மடிந்து என் கண்டாய்!

தொலைநோக்கில்லாது நீ தொலைகிறாய்
தோப்புள் கொடி உறவுகள் தவிக்கின்றார்
தூக்குக் கயிறில் தொங்கிச் சாகிறாய்
துக்கம் மிகுதியில் உறவுகள் தவிக்கின்றனர்

சோதனைகளைச் சாதனைகளாக்கி சிகரம் தொட்டிடு
தோல்விகளையும் வெற்றிகொண்டு சிறந்திடு
தற்கொலைகள் தவிர்ப்போரும் அறிந்திடு
தற்துணிவுடன் எழுந்து உலகை வென்றிடு

தற்கொலை தன்னை தவிர்த்திடு மனிதா
தன்னுயிர் மாய்ப்பதை அடியோடு விட்டிடு
தனித்திரு பசித்திரு விழித்திருந்து வென்றிடு
தரணியில் சிறந்து என்றும் வாழ்ந்திடு

உன்னைக் கொல்வது என்ன கண்டாய்
உன்னை வதைத்து எதற்கு தற்கொலை
உன் உயிரே உனக்குச் சொந்தமில்லை
உன்னை பிணமாக்க என்ன உரிமையுண்டு

உயிரைக் காத்து உலகில் வாழ்ந்திடு
உன்னை நீயே அறிந்து செயற்படு
உலகில் சிறந்தவன் நீயே உணர்ந்திடு
உன்னை நீயே அழிப்பது தவறு உணர்ந்திடு

**அரியாலையூர் கு.யசீதீபன்**




## நல்லிணக்கம் என்பதென்ன?

*நயினையம்மன் அருள்வேண்ட*
*நாட்டம் கொண்டதனால்*
*கல்விச் சுற்றுலாவில்*
*கால்பதித்தோம்– முதலில்*
*குறிகாட்டுவானில்*

*முதலில் சென்றாலும்*
*முன்னணியில் நின்றாலும்*
*மூத்த குடியானாலும்*
*தென்னிலங்கை விருந்தினர்க்கே*
*முன்னுரிமை கொடுக்கின்ற*
*படையாட்சி மண்ணில்*
*தள்ளிவந்து விட்டார் பின்னாலே!*

*தாமதமாய் வந்தவர்க்கே*
*தம் மதம் பார்த்து விட்டார்*
*மணிகள் பல கடந்தும்*
*மதம் பார்த்தே விட்டதனால்*
*வதம் செய்த கொதிப்பினிலே*
*திரும்பினோம் சலிப்பினிலே*
*நல்லிணக்கம் என்பதென்ன?*
*நயினையில் தேடுகிறோம்*

**மேகதூதன்**

## மழைத்துளி

விண்ணுலகம் இருந்து மண்ணுலகம் காண
துளித்துளி நீராய் மண்ணை வந்தடையும்

எண்ண முடியா துமிகள் அவை
மழையின் மழைத்துளிகள் இவை
நீர் நிலையில் துளியது பட்டவுடன்
வட்டக்கோலங்கள்தான் அமைக்கும்

கணக்கிட முடியா துளியது
தகரத்திலே பட்டால் துளையும் தப்பாது
சந்தமது தவறாது
நாட்டிய ஒலிதனை கச்சிதமாய் எழுப்பும்

கண்ணீர் துளிதனில் உப்பிருக்கும்
மழைத்துளிதனில் என்றும்
மாசுக்கள் இருப்பதில்லை
கலியுகத்தினிலே கலப்படம் இல்லாத ஒன்று
வையகம் வரும் மழைத்துளியே

மாசற்ற மழைத்துளி கலங்குமிடம் நன்றானால்
அந்நீர் நிலையுமே அமிர்தமே
சேரும் இடம் தவறின் சாக்கடையே
நீயும் சேரும் இடம் நன்றானால்
வாழும் சொர்க்கமே

**த.லக்ஸ்மன், நல்லூர்**


## உழைப்பாளி

உழைத்துப் பாடுபடுவோர் சகலரும் ஓரினம்
உண்டு கொழுத்திருப்போர் அனைவரும் வேறினம்
வியர்வை சிந்தி பாடுபடும் பாட்டாளிகள் ஓரினம்
வீட்டில் சுகமாக இருக்கும் உல்லாசவாசிகள் வேறினம்

உழைப்பவன் சேற்றில் கால் வைக்காவிட்டால்
உலகில் எவரும் சோற்றில் கைவைக்க முடியாது
பாடுபட்டு உழைப்பவனே பாரில் பெரியவன்
பாட்டாளி உழைப்பில் வாழ்பவன் சிறியவன்

உழைத்து வாழ்பவனுக்கு உரியது உலகம்
உட்கார்ந்து உண்பவனுக்கு உலகம் ஒரு அவலம்
உழைப்பவர்களைக் கொண்டாடும் ஒரு தினம்
உலகமெங்கும் போற்றப்படும் மே தினம்

**கந்தபேரின்பம், தீவான்**



## அம்மாவே தெய்வமானவள்

அம்மா எனும் வார்த்தை
அகராதியின் தொடக்கமாகும்
அம்மா எனும் வார்த்தை
அகிலத்தின் ஆதாரமாகும்

அன்பின் சிகரமானவள் அன்னை
பண்பின் உறைவிடமானவள் அவள்
தியாகத்தின் ஒளி தீபமானவள்
கருணையின் மா கடலானவள்

பத்துத் திங்கள் எனைச் சுமந்து
துன்பம் பல கண்டவள் அவள்
பத்திரமாக எனை வார்த்து
பாரினில் உயர்த்தியவள் என் அன்னை

தான் காணும் துன்பம் மறந்து
என் இன்பம் தனை தன் இன்பமாகக் கொண்டவள்
உன் உறக்கம் துறந்து என்னை தூங்க வைப்பவளே
அன்புடன் என்னை வாரி அணைத்திடுவாய் நீ

தெய்வங்களுக்கு மேலானவள் என் அன்னை
தினமும் நான் போற்றும் தெய்வம் அவள்
என் உதிரத்தில் உறைந்திட்ட என் தாயே
நீயின்றி இந்த அகிலத்தில் நானில்லை

**ஜெ.நிருத்திகா**
**தரம் 12 (கலைப்பிரிவு)**
**கிளி/இராமநாதபுரம் ம.வித்தி**




## மௌனத்தின் தேடல் -403

அன்பு வாசகர்களே!

[illegible]

- ஆசிரியர் -




# சிறகொடிந்த பறவை

மனச்சுமையின் கனதியோடு ஓடும் பஸ்ஸின் யன்னல் கரை ஆசனத்தில் அமர்ந்திருந்த சுமதி தன் வாழ்க்கையின் நிலையினை தன் மனக்கண் முன் நிறுத்தியபோது, தன் கண்ணில் அருகில் உதித்த கண்ணீரை யாரும் காண்பதற்கு முன் துடைத்தவளாய், வீசும் இளம் தென்றல் காற்றின் சுவாசத்தினை நுகர்ந்து, தன் மனச் சுமையினை பெரும் மூச்சாய் விட்டு மெல்ல யன்னலில் சாய்ந்தவாறு சிறு நித்திரைக்கு தயாராகும் போது "சுமதி..." என்று அழைத்தவாறு அவள் முதுகில் யாரோ ஒருவர் தொடுவதை உணர்ந்தவளாய் திரும்பிப் பார்த்தாள். ஆம், தன் ஆருயிர் நண்பியை தான் சந்திப்பேன் என்பதை சற்றும் எதிர்பார்க்காதவளாய், சூரியனைக் கண்ட தாமரை போல் சுமதி "கவிலதா...." என்று தன் நண்பியை அழைத்து கட்டியணைத்தாள். கிட்டத்தட்ட பத்தாண்டுக்குப்பின் இச் சந்திப்பு ஏற்பட்டுள்ளது. கவிலதா என்ற பெயரில் உள்ள ரசனை அவள் அழகிலும் உள்ளது என்பதை மனதிற்குள் ரசித்துச் சுவைத்தாள் சுமதி.

சுமதி ஏன் இப்படி இருக்கிறாள்... அவளிண்ட தங்கக் கன்னம் எங்க, ஒளிதெறிக்கும் கண் எங்க...சந்தனம் போல இருக்கும் பொலிவு எங்கே... என்று ஆயிரம் வினாக்களை தன்னுள் நினைத்தவளாய் இருக்க கவிலதா என்ற சுமதியின்அழைப்பு அவளை இவ்வுலகிற்கு கொண்டுவந்தது.

"நான் இந்தப் பஸ்ஸில உன்னை சந்திப்பன் என்று சற்றும் நினைக்கல. நீஎங்க போகிறாய்" என்று கேட்ட சுமதிக்கு "நான் வங்கியில் வேலை செய்யிறன் வேலைமுடிந்து வீட்ட போறன். பத்துவருடத்திற்குப் பின் இன்றுதான் இருவரும் சந்திக்கிறம் இவ்வளவு காலமும் நண்பர்கள் ஒருவருடனும் ஒரு தொடர்பும் இல்லை ஏன் என்னுடன் கூட ஒரு தொடர்பை வைத்திருக்க முடியாம போயிட்டு உனக்கு" இப்பவும் உன்னைப்பார்த்ததும் உன்னை நோக்கி ஓடிவந்திட்டன் நான். முந்தி நாங்கள் அடித்த பம்பல்கள் கடந்த கால நட்பின் நினைவலைகள் மனக் கண் முன் வருது. நீ இப்ப எங்க போறாயோ தெரியாது. இன்னும் கொஞ்ச நேரத்தில என்ர வீடு வந்துவிடும். நீயும் என்னோட என்ர வீட்டுக்கு வருவாயா? என்று தன் நட்பின் வருகையை எதிர்பார்த்தவளாய் கவிலதா சுமதியிடம் கேட்டாள்.

கவிலதா கேட்ட கேள்வி சுமதியின் மனதை குளிர வைப்பதாய் இருந்தது. மிகச் சந்தோசமாய் சுமதி ஆம் என்று தலையசைத்தாள்.

கொடிகாமம், கொடிகாமம் என்ற பஸ் நடத்துநரின் சத்தம் இருவரையும் இவ் உலகிற்கு கொண்டுவர என்ர வீடு இங்க தான் இருக்குது வா என்று சுமதியின் கையைப் பிடித்தவளாய் பஸ்ஸில் இருந்து இறங்கி இருவரும் கவிலதா வீட்டை நோக்கி நடந்தனர். வீட்டின் வாசலை அடைந்ததும் கவிலதா சுசி, சுசி இதோ வாங்க இந்த அன்ரியோட கதைத்துக்கொண்டு இருங்கோ நான் குளித்து விட்டு எல்லோருக்கும் தேநீர் போட்டுக் கொண்டு வாறன் என்று சொல்லிக் கொண்டு போனவள் பத்து நிமிடத்திற்குள் தேநீருடன் வந்தாள். தன் பிள்ளைகளை போகச் சொல்லி விட்டு தன் நண்பியுடன் அளவளாவத் தொடங்கினாள். சரிசொல்லு சுமதி உன்ர வாழ்க்கை எப்படிப் போகுது. நீ காதலித்தவனையா திருமணம் செய்தாய் என்று சுமதி கேட்கத் தொடங்கவும் சுமதியின் கண்களில் இருந்து கண்ணீர் கொல கொல என்று பொழியத் தொடங்கியது. இதனைச் சற்றும் எதிர்பாராத கவிலதா தன்னை சுதாகரித்துக் கொண்டு "ஏன் சுமதி இப்ப அழுகிறாய் அப்படி என்ன தான் உன் வாழ்க்கையில் நடந்தது. உனக்கு ஆறுதலாக நான் இருக்கிறன். உன்ர மனச் சுமையை என்னிடம் இறக்கு என்று அவளுக்கு நம்பிக்கை ஊட்ட சுமதியும் அவளுடைய மனச் சுமையை இறக்கத் தொடங்கினாள்.

நீ க.பொ.த.சாதாரண தரப் பெறுபேறு வந்ததும் வேறு பாடசாலை மாறிப் போயிட்டாய். நான் எங்களுடைய பாடசாலையிலேயே தொடர்ந்து படித்தன். நான் காதலித்த மாறன் என்னை அடிக்கடி எங்கயாவது சந்திப்பதற்கு கூப்பிடுவான். கல்வியில் மிகவும் அக்கறையாக இருந்த எனக்கு அவனின் சந்திப்பு கல்வியில் பின்னடைவை ஏற்படுத்தியது. அப்போது மாறன் ஓர் சிறிய கம்பனியில் வேலை செய்தான். எனக்கு வேண்டியவற்றை தானே வாங்கித் தருவான். ஓர் நாள் என் காதல் அப்பாவுக்கு தெரிய வந்தது. வீடே சுடுகாடாக காட்சியளித்தது. அவனை விட்டு விடுமாறு அப்பா என்னை தொந்தரவு செய்ய நானும் செய்வதறியாது என் வீட்டுக்காரருக்கு தெரியாமல் அவனுடன் என் வாழ்க்கையை தொடங்குவதற்கு சென்று விட்டேன். என்ர கல்வியும் பாதியில்என்னை விட்டு போயிட்டு. கல்யாணம் கட்டி ஆறு மாதத்திற்கு பிறகு என் வயித்திலே பிள்ளையும் வந்திட்டுது. கல்யாணம் கட்டி ஒன்றரை வருடம் என்னை நன்றாக மாறன் பாத்தவன். அதற்கு பின் என் வாழ்க்கையில புயல் அடிக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. காலம் போக போக மாறனின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது. அடிக்கடி என் மீதோ, என் பிள்ளை மீதோ அக்கறையில்லாமல் போனில அளாவளாவிக் கதைக்கிறதை பார்த்த நான் "அப்பா யாரோட போனில கதைக்கிறியள்" என்று கேட்டதற்கு முதல்முதலாக என் கன்னத்தில் அறையும் விழுந்தது. அதனை சற்றும் எதிர்பாராத எனக்கு முழுக் குழப்பமாக இருந்தது. அன்றிலிருந்து அவனுக்கும் எனக்கும் இருந்த இடைவெளி கூடிக் கொண்டே போனது.

அவனுக்கு யாருடன் தொடர்பு இருக்கிறது என்பதை அறிவதற்காக மாறனுக்கு தெரியாமல் அவனுடைய போனை எடுத்தேன். மெசேஜ் இருக்கும் இன் பொக்ஸ் பார்த்தேன். முதலாவதாக நான் பார்த்த மெசேஜ் hi my sweet dream girl good morning எனக்கு தூக்கி வாரிப் போட்டது. என்னுடைய வாழ்க்கை இருண்டு விட்டது என்பதை ஊகித்து விட்டு எல்லா மெசேஜ் உம் வாசித்தேன். அந்த மெசேஜ் எல்லாம் அவனுக்கும் யாரோ ஒரு பெண்ணுக்கும் தொடர்பு இருப்பது என்பதையும் அது நல்ல விதமான தொடர்பு இல்லை என்பதையும் எனக்கு நிச்சயப்படுத்தியது. அதுமட்டுமன்றி ஒரு நாளில் மணித்தியாலக் கணக்காக அவளுடன் கதைப்பதும் தெரியவந்தது. செய்வதறியாது அவளுடைய போன் நம்பரைக் குறித்துக் கொண்டேன். இதனையெல்லாம் கண்ட நிந்த எனக்கு உச்சியிலே கோபம் ஏற இப்படி ஒருகெட்டவனையா நான் காதலித்தேன். என்னுடைய வாழ்க்கையை அழித்தவனுடன் இனி மேல் வாழத் தேவையில்லை என்பதை புரிந்து கொண்டு கோபம் கோபமாக அவனிடம் போனைக்கொடுத்துவிட்டு இந்த வீட்டில என்ன நடக்குது போனில என்ன இன்னொரு குடும்பமாய் நடத்துறாய்... என்று என்னையும் மீறிக் கத்தினேன். இதனை சற்றும் மாறன் எதிர்பார்க்காவிட்டாலும் மனதில் ஏதோ முடிவு எடுத்தவனாய் அவள் என் உயிர் எனக்கு நீயும் அவளும் ஒண்டு தான். உன்னுடனும் அவளுடனும் நான் வாழவேண்டும். நீ அதற்கு சம்மதித்தே ஆக வேண்டும். நீ என்னைவிட்டு எங்க தான் போக முடியும். அவள் உன்னையும் வைத்து வாழ்வதற்கு சம்மதித்து விட்டாள். நீ என்ன பெரிய பத்தினியா? என்று தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினான். எனக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டது. அந்தக் கயவனிடம் இருந்து எப்படியும் நானும் என் பிள்ளையும் விலக வேண்டும் என்பதை தீர்மானித்து அன்று முழுக்க அழுதழுது என் நாளை போக்கினேன். அவன் மிகவும் பிடிவாதக்காரன்.

ஆகவே இவனிடம் இருந்து புத்திசாதுரியமாகவே என்னை காப்பாற்ற வேண்டும் என்பதை தீர்மானித்தேன். அழுது புலம்பிக் கொண்டிருந்த மாறனிடம் என்னுடைய கோபத்தை அடக்கி, நீ கேட்டதுக்கு சம்மதிக்கிறன் என்று கூற அவன் மகிழ்ச்சியில் திளைத்தான். மறுநாள் வழமை போல் வேலைக்கு போய் விட்டான். அவன் வேலைக்கு போனதும் வரணியில் இருக்கும் என் அம்மாவின் வீட்டிற்கு நானும் பிள்ளையும் போனோம்... எங்களையே வேணாம் என்று தூக்கி வீசிட்டு போன நீ இப்ப ஏன் இங்க வாறாய். உனக்கு வெட்கமில்லையா? என்று அம்மா கேட்ட கேள்வி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் இருந்தாலும் என்னை அறியாமல் அழுது குழறினேன். நான் அழுத அழுகையைப் பார்த்த அம்மா என்னை கட்டியணைத்து உள்ளே அழைத்தா. நான் நடந்தவற்றையெல்லாம் கூறினேன். செய்வதறியாத அம்மா அப்பாவுக்கும் சகோதரருக்கும் இதனை தெரியப்படுத்தினார். அவர்கள் எல்லோரும் ஓர் முடிவு எடுத்து என்னிடம் வந்து கேட்டார்கள். நீ அவனை விவாகரத்து எடுத்து விடு. எங்களோட இரு. உன் வாழ்க்கையை நாங்கள் பார்க்கிறோம் என்றார்கள். விவாகரத்து என்ற வார்த்தையைக் கேட்டதும் எனக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆனால் ஒன்று மட்டும் எனக்கு தெரியும். அவன் தன்னுடைய தவறை என்றும் உணர்ந்து திருந்தமாட்டான். தான் செய்வது தான் சரியென்று வீராப்பாய் கதைப்பான். நாளடைவில் தன்னுடைய விருப்பத்திற்கு என்னை இணங்க வைப்பான்.

காதல், திருமணம், வாழ்க்கை என்பது ஒருத்தனு டன் ஒருத்தி வாழ்வதுதான். காதலித்து விட்டேன் என்பதற் காக நாய் வாழ்க்கை வாழமுடியாது. அதனை விட வாழாவெட்டியாக வாழ்வது மேல். எத்தனையோ பெண்கள் நல்ல கணவன்மார்களை காலத்தின் கோலத்தால் இழந்து இன்றும் பத்தினிமார்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார் கள்.

இவற்றையெல்லாம் மனதில் நிறுத்தி விவாகரத்துக்கு சம்மதித்தேன். இப்பவும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் நீதிமன்றத்திற்கு சென்று திரும்பி வந்து கொண்டிருக்கும் போது உன்னைக் கண்டேன் என்று கண்ணீர் சொரிய தனது கதையை சொல்லி முடித்தாள்.


ஒரு சிறிய திரைப்படத்தை பார்த்து முடித்த உணர்வுடன் இப்படி எத்தனை பெண்கள் படிக்கும் காலத்தில் பிழையான தெரிவுகளை மேற்கொண்டு விவாகரத்திற்கு போய் சிறகொடிந்த பறவையாகின்றார்கள் என்று நினைத்தவளாய் தன் கண்ணில் வடிந்த கண்ணீரைக் துடைத்துக் கொண்டு கவிலதா சுமதியை கட்டியணைத்தாள்.

திருமதி ஜசந்தினி.பி
ஆசிரியர், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

# மனிதன் பாதி ரோபோ மீதி

## இராணுவத்தில் புகுத்தப்படும் புது முயற்சி

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன் என எல்லா வல்லரசு நாடுகளும், தங்கள் இராணுவத்தை காலத்துக்கு ஏற்ப நவீனப் படுத்துவதில் முனைப்புடன் இருக்கின்றன. இதற்காக, கடந்த நூற்றாண்டின் ரோபோட்டிக்ஸ் தொழில்நுட்பம், இந்த நூற்றாண்டின் செயற்கை நுண்ணறிவு வரை அத்தனையையும் இராணுவத்தில் புகுத்தி விளையாடி வருகின்றன. இந்த நவீனமயமாக்கலின் சமீபத்திய ட்ரெண்ட்களில் ஒன்று எக்ஸோகெலிட்டன்ஸ் (exoskeletons). மனிதனும், ரோபோவும் கலந்த கலவைதான் இந்த எக்ஸோ





கெலிட்டன். இதன்மூலம் சாதாரண ஒரு இராணுவவீரரை சுப்பர்மானாக மாற்றலாம். எப்பேர்ப்பட்ட தாக்குதலில் இருந்தும் தப்பிக்கலாம். அதனால்தான் அனைத்து வல்லரசு நாடுகளும் ஒருசேர எக்ஸோகெலிட்டன் ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்தி வருகின்றன.

### எக்ஸோகெலிட்டன்கள் என்றால் என்ன?

இராணுவத்தை நவீனமயமாக்கும் முயற்சியில் இருக்கும் அமெரிக்கா, சமீபத்தில் சோதனை முறையில் ஒரு கருவியை வடிவமைத்தது. அது ஒரு செயற்கை கை. ஆனால், அது மனிதனின் கைகளின் பணிகளைச் செய்யும் பயோனிக் கை அல்ல, மெக்கானிக் கை. அதிக எடை கொண்ட துப்பாக்கிகள் மற்றும் பிற ஆயுதங்களை இராணுவ வீரர்கள் நீண்ட தூரம் ஏந்திச்செல்லும்போது அவர்களின் தசைகள் பாதிப்படைய வாய்ப்புண்டு. மேலும், அதிக எடையைத் தாங்கிக் கொண்டு ஓடுவதால் விரைவிலேயே களைப்படைந்தும் விடுவார்கள். இதைத் தடுப்பதற்காக அமெரிக்க இராணுவத்தின் விஞ்ஞானிகள் புதிய வழி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அதுதான் இந்த மெக்கானிக் கை. இந்தச் செயற்கை கையை இராணுவ வீரரின் இடுப்புப் பகுதியில் பொருத்திவிட வேண்டும். இதன்மூலம் இந்தக் கை தாங்கும் பொருளின் எடையானது முழுவதுமாகத்தரையை வந்தடைந்துவிடும். இரண்டு கைகளில் தாங்கும் துப்பாக்கியை மூன்று கைகள் மூலம் தாங்குவதால், கைகள் எளிதில் சோர்வடையாது. மேலும், அதிக எடையுள்ள ஆயுதங்களையும்எளிதாகக்கையாள முடியும். M249, M240B ஆகிய துப்பாக்கிகளை வைத்து இப்போதைக்குச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இது வெற்றியடைந்தால் இந்த மெக்கானிக் கை அமெரிக்க இராணுவத்தில் முக்கிய அங்கம் வகிக்கலாம். இதுதான் எக்ஸோகெலிட்டனா? இல்லை. ஆனால், எக்ஸோகெலிட்டனின் பணியும் இதே போலத்தான்.

எக்ஸோகெலிட்டன் என்பது ஒரு ரோபோட்டிக் கவசம். கிட்டத்தட்ட அயர்ன்மானின் கவசம் போலத்தான். ஒரு சாதாரண மனிதனின் முழு இயக்கத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு ரோபோட்டிக் கவசம். தலையிலிருந்து கால் வரை நம் உடலின் இயக்கங்கள் அனைத்தும் எக்ஸோகெலிட்டன்கள் கவனித்துக்கொள்ளும். நாம் தூக்கும் ஒரு பொருளின் எடையைத்தாங்குவது, ஓடும்போது நம் வேகத்தை ஊக்குவிப்பது, மிகக்கடினமான பரப்புகளில் ஏறும்போதும் இறங்கும்போதும் உடலின் சமநிலையைத் தக்கவைத்துக்கொள்வது என எல்லாப் பணிகளும் எக்ஸோகெலிட்டன்கள் வசம்தான். இதனை ஒரு இராணுவ வீரர் அணிந்துகொண்டால் அவர் சாதாரணமாகச் செய்யும் செயல்களைவிடவும் 27 மடங்கு அதிகமான பணிகளைச் செய்யமுடியும். ஒரு வீரர் நீண்டதூரம் ஓடவேண்டுமா? முடியும். அதிக உயரம் தாண்ட முடியுமா? முடியும். 90 கிலோ எடையுள்ள பொருளை அசால்ட்டாக தூக்கிக்கொண்டு மலையேற முடியுமா? முடியும். எக்ஸோகெலிட்டன் இருந்தால் இவை அத்தனையும் சாத்தியம்தான். இதனால்தான் தங்கள் நாட்டு இராணுவம் எக்ஸோகெலிட்டன்களை மாட்டி அழகுபார்க்கின்றன பன்னாட்டு இராணுவங்கள்.

### பந்தயத்தில் முந்தும் அமெரிக்கா!

ஏற்கனவே பார்த்தபடி ரஷ்யா, சீனா, பிரிட்டன் எனப் பல்வேறு நாடுகளும் இந்த எக்ஸோகெலிட்டன்கள் ஆராய்ச்சியில் தீவிரமாக இறங்கியிருக்கின்றன. தங்கள் நாட்டு இராணுவ வீரர்களுக்கென பிரத்தியேக எக்ஸோகெலிட்டன்களையும் தயார் செய்துவருகின்றன. ஆனால், அமெரிக்கா இந்த விடயத்தில் இன்னும் ஒருபடி முன்னால் சென்று, முழு அயர்ன்மான் கவசத்தையே உருவாக்கும் அளவுக்கு முன்னேறிவிட்டது.

இந்தக் கவசத்துக்கு TALOS (Tactical Assault Light Operator Suit) எனப் பெயரிட்டுள்ளது அமெரிக்கா. எக்ஸோகெலிட்டன்கள் என்பவை முழுவதும் மெக்கானிக்கலான விடயங்களை மட்டும் செய்பவை. அத்துடன் கூடுதலாக AI, Smart Gadgets ஆகியவற்றை இணைத்து உருவாக்கியிருப்பதுதான் இந்த TALOS. 2013ஆம் ஆண்டு முதலே இதனைத் தயாரித்துவரும் அமெரிக்கா கடந்த ஆண்டுதான் இதுகுறித்த முழுமையான விபரங்களை வெளியிட்டது.

இராணுவ வீரருக்கு முழுமையான பாதுகாப்பை அளிக்கும் கவசங்கள், ஆயுதங்களைக் கையாள்வதற்கு உதவும் ஸ்மார்ட் டிஸ்ப்ளே, வீரரின் அசைவுகளைக் கண்காணிக்கும் சென்சார்கள், அதிக எடையைத் தாங்கக்கூடிய அமைப்புகள் எனப் பக்காவாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது TALOS. இதற்கான ஆராய்ச்சிகள் இந்த ஆண்டுக்குள் முடிந்துவிட்டால், கூடிய விரைவிலேயே பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் முனைப்பில் இருக்கிறது அமெரிக்க இராணுவம்.

### எவ்வளவு நாட்கள் ஆகும்?

உலகின் அனைத்து வல்லரசு நாடுகளும் முயன்றும்கூட, இன்னும் எக்ஸோகெலிட்டன்களுக்கு முழுவடிவம் கொடுக்க முடியவில்லை. காரணம், இதன் உற்பத்தியில் இருக்கும் சவால்கள்தாம். இந்த எக்ஸோகெலிட்டன் கருத்துருவாக்கம் என்பது கடந்த நூற்றாண்டிலிருந்தே இருக்கிறது. 1960-களிலேயே இதற்கு வடிவம் கொடுக்க பல நிறுவனங்கள் முயற்சி செய்தன. ஆனால், எந்த நிறுவனத்தாலும் அதன் முழுப்பலனை அடைய முடியவில்லை. பின்னர் 2000-க்குப் பிறகுதான் மீண்டும் எக்ஸோகெலிட்டன்கள் ஆராய்ச்சி வேகமாக முன்னேறத் தொடங்கியது. ஒரு வீரர் அதிக எடையைத் தாங்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும் என்பதுதான் எக்ஸோகெலிட்டன்களின் முதல் தகுதி. ஆனால் ஆரம்பத்தில், எக்ஸோகெலிட்டன்களே வீரர்களுக்கு அதிக எடையாக இருந்தன. காரணம், அவை அப்போது இரும்பில் செய்யப்பட்டது தான். பின்னர்தான் அலுமினியம் போன்ற எடை குறைவான உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. இன்று எடையைக் குறைப்பதற்காக இன்னும் நிறைய உலோகங்கள் வந்துவிட்டன.

இதேபோல அடுத்த சிக்கல் பற்றறி. மனிதர்களின் கைகால் எலும்புகளைப் போலவே, எக்ஸோகெலிட்டன்களும் மூட்டுகள் போன்ற இணைப்புகளால் ஆனவையே. இந்த இணைப்புகளுக்கு ஹைட்ராலிக் முறையில் உந்துசக்தி தேவைப்படும். இதனை உற்பத்தி செய்வதற்கு பற்றறி போன்ற ஓர் ஆற்றல்மூலம் வேண்டும். ஆனால், இன்றளவும் நம்மால் நீண்டகாலம் சக்தியை அளிக்கும் ஆற்றல்மூலத்தை உருவாக்க முடியவில்லை.

இப்போதைக்கு ரீசார்ஜ் செய்யும் வசதியிலிருக்கும் லித்தியம் அயன் பற்றறிகளே இவற்றில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், நீண்டநாள் போரில் ஈடுபடும் வீரர்களுக்கு இவையெல்லாம் போதுமானதாக இல்லை. இதுவும் எக்ஸோகெலிட்டன்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. இதில் கவனிக்கவேண்டிய இன்னோர் அம்சம், இந்தக் குறைபாடுகள் அனைத்தும் எக்ஸோகெலிட்டன்களின் இராணுவ ரீதியான பயன்பாடுகளில் மட்டுமே. பிற துறைகளில் நினைத்ததை விடவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

### ஃபோர்டு நிறுவனத்தின் புதுமுயற்சி!

எக்ஸோ பயோனிக்ஸ் என்ற நிறுவனத்தின் எக்ஸோகெலிட்டன்களை ஃபோர்டு நிறுவனம் தனது கார் தொழிற்சாலையில் பயன்படுத்திவருகிறது. அந்நிறுவனத்தின் அமெரிக்கத் தொழிற்சாலையில் இருக்கும் பொறியாளர்கள் எக்ஸோகெலிட்டன்களை பயன்படுத்தி வருகின்றனர். கார் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் இந்தப் பொறியாளர்கள் ஒரு நாளைக்குச் சுமார் 4,600 முறை கைகளை உயர்த்த வேண்டியிருக்கும். அத்தனை முறையும் கையில் உதிரிப்பாகங்கள், கருவிகள் போன்றவை இருக்கும்.

இத்தனைமுறை கைகளை உயர்த்தியபடி பணிபுரிவதால் அவர்களுக்குத் தோள்பட்டை வலி ஏற்படும். இதனைக் குறைக்கத்தான் இந்த எக்ஸோகெலிட்டன்கள். இதனை அணிந்து பணிபுரிவதன் மூலம் கைகள் எவ்வித எடையையும் உணராது.


மொத்த எடையையும் எக்ஸோகெலிட்டன்களே வாங்கிக்கொள்ளும். எனவே, தோள்பட்டை வலியும் வராது. மருத்துவத் துறையிலும் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. முதுகெலும்பில் பாதிப்பு ஏற்பட்டு நடக்கமுடியாமல் இருப்பவர்களுக்கு இந்த எக்ஸோகெலிட்டன்களே முதுகெலும்பாக இருக்கின்றன. இதன் மூலம் அவர்களால் எழுந்துநடக்கவும் முடியும். இப்படி இராணுவம், தொழிற்சாலை, கட்டுமானம் என மனிதனின் அசுர உழைப்பு தேவைப்படும் எல்லா இடங்களிலும் நமக்காகப் பணிசெய்கின்றன எக்ஸோகெலிட்டன்கள்.

தனி மனிதர்களின் பங்களிப்பு எப்போதும் வேண்டுமென்பதால், இராணுவத்தைப் பொறுத்தவரைக்கும் எக்ஸோகெலிட்டன்களுக்கு அதிக தேவையிருக்கிறது. ஆனால், பிறதுறைகளுக்கு அப்படிச் சொல்லமுடியாது. காரணம், வருங் காலத்தில் வரவிருக்கும் ஆட்டோமேஷன்!

# இத்தாலியில் பொட்டம்மான்

# பூகம்பமா?

“இறுதிக்கட்டப் போரின்போது பொட்டம்மான் உயிர் தப்பி விட்டார். தற்போது அவர், இத்தாலியில் தஞ்சம் அடைந்துள்ளார். அவர்தான், உலகம் முழுவதிலும் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களை ஒருங்கிணைத்து மீண்டும் புலிப்படையை அமைத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



பிரபாகரனும் பொட்டம்மானும் உயிருடன் இருக்கிறார்கள்... பிரபாகரன் உயிருடன் இல்லை, பொட்டம்மான் மட்டும் இருக்கிறார்... பொட்டம்மானும் உயிருடன் இல்லை... இப்படியாகப் பலவிதமான செய்திகளும் வதந்திகளும் அவ்வப்போது கிளம்பும். பின்னர், அதுவாகவே அடங்கியும் விடும்.

இலங்கையில் முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்தது மே மாதத்தில். விடுதலைப்புலிகளின் மாவீரர் தினக்கொண்டாட்டங்கள் நவம்பர் மாதம் நடக்கும்.

இதனால், மே மற்றும் நவம்பர் மாதங்களில் இதுபோன்ற வதந்திகள் அதிகமாகக் கிளம்பும். ராஜீவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளிகளின் தண்டனைக் குறைப்பு சம்பந்தமான விவாதங்கள் எழும்போதெல்லாம் இதுபோன்ற வதந்திகள், செய்திகளாக உலாவரும். அண்மையில் இதுபோன்ற ஒரு செய்தி உலா வந்தது.

‘ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற ஏழு பேரை விடுதலை செய்ய வேண்டும்’ என்று சட்டமன்றத்தில் தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தை இந்திய ஜனாதிபதி நிராகரித்துவிட்டார்.

இந்தச் செய்தி வெளியான நாளில், பி.ஜே.பியின் மூத்த தலைவரான சுப்பிரமணியன் சுவாமி தனது டுவிட்டர் பக்கத்தில், ‘முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய குற்றவாளி இத்தாலியில் வசித்து வருகிறார்’ என்று பதிவிட்டார்.




உடனே, சுவாமி யாரைச் சொல்கிறார் என்ற விவாதம் கிளம்பியது. பொட்டம்மானைத்தான் சுவாமி சொல்கிறார் என்று பலர் சொல்கிறார்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 29 பேர் தவிர பிரபாகரன், பொட்டம்மான், குமரன் பத்மநாபன், அகிலா ஆகிய நான்கு பேரின் பெயர்களும் வழக்கில் இருந்தன. அகிலா யார் என்று இன்னமும் அடையாளம் காண முடியவில்லை. குமரன் பத்மநாபன், 2009 போருக்குப் பின்னால் கைது செய்யப்பட்டு, இலங்கை அரசின் பாதுகாப்பில் இருந்து வருகிறார். பிரபாகரன் கொல்லப்பட்டதற்குச் சாட்சியாக, சில வீடியோ காட்சிகளை வெளியிட்டது இலங்கை இராணுவம்.

ஆனால், விடுதலைப்புலிகள் அமைப்பின் உளவுத்துறை தலைவராக இருந்த பொட்டம்மான் இறந்து விட்டார் என்பதற்கான ஆதாரங்களை இலங்கை அரசு இன்னும் வெளியிடவில்லை. அதனால், பிரபாகரனைவிட பொட்டம்மான் மீதான மர்மம் குறித்தே பேசப்பட்டது.

‘பொட்டம்மான் இறந்துவிட்டார்’ என இலங்கை அரசு மறுத்திருந்தாலும், சில ஆண்டுகளுக்கு முன்பு ‘பொட்டம்மான் தலைமையில் மீண்டும் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவு இயங்கி வருகிறது’ என எச்சரிக்கை விடுத்தது இன்டர்போல். மேலும், தேடப்படுவோர் பட்டியலில், பொட்டம்மானின் பெயரையும் சேர்த்தது. இந்த நிலையில்தான், சுவாமியின் டுவீட் முக்கியத்துவம் பெறுகிறது.

# புஸ்வாணமா?

“இறுதிக்கட்டப் போரின்போது சில உதவிகள் பெறுவதற்காக வெளிநாடு சென்றதால், பொட்டம்மான் உயிர் தப்பிவிட்டார். தற்போது அவர் இத்தாலியில் தஞ்சமடைந்துள்ளார். அவர்தான் உலகம் முழுவதிலும் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களை ஒருங்கிணைத்து மீண்டும் புலிப்படையை அமைத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

‘விடுதலைப் புலிகளின் எண்ணத்தை மீண்டும் நிறைவேற்ற சிலர் சில வேலைகளைச் செய்து வருகிறார்கள்’ என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் சொன்னார். அது பொட்டம்மானை மனதில் வைத்துச் சொன்னதுதான். பொட்டம்மான் அப்படிச் செய்தால், அவருக்கு உதவி செய்ய புலம்பெயர்ந்த தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் பண உதவி செய்ய, அதன் மூலமாக ஆட்களைத் திரட்டும் காரியங்களும் நடக்கும். அதனால்தான் மத்திய உள்துறையும் உளவுத்துறையும் இந்த விடயத்தில் சீரியஸாக கண்காணிப்பு காரியங்களைச் செய்து வருகிறது” என்று மத்திய உளவுத்துறை அதிகாரி ஒருவர் சொல்கிறார்.

“கடந்த 15 நாட்களில் தமிழக முகாம்களில் இருந்த 32 பேர் இலங்கைக்கு சட்டவிரோதமாக நாகை மாவட்டம், கோடியக்கரையிலிருந்து சென்றிருக்கிறார்கள். இதுபோல தமிழகத்திலிருந்து செல்லும் சிலர், இலங்கைக் கடற்படையிடம் சிக்குகிறார்கள். அப்போது, ‘எங்கள் வீடு, நிலங்கள், உடைமைகள் யாவும் இலங்கையில் உள்ளன. அவற்றை வைத்து வாழ்வதற்காகத்தான் வருகிறோம். தமிழ்நாட்டில் எங்களுக்கு எவ்வித உரிமையும் தராமல், கிட்டத்தட்ட கைதி போல நடத்துகின்றனர். எனவே, எங்களுக்குச் சொந்தமான பூமியில் எங்களை வாழ விடுங்கள்’ என்று கூறுகிறார்கள். அவர்களை மன்னித்து, அவர்களின் ஊர்களில் வாழ இலங்கை அரசு அனுமதிக்கிறது. அவர்கள் சில மாதங்கள் கழித்து பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் ஐக்கியமாகி விடுகிறார்கள் என்ற தகவலும் இலங்கை வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

ஆனால், இந்தத் தகவலை விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்புகள் மறுக்கின்றன. “மத்திய உளவுத்துறையால் கிளப்பிவிடப்படும் வதந்திகள்தான் இவை. ஏழு தமிழர்கள் விடுதலைக்குத் தடையாக இந்த விவகாரத்தைக் கிளப்புகிறார்கள். பொட்டம்மான் இத்தாலியில் இருக்கிறார் என்றால், இத்தாலி அரசாங்கத்திடம் கேட்டு அவரை இந்தியாவுக்கு நாடு கடத்தி அழைத்து வர வேண்டியது தானே? ராஜீவ் கொலை வழக்கில் பெயர் உள்ள குமரன் பத்மநாபன் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் 10 ஆண்டுகளாக இருக்கிறார். அவரை இந்தியாவுக்கு அழைத்து வர எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஜெயின் கமிஷன் விசாரணையை மீண்டும் தொடங்கினால், ராஜீவ் வழக்கின் பல மர்மங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிடும். துணிச்சல் இருந்தால் ஜெயின் கமிஷன் விசாரணையைத் தொடரட்டும்” என்கிறார் இயக்குநர் கௌதமன்.

ஜூனியர் விகடன்

# இது நம்ம கதைகள்... 04

## ஒரு நாயும், நல்லாயிருந்த ஊரும்

அன்று விடுமுறை நாள். காலை நேரம் வீட்டு மொட்டை மாடியிலிருந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்நேரம் ஒரு விசித்திரமான காட்சி. என்னால் நம்பமுடியவில்லை. கண்களை ஒருமுறை கசக்கி விட்டுப் பார்த்தேன். கனவல்ல நிஜம்தான். தடதடவென மாடிப் படிகளால் மூச்சிரைக்க ஓடி வீட்டு வாயிலுக்கு வந்தேன்.

தெருவிலொரு மரண ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. முன்னே ஒரு பிரேதப் பேழையை நான்கு பேர் தாங்கிச் சென்றனர். அடுத்து இன்னுமோர் பிரேதப் பெட்டியை வேறு நான்கு பேர் சுமந்து சென்றனர். அவற்றிற்குப் பின்னே கறுப்புடையணிந்த மனிதன் நாயொன்றை சங்கிலியில் பிணைத்து கூட்டிச் சென்று கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னே ஒருவர் பின் ஒருவராக சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்கள் வரிசையாக மரணஊர்வலத்திலே வந்து கொண்டிருந்தனர்.

இந்த வித்தியாசமான ஊர்வலத்தை பார்த்துக் கொண்டு என்னால் சும்மாயிருக்க முடியவில்லை.



ஆர்வக் கோளாறினால் நாயுடன் செல்லும் மனிதனிடம் உரையாடத் தொடங்கினேன். "இறந்து போனவர்கள் உங்கள் உறவினர்களா?" என்று கேட்டேன். "ஆம்" என்று தலையை ஆட்டிக் கொண்டு சொன்னான் "முன்னே சுமந்து செல்லப்படுவது என் மனைவி. அடுத்து காவிச் செல்லப்படுவது என் மாமியார்". மிகுந்த கவலையுடன் என் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டேன். "இவர்கள் எப்படி இறந்தார்கள்" என மெதுவான குரலில் கேட்டேன். அந்த மனிதன் சங்கிலியில் பிணைக்கப்பட்ட நாயைப் பார்த்து நீண்ட பெருமூச்சை விட்டுக் கொண்டே சொன்னான் "இது நாங்கள் அன்பாக வளர்த்த நாய். ஒரு நாள் என் மனைவி தான் ஆசையாகச் சமைத்த உணவை நாய்க்கு சாப்பிடக் கொடுத்தாள். நாயோ சாப்பிடாமல் அடம்பிடித்தது. தட்டிக் கீழே கொட்டியது. இப்படிச் செய்து தன் சமையலை அவமானப்படுத்தி விட்டதே என்று கோபத்தில் என் மனைவி நாய்க்கு அடித்தாள். உடனே நாய் மூர்க்கம் கொண்டு அவள் மேல் பாய்ந்து கடித்துக் குதறிக் கொன்றுவிட்டது". "அப்படியானால் உங்கள் மாமி இறந்தது எப்படி?" என்று மீண்டும் துருவினேன்" தன் மகளை நாய் கடிக்காது தடுக்க என் மாமியார் குறுக்கே பாய்ந்தார். ஆனால் அவரையும் குதறிக் கொன்று விட்டது இந்த நாய்" என்று நிம்மதிப் பெருமூச்சுடன் சொன்னான் அந்த மனிதன்.

"அது சரி பின்னே வருபவர்கள் உங்கள் உறவினர்களா? அவர்கள் எதற்காக வரிசையில் வருகிறார்கள்?" என்று துப்பறிவாளன் ஷேர்லொக் ஹோம்ஸ் போல் என் கேள்விக் கணையை தொடர்ந்தேன்" இல்லை அவர்கள் உறவினர்கள் இல்லை. என் மனைவியையும், மாமியையும் இந்த நாய் கடித்துக் கொன்று விட்டது என்ற செய்தியை அறிந்து நாயை தமக்கு வளர்க்கத் தரும்படி விலைபேசி வந்தவர்கள் இவர்கள்" என்றான் சற்று இறுமாப்புடன். "அப்படியானால் அவர்கள் வரிசையாக வருவது எதற்காக?" என்று வினவினேன் நான்.

"எதிலும் ஒரு தொழில் தர்மம் வேண்டும். எனவே அவர்கள் என்னிடம் நாயை விலைபேசி வந்த, ஒழுங்கின் வரிசையாக வரச்சொல்லியுள்ளேன். மனைவி மற்றும் மாமியின் நல்லடக்க ஆராதனைகள் நிறைவேற்றும் கோவில் கோட்டையில் வைத்தே நாயை ஏலம் விடப் போகிறேன்' என்றான் நீங்கமாக.

"மனைவி & மாமிக்கள் - 2" அடுத்து யாராக இருக்கும் என Big Boss பாணியில் சிந்தித்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தேன். வரிசையாகச் செல்லும் நபர்களைக் கடைக்கண்ணால் நோட்டம் விட்டேன். அந்த நாய் தங்களுக்குத்தான் கிடைக்கும் என்ற அசைக்க முடியாத எதிர்பார்ப்புடன் ஒவ்வொருவரும் நகர்ந்து கொண்டிருந்தனர்.

நம்பிக்கை தான் வாழ்க்கை.

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# வருங்காலத்தில் நாளொன்றுக்கு 25 மணித்தியாலம்

# பூமியை விட்டு விலகிக் கொண்டிருக்கிறது சந்திரன்




"தலைக்கு மேல வேலை.. ஒரு நாளைக்கு 24 மணி நேரம் தானே இருக்கிறது" - இப்படி சீன் போடுபவர்கள் பலர். இந்த அங்கலாய்ப்பு நிஜமாவதற்கு வருங்காலத்தில் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கின்றனர் புவியியல் விஞ்ஞானிகள். அதாவது பூமியில் நாட்கள் நீள்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்கிறது புதிய ஆய்வு.

பல பில்லியன் ஆண்டுகளாகப் பூமியில் நிலவும் நேர மாறுபாட்டிற்கும் நாட்கள் நீள்வதற்கும் காரணமாக நிலவு இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர் விஞ்ஞானிகள். அதாவது நிலவுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள தொலைவு அதிகரிக்க அதிகரிக்கப் பூமியின் சுழற்சி வேகம் குறைவது கண்டறியப்பட்டுள்ளது. சொல்லப் போனால் கிட்டத்தட்ட 140 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தற்போது உள்ள தொலைவில் நிலவு இருக்கவில்லை என்றும், அப்போது ஒரு நாள் என்பது 18 மணி 41 நிமிடங்களைக் கொண்டிருந்ததாகவும் ஆனால் தற்போது 24 மணி நேரம் கொண்டிருப்பதாகவும் வருங்காலத்தில் இது அதிகரிக்கவும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது நாம் பயன்படுத்துகின்ற இந்த 24 மணி நேரமானது பண்டைய எகிப்தியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. சிக்கலான, அதே வேளையில் சுவாரஸ்யமான கணிதமுறைகளால் இது உருவாக்கப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் எகிப்தியர்கள் நாளொன்றினை மூன்று பகுதிகளாகப் பிரித்தனர். முற்பகல் 10 மணி நேரம் கொண்டும், இரவு 12 மணி நேரம் கொண்டும், அந்தி வேளை 2 மணி நேரம் கொண்டும் பிரித்தனர்.

அமெரிக்காவின், விஸ்கான்சின் - மேடிசன் பல்கலைக்கழகத்தினைச் (University of Wisconsin-Madison) சேர்ந்த பேராசிரியர் ஸ்டீபன் மேயர்ஸ் (Stephen Meyers) மற்றும் அவரது குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வினைக் குறித்த தகவல்கள் Proceedings of the National Academy of Sciences என்ற ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டது. அதில் சுழன்று ஸ்கேட்டிங் செய்யும் நபருக்கும் (Spinning figure skater) அவருடைய கைகளின் அசைவுகளுக்கும் இடையேயுள்ள தொடர்பினை விளக்குவதன் மூலம், பூமியின் சுழற்சிக்கும் மற்றும் நிலவின் இருப்பிடத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை எளிமையாக விளக்கியிருக்கிறார் பேராசிரியர் மேயர்ஸ்.




சுழன்று ஸ்கேட்டிங் செய்யும் ஒருவர், சுழற்சியின் வேகத்தினைக் குறைப்பதற்கு தன்னுடைய கைகள் இரண்டையும் உடலிலிருந்து வெளிப்புறமாக நீட்டுவார். அதேபோலத் தான் பூமியின் சுழற்சி வேகமும். நிலவானது அதிலிருந்து தொலைவில் செல்லச் செல்ல குறைகிறது என்கிறார் பேராசிரியர். பொதுவாக பூமியின் சுழற்சியானது, விண்வெளியிலுள்ள பல்வேறு பொருட்களின் ஈர்ப்புவிசையால் பாதிக்கப்படுகிறது. இதில் நிலவினைத் தவிர பிற கோள்களும் (planets) அடங்கும். இந்த அனைத்துப் பொருள்களும்தாம் பூமியின் சுழற்சி மாறுபாட்டினை நிர்ணயிக்கும் காரணிகளாக விளங்குகின்றன. சூரியக் குடும்பத்தில் காணப்படும் பல்வேறு பொருள்களின் இயக்கங்களால்தாம் கடந்த பல கோடி ஆண்டுகளுக்கும் மேலாக பூமியில் நாளொன்றின் நேர நிர்ணயமானது பல்வேறு மாறுதலுக்குள்ளாகி இருக்கிறது. இந்த விண்வெளி பொருட்களின் இயக்கங்களில் ஏற்படும் எந்தவொரு சிறிய மாற்றமும் பூமியின் கால நேர நிர்ணயத்தில் பெரிய மாற்றங்களை உருவாக்கும். தற்போது நிலவு பூமியிலிருந்து வருடத்துக்கு 3.82 சென்டி மீற்றர் என்ற அளவில் விலகிச் செல்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

மேற்சொன்ன இந்தப் புவியின் கால நிலை சுழற்சியினைப் (Climate cycles) பற்றிய கருத்தாக்கங்களானது, 90 மில்லியன் ஆண்டுகள் பழைமையான பாறை ஒன்றின் படிவுகளில் (sediments) நடத்தப்பட்ட ஆய்விலிருந்து கண்டறியப்பட்டது. அதிலிருந்து பேராசிரியர் மேயர்ஸ் மற்றும் அவரது குழுவினர், சிக்கலான இந்தச் சூரியக் குடும்பத்தினைப் பற்றிய பல புதிய தகவல்களைக் கண்டறிந்தனர்.

இதுகுறித்து பேராசிரியர் மேயர்ஸ் கூறுகையில், ஆரம்பத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளில், அந்தப் பாறையின் படிமங்களின் முற்காலப் பதிவுகளைப் பற்றிய தேடல் தொடரத் தொடர முடிவுகளின் நம்பகத்தன்மை குறைவது போல உணர்ந்ததாகவும், பின்பு பூமி சுழற்சியின் அச்சு (axis of rotation) மற்றும் அதன் சுற்று வட்டப் பாதை வடிவத்தின் திசையிலுள்ள புவியியல் ரீதியிலான மாறுபாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பாறையின் படிமங்களை ஆய்வு செய்த போதே, நம்பத்தகுந்த மதிப்பீடுகளைப் பெற முடிந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த ஆய்வின் நோக்கம், "நாளொன்றின் நேரமாற்றத்தினைப் பற்றியது மட்டுமல்ல, நிலவுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள தூரத்தினைப் பற்றியும் தான். இந்த ஆராய்ச்சியின் முடிவு புவியியல் துறையில் மற்றுமொரு மகத்தான சாதனையாக அமையும்" என்கிறார் பேராசிரியர் மேயர்ஸ். ஒரு மணிநேரம் கூடுதலாக உங்களுக்குக் கிடைத்தால் அந்த நேரத்தை எதற்கு செலவழிப்பீர்கள்? தூங்கவா, வேலை செய்யவா, பொழுதுபோக்கவா?

# மெஸ்ஸியா? ரொனால்டோவா?



இத்தனை வருடங்கள் இருவரிடத்திலும் தெரியாத இந்த மிகப்பெரிய வித்தியாசம், இப்போது மட்டும் புலப்படுவது எப்படி? சொல்லப்போனால் ரொனால்டோவைவிடவும் மெஸ்ஸி டெக்னிக்கலி கொஞ்சம் ஸ்ட்ராங். ஆனால் அவர் சறுக்கியது எங்கே? கிளப் போட்டிகளில் இருவரும் தராசில் சரிசமமாய் நிற்கும் போது, சர்வதேசப் போட்டிகளில் மெஸ்ஸி தடுமாறுவது ஏன்? சுயநல வீரர் என்று பலராலும் கருதப்பட்ட ரொனால்டோ எப்படி இந்த வெற்றிகளை சாத்தியமாக்கினார்? உண்மையில் வீரர்களாக இருவரும் அந்த சமநிலையில் நிற்கும் தராசில் தான் நிற்கிறார்கள். ஆனால், ஒரு தலைவனாக ரொனால்டோ தன்னை வேறுபடுத்திக்கொண்டார். மெஸ்ஸி அங்கு தேங்கி விட்டார்.

ஸ்பெயின், மொராக்கோ அணிகளுக்கு எதிரான போட்டிகள் இரண்டிலுமே "கப்டன்" ரொனால்டோவின் ஆட்டமும் அணுகுமுறையும் ஆச்சர்யமளித்தது. ரியல் மாட்ரிட் அணிக்கு ஆடும் போது, ஒவ்வொரு வீரரின் பாஸும் தன்னையே டார்கெட்டாகக் கொண்டிருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார் ரொனால்டோ. தான் கோலடிக்கவேண்டும் என்ற எண்ணம் கடைசி நிமிடம் வரை இருந்துகொண்டே இருக்கும்.

பாக்ஸுக்குள் சென்றுவிட்டால் சமயங்களில் பாஸ் எனும் ஒப்ஷன் இருப்பதையே மறந்து விடுவார். ஏனெனில், குரூஸ், மோட்ரிச், இஸ்கோ, மார்செலோ என ஸ்டார்கள் நிறைந்த மாட்ரிட் அணியால், தான் தவறவிட்டாலும் வாய்ப்புகளை அடுத்தடுத்து உருவாக்கிட முடியும். ஆனால், போர்ச்சுகல் அணியால் நிச்சயம் முடியாது.

ஒவ்வொரு வாய்ப்புக்கும் தவம் கிடக்கவேண்டும். ரொனால்டோவின் பிளான்... ரொனால்டோவின் போர்ச்சுகல் பிளான் ரொம்பவே மாறியிருந்தது.

ஸ்பெயின் அணியுடனான போட்டியில் பாக்ஸுக்குள் ஒரு டிஃபண்டர் மட்டுமே இருக்கும்போது, கோலடிக்கத் தனக்கு 50 சதவிகித வாய்ப்பு இருக்கும்போது, இளம் வீரர் கிடஸுக்குப் பாஸ் கொடுத்தார் ரொனால்டோ. ஏனெனில், கோல் அடிக்க அவருக்கு தன்னைவிட வாய்ப்பு அதிகம். இதைத் தவறவிடக் கூடாது. யோசிக்காமல் மறு நொடியே பாஸ் செய்தார்.

ரசிகர்கள், போர்ச்சுகல் வீரர்கள், இவ்வளவு ஏன் கிடஸ் கூட அந்தப் பாஸை எதிர்பார்க்கவில்லை. அதேபோல் தான் கோல் அடிப்பதற்காக கிராஸ்கள் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று அஜெண்டாவை தன் அணிக்கு அவர் முன்வைக்கவில்லை. விங்குகளை விட போர்ச்சுகல் அணி சென்ட்ரல் மிட்ஃபீல்ட் வழியே தான் தன் ஆட்டத்தைக் கட்டமைத்திருந்தது.

அதற்கு ஏற்றாற்போல், தான் இடது விங்கில் ஆடாமல், சென்ட்ரல் ஸ்ட்ரைக்கர் பொசிஷனில் விளையாடினார் CR7. அதுமட்டுமல்ல, கார்னர் கிக்குகளில் அசால்டாக கோலடிக்கும் அவர், மொராக்கோ அணிக்கெதிராக கடைசி நிமிடத்தில் கிடைத்த கார்னரைக் கூட எடுக்கவிடவில்லை.

பொசஷனை இழந்து விடக்கூடாது என்பதற்காக கார்னர் கொடிக்கு அருகிலேயே பாஸிங் செய்யவைத்தார்.

அதுமட்டுமல்ல, வழக்கமாக மாட்ரிட் வீரர்கள் கொஞ்சம் சொதப்பும்போது, முகத்தைச் சுளித்து தன் சங்கடத்தை வெளிப்படுத்துவார். ஆனால், இங்கு அதுவும் இல்லை. மிகப்பெரிய தவறுகள் செய்தாலும், அதை சகஜமாக எடுத்துக்கொள்கிறார். உன்னால முடிஞ்சது நீ பண்ணு, மத்தத நான் பாத்துக்குறேன் என்பதுதான் அவர் தன் வீரர்களிடம் சொல்வது. இதுதான் ரொனால்டோ என்னும் கப்டன் செய்தது.




இங்கு போர்ச்சுகல் வீரர்கள் எந்த இடத்திலும் தங்களின் ஆட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ரொனால்டோவும் தன் ஆட்டத்தை மாற்றிக்கொள்ளவில்லை. தன் அணுகுமுறையை மட்டும் கொஞ்சம் மாற்றிக்கொண்டார். சக்சஸ்! சரியான திட்டமிடல், ரொனால்டோவுக்கும் மற்ற வீரர்களுக்கும் இடையில் ஒரு பாலமாய் அமைந்தது. இது இந்த இரண்டு போட்டிகளில் மட்டுமல்ல, கடந்த 2 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. அதனால்தான் இந்தப் போர்ச்சுகல் அணியால் யூரோ கோப்பை வெல்ல முடிந்தது. பலமான ஸ்பெயின் அணியின் டிஃபன்ஸுக்கு ஆட்டம் காட்ட முடிந்தது.

மெஸ்ஸி..? தன் தரத்துக்கு தன் அணியினர் விளையாட வேண்டும் என்று எதிர்பார்த்தார். இன்னமும் எதிர்பார்க்கிறார். மெஸ்ஸி எல்லோரும் சொல்வது போல் Came from a different planet தான். அவரது ஆட்டம் ஏலியன் லெவலில் இருக்கும். இந்த ஆர்ஜென்டினா வீரர்கள் மிகச்சிறந்த வீரர்கள்தான். ஆனால், அந்தத் தரத்துக்கு அவர்களால் ஆட முடியாது. பார்சிலோனாவின் ஜாவி, இனியஸ்டா போன்ற மகத்தான ஜாம்பவான்கள் மெஸ்ஸியின் ஆட்டத்தை நுணுக்கமாக அறிந்தவர்கள், மெஸ்ஸி எப்படிப் பாஸ் செய்வார், ஒரு பாஸுக்கு எப்படி நகர்வார் என்று நன்கு உணர்ந்தவர்கள். டி மரியாவோ, பனேகாவோ அப்படிப்பட்டவர்கள் கிடையாது. அவர்களால் அப்படி ஆகவும் முடியாது. ஆனால், அவர்கள் அப்படி ஆடவேண்டும் என்று மெஸ்ஸி எதிர்பார்க்கிறார்.

ஆர்ஜென்டினா அணியின் ஒவ்வொரு திட்டமும் அவரைச் சுற்றியே வகுக்கப்படுகிறது. அது தவறில்லை. ஆனால், அதற்காக மற்ற வீரர்கள் தங்களின் ஸ்டைலை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதில்தான் பிரச்சினை. மெஸ்ஸி இருப்பதால், மற்ற முன்கள வீரர்கள் செய்யக்கூடிய டிரிப்ளிங், ஷாட்ஸ் என அனைத்தின் விகிதமும் குறையும். ஏனெனில், மெஸ்ஸிக்குப் பாஸ் போடுவதுதான் அவர்களின் வேலை. அந்த அணி இங்கேயே பாதி தோற்றுவிட்டது. சரி, களத்திலாவது ஒரு உத்வேகம் கொடுக்கிறாரா? அதுவும் இல்லை.

எதிரணி ஒவ்வொரு கோல் அடிக்கும்போதும் தரையை குனிந்து பார்க்கிறார். தன் ஜெர்சியால் முகம் துடைக்கிறார். அவ்வளவுதான். பெஞ்சில் அமர்ந்திருந்த மார்கோஸ் ரோயோ கொடுத்த அளவுக்குக்கூட வீரர்களுக்கு கப்டன் மெஸ்ஸி உத்வேகம் தரவில்லை.

குரோஷிய வீரர் ரகிடிச்சுடன் ஓட்டமெண்டி மோதலில் ஈடுபட, இரண்டு அணி வீரர்களும் மொத்தமாக வாக்குவாதம் செய்து கொண்டிருக்க, அதிலும் ஈடுபாடு காட்டாமல் ஓரமாக நிற்கிறார். ஆட்டம் முடிந்ததும் எந்த வீரரையும் பார்க்காமல் வேகவேகமாக வெளியேறுகிறார்.

2 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெறுகிறேன் என்று அறிவித்தார். நேற்றுக்கூட குரோஷிய வீரர் ஸ்ட்ரினிச் ஃபௌல் செய்த போது, அவரிடம் தன் ஆதங்கத்தைக் கோபமாகக் காட்டினார் "மிஸ்டர் கூல்". ஒரு கப்டன் என்ன செய்யவேண்டும். மோசமான தருணங்களில் தன் அணியின் பின்னால் நிற்க வேண்டும். ஆனால் நிற்பதில்லை. இப்படியெல்லாம் தன் நடத்தையின் மூலமாகவே, தன் அணியினரின் மனதில் ஒரு குற்றவுணர்ச்சியை விதைத்து விட்டார் மெஸ்ஸி.

மெஸ்ஸி கோப்பை வென்று தரவில்லை என்று குற்றம் சொல்லும் ஒவ்வொரு ஆர்ஜென்டின ரசிகனின் கருத்தோட்டம் இதுதான்: "எந்த ஆர்ஜென்டினா வீரரும் தேசிய அணிக்காக ஜொலிப்பதில்லை. ஆனால், பார்சிலோனா அணிக்கு ஒற்றை ஆளாக போட்டியை வென்று தரும் மெஸ்ஸியால் ஏன் ஆர்ஜென்டினாவுக்கு வென்று தர முடியவில்லை.

இந்த எண்ணம் உள்ளவர்கள் நாளையும் மெஸ்ஸியைத்தான் நம்புவார்கள். மெஸ்ஸி மீது கோபம் இருந்தாலும், நம்பிக்கை இருக்கிறது. ஆனால், மற்றவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையே இல்லை. வென்று தந்தால் மெஸ்ஸிதான் வென்று தரவேண்டும் என்று நினைப்பவர்கள். மற்ற வீரர்களின் இமேஜ் மெஸ்ஸியின் நடத்தைகளால் சுக்குநூறாகி வருடங்கள் ஆகிறது. இனி ஆர்ஜென்டினா எனும் குழந்தை வளரப்போவதில்லை. இதைக்கூட ஆகத் தாங்கிச் சடங்க. சில புதிய வீரர்கள் வரவேண்டும். அவர்கள் வேறு கிரகத்திலிருந்து வந்தவர்களாக இல்லாமல் இருக்கவேண்டும். இல்லையேல் ரொனால்டோபோல் Greatest Of All Time-ஆக இருக்க வேண்டும்!

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உத்தமன்
இசை : கே.வி.மகாதேவன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : ரி.எம்.சௌந்தரராஜன்



கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே
கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே

பாவத்தை கண்டால் விலகி விடு
பாதையை பார்த்து நடந்து விடு
பாவத்தை கண்டால் விலகி விடு
பாதையை பார்த்து நடந்து விடு
ஆபத்தை சந்திக்க துணிந்து விடு
அழுவதை மட்டும் மறந்து விடு
ஆரத்தி விளக்கும் நாதத்தின் ஒலியும்
ஆலய மணியும் நீயே நீயே
கேளாய் மகனே...
கொள்ளும் கொள்கையில் குரங்காக
கொடுமையை கண்டால் புலியாக
கொள்ளும் கொள்கையில் குரங்காக
கொடுமையை கண்டால் புலியாக
குறி வைத்து பார்பதில் கொக்காக
குணத்தில் யானையின் வடிவாக
ஆடிடும் மானும் ஆனந்த மயிலும்
பேசிடும் கிளியும் நீயே நீயே
கேளாய் மகனே கேளொரு
தந்தை கொடுத்தது தாயிடமே
தாயார் கொடுத்தது என்னிடமே
தந்தை கொடுத்தது தாயிடமே
தாயார் கொடுத்தது என்னிடமே
அன்னை இருப்பது தனி இடமே
ஆயினும் அவள் மனம் உன்னிடமே

கோடை நிழலும் வாடை கனலும்
கோபுர விளக்கும் நீயே நீயே
கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே
கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே

# புலிகள் வாழ்ந்த தேசத்தில் புலிக்கு நேர்ந்த கதி!

காலத்தின் கட்டளைக்குள் கட்டுண்டு போன நாம், காலத்தை விட வேகமாய் ஓடுகின்றோம். நாம் ஓடும் பாதையின் முடிவு மரணம் என்பதை மறந்து விட்டதால்தான், இன்று மரணித்து விட்டது மனிதம்.

தமிழரின் ஜனநாயகப் போராட்டத்தில் உச்ச பலமாக இருந்தது தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம். அன்று தலை தூக்கி நின்ற மனிதம் இன்று வழி தவறிச் சென்று கொண்டிருக்கின்றது என்பது வேதனைக்குரிய விடயம்.

கிளிநொச்சியில் நடத்தப்பட்ட புலி வேட்டை தமிழர்கள் மத்தியில் பெரும் வாத, பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் அந்தப் பகுதி மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திய புலி ஒன்று இளைஞர்கள் குழுவொன்றினால் கொடூரமான முறையில் அடித்துக் கொலை செய்யப்பட்டது.

வன ஜீவராசி திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் உட்பட பத்துப்பேரை தாக்கிய சிறுத்தை புலி அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறிய நிலையில், ஆறு மணிநேர போராட்டத்தின் பின்னர் கொலை செய்யப்பட்டது.

மக்களைப் பாதுகாக்க புலி கொலை செய்யப்பட்டாலும், அதன் பின்னரான இளைஞர்களின் செயற்பாடு பெரும்பாலான மக்களின் மனங்களை நோகடிக்கச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் ஆண்ட மண்ணில் புலியொன்று மனிதாபிமானமற்ற முறையில் கொல்லப்பட்டதாக பலரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

அடித்துக்கொலை செய்த புலியை கொஞ்சம்கூட மனிதாபிமானமின்றி இழுத்துச் சென்றுள்ளனர். இது நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டிய செயல். அது மட்டும் இல்லை. உயிரை துடிதுடிக்கக் கொன்று விட்டு செல்பி எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தனர்.

ஒரு காலகட்டத்தில் இலங்கையில் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் யுத்தம் தொடங்கியவேளை புலிகளின் மூன்றாம் இலக்க முகாமில் ஒரு சிறுத்தைக்



குட்டியும் இருந்துள்ளது.

சங்கானைக்கும் சண்டிலிப்பாய் பகுதிக்குமிடையில் திடீரென இந்திய இராணுவத்தோடு மோதல் ஆரம்பித்துள்ளது. இதில் சிறுத்தை மிரண்டு ஓடி விடாமலிருக்க ஒரு சாக்குப் பையில் போட்டு கட்டி வைத்து விட்டு சண்டையை எதிர்கொண்டுள்ளனர்.

பல மணிநேரம் நீண்ட சண்டையில் ஒரு போராளி உயிரிழந்துள்ளார். இதன்போது காயமடைந்தவர் இறந்த போராளியின் உடலையும், சிறுத்தைக் குட்டியையும் சுமந்து கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது, முற்றுகையை உடைத்து புலிகள் அளவெட்டி பக்கம் போனதும் போராளியின் உடலை புதைத்து விட்டு சிறுத்தைக்கு உணவு கொடுக்க சாக்குப் பையை அவிழ்த்தபோது மிரண்டு போயிருந்த சிறுத்தை பலரை விறாண்டி கடித்துள்ளது. அதை சுட்டுக் கொன்றுவிட ஒரு செக்கன் போதுமானது.

ஆனால் அதனை பிடித்து பற்றைக் காடும் பனை மரங்களும் அதிகமாக இருந்த விளான் பகுதியில் விட்டுச் சென்றுள்ளார்கள். இதுதான் மனிதம்...

சில காலத்தின் பின்னர், பிரபாகரன் வளர்த்த செல்லப் பிராணி தெல்லிப்பழையில் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டது. விரைவில் பிரபாகரனையும் பிடித்து விடுவோம் என்று இராணுவ அதிகாரிகள் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

அது மட்டும் இல்லை, அந்த சிறுத்தைக் குட்டியின் படத்தோடு செய்தி வெளியாகியிருந்தது. அன்றிரவே தெல்லிப்பழையில் இந்திய இராணுவம் மீது தாக்குதலும் நடந்தது.

கிளிநொச்சியில் அடித்துக் கொல்லப்பட்ட சிறுத் தைக் குட்டியை பார்த்த போது இந்த காட்சி அனைத்தும் கடந்த காலத்தை கண் முன் நிறுத்தி விட்டது.

காலை 6.30 மணியளவில் மக்கள் குடியிருப்பிற்குள் புகுந்த சிறுத்தையை மதியம் 12.30 கொலை செய்துள்ளனர். இங்கு ஒரு கேள்வி எழுகின்றது.

இந்த இடைப்பட்ட ஆறு மணித்தியாலங்களுக்குள் சிறுத்தையை கிராமத்தை விட்டு அப்புறப்படுத்த முடியாத செயலற்ற நிலையில்தான் வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளதா... ?

காட்டில் விலங்குகள் வாழும் இடத்தை எல்லாம் தற்போது மனிதர்கள் ஆக்கிரமித்து விட்டனர். காட்டில் உள்ள விலங்குகள் எங்குதான் செல்லும்...?

வேறு வழியில் சிறுத்தை புலியை பிடிக்க முயற்சி செய்து இருக்கலாம். சம்பவ இடத்தில் கிளிநொச்சி பொலிஸார், கிராம அலுவலர், வன ஜீவராசி திணைக்கள உத்தியோத்தர் என பலரும் கூடியிருந்தனர்.

அது மட்டும் இன்றி, சிறுத்தை நடமாட்டம் குறித்து மக்கள் அறிவித்த போது சம்பவ இடத்திற்கு வெறுங்கையுடன் சென்ற வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இந்த சம்பவத்திற்கு பொறுப்புடையவர்கள். வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

கருவில் சுமந்த விதையின் சுவற்றை ஓங்கி மிதித்து உயர்ந்து வளரும் மரங்கள் போலே எமது மண்ணில் மனிதம் மீண்டும் மலரட்டும்... அப்போதுதான் இனி வரும் இளைய தலைமுறை சிறப்பாக இருக்கும்.

-தமிழ்வின்-

# இல்லத்தரசிகளுக்கு



• முட்டையை வேக வைக்கும் போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்கு, வேக வைக்கும் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி வினிகரை விடவும். அவ் வாறு விட்டால், முட்டையின் ஓடு வெடித்தாலும் கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.

• பாலை காய்ச்சுவதற்கு முன், அந்த பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்த பின்னர் காய்ச்சினால், பால் பாத்திரத்தில் அடி பிடிப்பதை தவிர்க்கலாம்.

• பால் புளிக்காமல் இருப்பதற்கு, ஏலக்காயை பால் காய்ச்சும் போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்திற்கு பால் புளிக்காமல் இருக்கும்.

• தோல் உரித்த உருளைக்கிழங்குகளை கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரைத் தெளித்து குளிர்சாதனப் பெட்டியில் அதை வைக்கவும்.

• எண்ணெய்க்கறையை அழிப்பதற்கு, எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.

• காளான்களை அலுமினியம் பாத்திரங்களில் சமைக்கக் கூடாது. ஏனென்றால் அவை பாத்திரத்தை கருமையாக மாற்றிவிடும்.

• சாம்பார் உள்ளிட்ட குழம்பு வகைகளில் உப்பு அல்லது காரம் அதிகமாகிவிட்டதா? கவலை வேண்டாம். ஒரு தக்காளிப் பழத்தை சிறு துண்டுகளாக்கி நறுக்கிப் போட்டுக் கொதிக்க வையுங்கள். உப்பு அல்லது காரம் சரியாகிவிடும்.

எண்ணெய் காறலை போக்க...

• வடை, போண்டா தயாரித்த எண்ணெய் காறலாக இருக்கும். இதை போக்க ஒரு வழி. எண்ணெயில் கோலியளவு புளியைப் போட்டு அது கருகிய பின் எடுத்து விடவும். இப்படி செய்தால் எண்ணெயின் காறல் குறைந்துவிடும்.

• துணிகளில் எண்ணெய் கறையோ, கிரீஸ் தாரோ பட்டு விட்டால் அவற்றைத் துவைக்கும் போது சில சொட்டுக்கள் நீலகிரித் தைலம் விட்டுக் கழுவினால் கறைகள் போய்விடும்.

• எவர்சில்வர் பாத்திரங்கள் நாளடைவில் பளபளப்பு மங்கி னால் வாரத்துக்கு ஒரு முறை விபூதியைக் கொண்டு நன்கு தேய்த்து வாருங்கள். வெள்ளிப் பாத்திரங்கள் போல் மின்னுவதைப் பார்க்கலாம்.

# விஜய் - அரசியல், சினிமா இரண்டும் ஆரம்பம்!

விஜய் ஹீரோவாக அறிமுகமான 'நாளைய தீர்ப்பு' படம் வெளியான 1992ஆம் ஆண்டைக் கணக்கில் கொண்டு, சினிமாவுக்கு வந்த 25வது ஆண்டு என்று 'மெர்சல்' வெளியீடு சமயத்தில் கொண்டாடினார்கள். ஆனால், விஜய் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான 1984ம் ஆண்டைக் கணக்கில் கொண்டால், இது அவர் சினிமாவுக்கு வந்த 35ஆம் ஆண்டு. ஜூன் 22ஆம் திகதி அவரின் பிறந்த நாள். சினிமாவிலிருந்து அடுத்த அரசியல் வரவு இவர்தான் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அவரின் அரசியல் வருகை, அடுத்தடுத்த படங்கள் குறித்துப் பார்ப்போமா?

**சினிமா**

காதல், காமெடி, அக்ஷன் படங்கள் வரிசையில் கருத்து சொல்லும் அரசியல் படங்களை இப்போது தேர்ந்தெடுக்கிறார் விஜய். கதை சொல்ல வரும் இயக்குநர்களும் இந்த அரசியல் சூழலை மனதில் வைத்தே கதை சொல்கிறார்களாம்.

ஆனால், "அரசியல் களத்துக்குள் கதையைத் திணிக்காதீங்ணா. கதையின் போக்கில் அரசியல் இருந்தா ஓ.கே. நிறைய அன்பும் கொஞ்சம் வம்புமா ஸ்கிரிப்ட் பண்ணுங்க. ஏன்னா, மக்கள் தியேட்டருக்கு வரணும் ரசிக்கணும்" என்பது விஜய்யின் கருத்து. முருகதாஸ் இயக்கத்தில் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படத்திலும் அரசியல் இருக்கிறது. பழ.கருப்பையா முதல்வர் வேடத்தில் நடிக்க, அவர் முன்னிலையிலேயே தீவிரமான அரசியல் வசனங்களை விஜய் பேசும் காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டது.

அடுத்து தன் 63வது படத்துக்காகப் பலரிடமும் கதை கேட்டிருக்கிறார். அதில் வெற்றிமாறன், பா.ரஞ்சித், அட்லி, எச்.வினோத் ஆகிய நால்வரும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்கள். விஜய்படத்தை அடுத்து இயக்கப்போகிறவர் யார் என்பது ஜூலையில் தெரிந்துவிடும்.

**ரசிகர்கள்**

92இல் ரசிகர்மன்றம், பிறகு நற்பணி மன்றம், 2001 இலிருந்து 'விஜய் மக்கள் இயக்கம்.' தொடக்கத்திலிருந்தே மாதாமாதம் நேரம் ஒதுக்கி ரசிகர்களைச் சந்திப்பது விஜய்யின் வழக்கம். ஆனால் பெரிய பட்ஜெட், படப்பிடிப்பு நாள்கள் அதிகம் என்ற சினிமா காரணங்களால் மாதாமாதம் நடந்த சந்திப்பு, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை எனத் தற்போது சுருங்கியிருக்கிறது. ஆனாலும் தொடர்ச்சியாக ரசிகர்களைச் சந்திப்பதையே விஜய் விரும்புகிறார்.

ஒரு சந்திப்புக்கு இரண்டாயிரம் ரசிகர்கள் என்பதுதான் கணக்கு. விஜய் சரியாகக் காலை 10 மணிக்கு வருவாராம். முதல் பாதியில் ஆயிரம் பேர், மதியத்துக்கு மேல் ஆயிரம் பேர் என, வந்திருக்கும் இரண்டாயிரம் பேரிடமும் தனித்தனியாக நின்று, தோள்மீது கைபோட்டுப் புகைப்படம் எடுத்துக்கொள்கிறாராம்.

காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை உணவும் ரசிகர்களுக்கு உண்டு. மாலை கிளம்பும் போது இரவு உணவையும் அங்கேயே முடித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்பதே இதற்குக் காரணம். அந்தச் சந்திப்பில், 'உங்கள் பகுதியில் உதவி தேவைப்படுவோருக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். நம் இயக்கம் சார்பாகவும் செய்யலாம். உங்களால் உதவ முடியவில்லை என்றால், மக்கள் பிரதிநிதிகளிடம் பரிந்துரை செய்யுங்கள். ஆனால், விஜய்யின் மக்கள் இயக்கமும், குறிப்பிட்ட அரசியல் கட்சியும்



சேர்ந்து உதவின என்பது போன்ற அரசியல் சாயம் வராததுபோல் இருக்க வேண்டும்' என்பாராம்.

**சமூகம்**

சமூக விடயங்களை அப்டேட் செய்துகொள்வதில் விஜய்க்கு ஆர்வம் அதிகம். ஜல்லிக்கட்டுக்கான மெரினா போராட்டத்தில் கலந்துகொண்டதுகூட அவர் திடீரென்று எடுத்த முடிவுதானாம். அதிகாலை 1.15 மணிக்குத் தன் உதவியாளரை அழைத்து, 'மெரினாவுக்குப் போகலாம்' என்று சொல்லி, கிளம்பியிருக்கிறார். அரியலூர் அனிதா வீட்டுக்குச் செல்லும் முடிவும் முதல் நாள் இரவுதான் எடுக்கப்பட்டதாம்.

ஆனால், சமீபத்தில் விஜய் தூத்துக்குடி சென்றுவந்தது திட்டமிடலாம். அங்கு போவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு அதன் பக்கத்து மாவட்டத்து 'விஜய் மக்கள் இயக்க' இளைஞர்களைச் சென்னைக்கு அழைத்திருக்கிறார். 'எந்தெந்த வீடு எங்கெங்க இருக்குன்னு பார்த்துக்கங்க. டூவீலர்ல போறோம். பார்க்கிறோம். கிளம்புறோம். இந்தத் தகவலை வேறு யாரிடமும் சொல்லக்கூடாது' என்று சொல்லியிருக்கிறார். சென்னை டு மதுரை விமானத்தில் சென்றால் கூடத் தெரிந்துவிடும் என்பதால் வீட்டிலிருந்து வீதி வழியாகவே ஒன்பது மணிநேரம் பயணம் செய்து தூத்துக்குடி சென்றாராம். அதுவும் அங்கு தன் ரசிகர் ஒருவரின் வீட்டில் ஒரு மணிநேரம் தங்கிவிட்டு, துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த அனைவரின் வீடுகளுக்கும் பைக்கிலேயே சென்று வந்திருக்கிறார்.

பிறகு இரவோடு இரவாகப் பயணம் செய்து சென்னை திரும்பிய பிறகுதான் அவர் தூத்துக்குடி சென்றுவந்த செய்தி பிரேக்கிங் ஆகியிருக்கிறது. 'ஏன் இந்த ரகசியம்' என்று யாராவது கேட்டால், 'நமக்கு சினிமாவில கிடைக்கிற விளம்பரமே போதும்' என்பாராம்.

**பேர்சனல்**

வீட்டில் உள்ளவர்களுக்கு நேரம் ஒதுக்க வேண்டும் என விரும்புபவர் விஜய். மாதத்தில் முதல் நாளிலிருந்து தொடர்ந்து 20 நாட்கள் படப்பிடிப்பு என்றால் கடைசி 10 நாள் முழுவதும் குடும்பத்துக்குத் தான். அந்தப் பத்து நாள் முழுவதும் காலையில் அலுவலகம், மதியத்துக்கு மேல் வீடு என்றே இருப்பாராம். அதேபோல அந்த 10 நாட்களும் மகனைப் பள்ளியிலிருந்து அழைக்க இவரே நேரில் செல்வாராம். சமயங்களில் மகன் விளையாடும் கிரிக்கெட் போட்டியைப் பார்க்கவும் செல்வதுண்டாம். பள்ளியில் தன் மகன் சஞ்சயின் நண்பர்களிடம் மணிக்கணக்கில் பேசுவாராம். மகன் சஞ்சய் இந்த வருடம் கல்லூரி போகிறார். மகள் திவ்யா 8ம் வகுப்பு.

தன் வீடு மற்றும் அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு ஞாயிறு விடுமுறை. அன்று அவர்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது. **யாராவது அவர்களை ஞாயிறு அழைக்கச் சொன்னால், உறுதியாக மறுத்துவிடுவாராம் விஜய்.**

**நண்பர்களின் வீட்டு விசேஷங்**களுக்குச் செல்லும்போது சமயங்களில் இரவு தங்க நேர்ந்தால், ஏசி அறை, குஷன் பெட் என்று எதையும் எதிர்பார்க்க மாட்டாராம். சாதாரணமாகத் தரையில் பெட்ஷீட் விரித்துப் படுத்துவிடுவாராம். சமீபத்தில் வெளிநாடு போயிருந்த போது இரவு சாப்பிட்டுவிட்டு நண்பர்கள் தூங்கியிருக்கிறார்கள். ஆனால், விஜய் கிச்சனை முழுவதும் சுத்தம் செய்துவிட்டுதான் படுத்தாராம். உணவை வேஸ்ட் செய்வது பிடிக்கவே பிடிக்காது - ஒரு பருக்கையைக்கூட வீணாக்கமாட் டாராம்.

**அரசியல்**

சாதாரண மனிதர்களுக்கு இருப்பதைப்போல், 'ஏன் அப்படிப் பண்ணினார். இப்படிப் பண்ணியிருந்தா நல்லா இருந்திருக்கும்ல' என்று தமிழக அரசியல் குறித்து விஜய்க்கும் நிறைய ஆதங்கங்கள் உண்டு. அதை நெருங்கியவர்களிடம் பகிர்ந்துகொள்வார்.

விஜய் மக்கள் இயக்கம் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக அமைந்துள்ளன. அதை அரசியல் இயக்கமாக மாற்றுவதில் இவருக்கு எவ்வித சிரமமும் இருக்காது. ஆனால் கமல், ரஜினி இருவரின் அரசியல் செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன என்பதைக் கூர்ந்து கவனித்துவருகிறார் தளபதி. அடுத்தடுத்து நடைபெறும் நிகழ்வுகளை வைத்து, உடனடியாக வரலாமா, கொஞ்சம் தள்ளிப்போடலாமா என்பதை முடிவு செய்வார். ஆனால், அவர் அரசியலுக்கு வருவதும் உறுதி. அரசியல் வருகைக்கு நீண்ட காலம் பிடிக்காது என்பதும் உறுதி" என்கிறது விஜய்யின் நெருங்கிய வட்டாரம்.

ஆக மொத்தம் விஜய் அரசியலுக்கும் ரெடி. அரசியல் சினிமாவும் ரெடி!




# இது சிங்கள பௌத்த நாடு!

## வெள்ளை விரிப்பில் வெளியேவந்த காவி

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நீடித்த ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது என அரசு அறிவித்துள்ள போதும் போரின் எச்சங்களாக துருப்பிடித்த ஆயுதங்களும் மனித எலும்புக்கூடுகளும் நாளாந்தம் மீட்கப்பட்டு வருகின்றன.

ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் படுகொலைகளும் இன்னும் கட்டுப்படுத்தப்படவில்லை. தெற்கில் பாதாள உலகக் கோஷ்டிகளின் அராஜகமும் வடக்கில் வாள்வெட்டுக் குழுக்களின் வன்முறைகளும் தலைவிரித்தாடுகிறது.

தமிழரை அழிவுப் பாதைக்கு இழுத்துச் சென்ற உள்நாட்டுப் போர் முள்ளிவாய்க்கால் பேரவலம் வரை நீடித்து தமிழினம் அழிக்கப்பட்ட பின்னரே ஓய்ந்தது.

இனப்படுகொலைக்குள்ளான தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நம்பகமான பொறிமுறையை உருவாக்கக்கோரி தமிழர்கள் எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்தனர். தற்போதும் பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

போரில் ஈவு இரக்கமின்றி கொன்றொழிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க எந்தவொரு பொறிமுறையையும் உருவாக்க முன்வராத அரசு, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமைகள் மீறலில் ஈடுபட்ட அரச படைகளைப் பாதுகாப்போம் என்ற வாக்குறுதிகளை மட்டும் மறக்காது வழங்கி வருகிறது.

பாதிப்புக்களுக்கு முகங்கொடுக்காத - போர்க்குற்றங்களைப் புரிந்த படையினரைப் பாதுகாப்பதில் காட்டும் அக்கறையை இனவழிப்புக்குள்ளான தமிழர்கள் மீது இம்மியும் காட்டவில்லை.

இந்த விவகாரத்தில் நல்லாட்சி என்று சொல்லும் மைத்திரி தலைமையிலான அரசும் மகிந்த தலைமையிலான அரசும் ஒற்றுமையைப் பேணிவருகிறது.

அதேவேளை, மகிந்தவின் ஆட்சியை அகற்றினால் தமிழர்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதியளித்து வாக்கு வேட்டையாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று மௌனமாக இருப்பது நீதியை எதிர்பார்த்த மக்களுக்கு வேதனையை அதிகரித்துள்ளது.





போரிலே பல்லாயிரக்கணக்கானவர்களை கண்முன்னே காலனிடம் காவுகொடுத்தவர்கள் படையினரிடம் நேரில் கையளித்தவர்களையும் வெள்ளைவானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் மீட்டுத் தரக்கோரி தமிழர் தாயகத்தில் 500 நாட்களைக் கடந்த நிலையில் கண்ணீருடன் காத்திருக்கின்றனர்.






இதேவேளை எந்தவித குற்றச்சாட்டுக்களும் ஆதாரங்களும் இன்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் போன்று தந்தையின் வருகையை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் தவிப்பை யார் தான் உணர்வார்கள்?

காணாமற்போனவர்களின் உறவினர்கள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு விரைந்து நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழ் மக்கள் கண்ணீருடன் காத்திருப்பதைக் கண்டுகொள்ளாத அரசு இன முரண்பாடுகளுக்கு வித்திடுவோரை விடுவித்து அச்சத்தை அதிகரித்து வருகிறது.

காணாமற்போன கணவனை உயிருடன் மீட்கப் போராடிவரும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவுக்கு நீதிமன்றில் வைத்து எச்சரிக்கை விடுத்தார் என்ற குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டு பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இருப்பினும் அவர் சில நாட்களிலேயே பிணையில் வெளிவந்துள்ளார்.

பௌத்த துறவிகளுக்கு இந்த நாட்டில் எந்தவிதமான தீங்கும் நிகழாது என்பதை பட்டவர்த்தனப்படுத்தும் வகையில் வெள்ளை விரிப்பில் வெண்கொற்றக் குடையின் கீழ் தாமரை மலர் தூவ வெளியே வந்த ஞானசார தேரர் வெளிநாடுகளுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது சிங்கள பௌத்த நாடு. இங்கே சிங்களவர்கள் மட்டும்தான் வாழ முடியும். தமிழர்கள் இந்தியாவிற்கும் முஸ்லிம்கள் அரபு நாடுகளுக்கும் ஓடிவிடுங்கள் என்று பகிரங்கமாக பத்திரிகையாளர் மாநாட்டில் பல தடவைகள் எச்சரித்த ஞானசார தேரருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இருப்பினும் இது சிங்கள பௌத்த நாடுதான். இங்கே, சிங்களவர்களும் பௌத்த துறவிகள் வேடம் பூண்டுள்ளோரும் எதை வேண்டுமானாலும் செய்வார்கள்.

எதிர்த்துக் கேட்டால் எச்சரிப்பார்கள்; வர்த்தக நிலையங்களைத் தீக்கிரையாக்குவார்கள். நீதியை நாடினால் நீதிமன்றில் வைத்தே திட்டித் தீர்ப்பார்கள்.

ஒரு வேளை அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கினால் போராட்டங்களை நடத்தி நினைத்ததை சாதிப்பார்கள்.

இலங்கையின் சட்ட நடைமுறைகளிலும் இவர்களால் இஷ்டப்படி மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்களும் பௌத்த பீடங்களின் சொற்படியே நடப்பார்கள். பௌத்த மகா சங்கங்களின் ஆசியுடன் நாட்டை ஆள்பவர்கள் மக்களின் நலன்களைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்.

ஏனெனில் இது சிங்கள பௌத்த நாடு!

எஸ். ஆர்.கரன்


facebook

# முதலை செய்த கொலை

(சென்றவார தொடர்ச்சி)

அதோடு மாப்பிநோனா தன்னைப் போல் இல்லை என்பதும் சிங்கோவின் வாதம். அந்த நிலையில் மங்கோநோனா திரும்பவும் 1948 இல் கருவுற்றாள். ஒரு குழந்தை பிறந்து இறந்தது.. சிங்கோவின் வீட்டுக்கு ஜெயசேன என்ற வாலிபன் அடிக்கடி வந்து போவான். சிங்கோவின் சந்தேகம் அவன் மேல் விழுந்தது. தினமும் வீட்டில் வாக்கு வாதம். சில நேரம் கோபத்தில் மங்கோநோனாவையும், மாப்பிநோனாவையும் சிங்கோ அடித்து விடுவான். ஒருநாள் அவனின் தொந்தரவு தாங்க முடியாமல் தன் தரய் வீட்டுக்கு மகளோடு போய் மங்கோநோனா இருந்தாள்.

மகளைத் தன் வீட்டில் வைத்திருந்தால் தனக்குச் செலவு அதிகரிக்கும் என்பதால் மகளையும் பேத்தியையும் திரும்பவும் சிங்கோவிடம் திருப்பி அனுப்பினாள் நோனாஹாமி. அவள் திரும்பி வந்ததை விரும்பாத அப்புசிங்கோ நோனாஹாமியிடம் போய் அவளுக்கு 200 ரூபாய் தருவதாயும் மங்கோநோனாவும், மகள் மாப்பிநோனாவும் அவனோடு இருக்கட்டும் என்ற கேட்டதுக்கு அவள் மறுத்து



விட்டாள்.

1949 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி மாலை 4 மணியளவில் அப்புசிங்கோ வீட்டில் இருந்து மங்கோநோனாவினதும் அவளின் மகளினதும் அபயக் குரல் கேட்டதாக பொலிஸ் விசாரணையின் போது அப்புசிங்கோவின் வீட்டுக்கு அருகே விறகு பொறுக்கிய இரு பெண்கள் சொன்னார்கள்.

அதே தினம் இருவர் மாலை ஆறு மணிக்கு சிற்றாற்றில் மீன் பிடிக்கும் போது மங்கோநோனாவும் அவளும் மகளும் ஆற்று பக்கம் போனதைக் கண்டதாக சொன்னார்கள். அதன் பின் இருட்டும் போது அப்புசிங்கோ படகு ஒன்றில் ஆற்றில் சென்றதைக் கண்டதாக சொன்னார்கள்.

பெப்ரவரி 3 ஆம் திகதி காலை, நெருப்பு பெட்டி வாங்கித் தரும்படி தனக்குப் பணம் கொடுத்த மங்கோநோனாவினது வீட்டுக்கு சென்று வாங்கிய நெருப்பு பெட்டியையும் மிகுதி பணத்தை கொடுக்க சென்ற போது' அவர்கள் வீட்டில் இருவர்களையும் காணவில்லை. அப்புசிங்கோ அவர்கள் நோனா ஹாமி வீட்டுக்கு சென்று விட்டதாக சொன்னான் என்று விசாரணையின் போது தெரிய வந்தது.

பெப்ரவரி 4 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் ஆற்றுக்கரை பக்கத்தில் உள்ள இந்துரா மரங்களின் இலைகள் பறிக்க சென்ற இருவர் ஆற்றுக்கரை ஓரத்தில் ஒரு மூன்று அடி அகலமும் நாலடி ஆழமும் உள்ள நீர் இருந்த குழியில் ஒரு பெண்ணின்பிரேதம் கழுத்தில் கையிற்றுடன், நீண்ட கைச்சட்டையுடன், அழுகிய நிலையில் நீரில் மிதப்பதை கண்டார்கள் . உடனே அவர்கள் கிராமத்து விதானையாருக்கு அறிவித்தனர். அவரும் உடனே அம்பலாங்கொட பொலிஸ்க்கு அறிவித்தார். பொலிஸ் கான்ஸ்டபிள் மார்சல் என்பவரும் மூன்று பொலிஸ்காரர்களும் ஆற்றுக் கரைக்கு வந்து பிரேதத்தை மீட்டு வைத்தியப் பரிசோதனைக்கு அனுப்பினார்கள். விசாரணை தொடர்ந்தது.

அந்தப் பிரேதம் மங்கோ நோனாவினது என்று அவளின் தாயாலும் சகோதரிகள்ளாலும் அடை யாளம் காணப்பட்டது. அவளின் மகளின் பிரேதம் காணப்படவில்லை பிரேதப் பரிசோதனையின் போது மன விரக்தியால் தற்கொலையாக இருக்கலாம் என வைத்திய அதிகாரி சொன்னார்.

ஒருவேளை முதலைகளின் தாக்குதலுக்கு உட்பட்டு இறந்த உடலை முதலை குழிக்குள் கொண்டு போய் உண்பதுக்கு பதுக்கி வைத்திருக்கலாம் எனவும் கருதினார்கள்.

அந்த குழி அமைந்த விதமானது முதலை தோண்டிய குழி போல் இருக்க முடியாது என மிருக காட்சிச்சாலை நிபுணர் சொன்னார். ஆகவே அந்த குழி மனிதனால் தோண்டப்பட்டிருக்கலாம் என்று முடிவு எடுத்தனர். அப்படி இருந்தால் குழிக்கு அருகே காலடி தடயங்கள் இருக்கவில்லை.

சந்தேகம் அப்புசிங்கோ மேல் பொலிஸ்க்கு விழுந்தது. மேலும் திடீர் என சில முதலைகளை சுட்டு வயிற்றை வெட்டி பார்க்கும் படி கான்ஸ்டபிள் மார்சலுக்கு அவரின் அதிகாரி சொன்னார். அவரும் சில முதலைகளைக் கொன்று வயிற்றினை பிரித்துப் பார்த்த போது, ஒரு பெரிய முதலையின் வயற்றில் இருந்து வளையல்கள், தலை முடி, கழுத்து மாலையில் அணியும் மணிகள், கயிறு, ஒரு விரலின் நகம் ஆகியவற்றை கண்டு எடுத்தார்.

அவை இறந்த மங்கோநோனாவினதும், அவளின் மகளினதும் என்று அடையாளம் காணப்பட்டது. அதோடு அப்புசிங்கோவின் வீட்டில் பரிசோதனை செய்த பொது ஒரு கயிறும் கண்டுபிடிக்கப்பட்டது . அப்புசிங்கோவின் வீட்டில் இருந்த கயிறும், முதலையின் வயிற்றில் இருந்த கயிறும் ஒரே மாதிரி என்று பரிசோதகர் சொன்னார். மங்கோநோனாவும், மகளும் பெப்ரவரி முதலாம் திகதி மரித்திருக்கலாம் என வைத்திய அதிகாரியின் அறிக்கை சொன்னது.

அதன் படி மரணம் தற்கொலையாக இருக்கும் என்று கருதப்பட்டது. அதே சமயம் முதலைகள் தாக்கி இறந்திருக்கலாம் என்றும் கருதினார்கள். அதேவேளை அப்புசிங்கோ கொலை செய்திருக்கலாம் என்றும் பொலிஸ் சந்தேகித்தது. பல சாட்சிகளை பொலிஸ் விசாரித்த போது அப்புசிங்கோ தனது வைப்பாட்டியையும், மகளையும் நடத்திய விதத்தில் அவர்களை அப்புசிங்கோ கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர் மேல் கொலை குற்றம் சுமத்தி வழக்கு விசாரணை காலி நீதி மன்றத்தில் எட்டு நாட்கள் நடந்தது.

ஆங்கிலம் பேசும் ஜூரிகள் வழக்கை கேட்டு அப்புசிங்கோ நிரபராதி என்றும், மங்கோநோனாவினதும், மாம்பிநோனவினதும் மரணம் முதலையால் ஏற்பட்டிருக்கலாம் என்று தீர்ப்பு அளித்தனர். இந்த கொலை வழக்கு முதலை கொலை வழக்கு என நாமமிடப்பட்டது. கொலை செய்தது எனக்கருதப்பட்ட முதலை சுடப்பட்டு இறந்து விட்டது. அப்புசிங்கோ அந்த சிற்றாற்றில் வாழ்ந்த முதலைக்கு நன்றி தெரிவித்திருப்பான். இன்னொரு வைப்பாட்டியைத் தேடிப் போனானோ தெரியாது.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1447

Search for people, places and things  Nagendram  Home

### நிரோஸ்




### ஞானேஸ்வரன்




### தயாதீசன்





### கீர்த்தனன்




### துவாரகன்




### றொபின்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 137

## நோய் தணிக்கும் இயற்கை வழிபாடும் இறை வழிபாடும்



இயற்கையை இறைவனாகச் சித்திரித்து வழிபடும் மரபு எம்மக்களிடையே அன்று தொட்டு இருந்து வருகிறது. இவ்வாறான இறைவழிபாடு மனிதனின் ஆரோக்கிய மேம்பாட்டிற்கு உறு துணையாக இருக்கிறது என்பதற்கான பல சான்றுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இறைவனையும் இயற்கையையும் பக்தியுடன் மனமுருகி. மனம் ஒருமித்து திய ானித்து வழிபடும் முறை அன்று தொட்டு எல்லா மதங்களிலுமே பின்பற்றப் பட்டு வருகின்றது.

இதன் மூலம் பல தீமைகள் நீங்கும். நாம் காப்பாற்றப்படுவோம். சுகம் பெறுவோம். பல நல்ல விடயங்கள் நடைபெறும். மனம் சாந்திபெறும் என்ற நம்பிக்கை மதநம்பிக்கை உடைய அனைவரது மனங்களிலும் குடிகொண்டிருக்கிறது.

இவை உண்மைதான் என்ற கேள்வியும் பலரது மனங்களிலே எழத்தான் செய்கிறது. ஆனால் இவை உண்மை என ஆராய்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.


மனம் ஒருமித்து மனமுருகி, தியானித்து வணங்குவது என்பது Meditation, Relaxation சுவாசப் பயிற்சி என்ற மருத்துவ விஞ்ஞானப் பதங்களுக்குள் அடங்குகிறது.

இவற்றால் ஏற்படும் அனுகூலங்கள் பல. இவற்றை ஒழுங்காகச் செய்து வந்தால் மனப்பாரம் குறைவதுடன் பல கொடிய நோய்களிலிருந்து நாம் காப்பாற்றப்படுவதுடன் உடலில் நல்ல பல மாற்றங்கள் நடப்பதற்கும் இது வழிகோலும் என்று விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.


அத்துடன் சூரிய நமஸ்காரம் உடலின் விற்றமின் D தொகுப்பை அதிகரித்து உடலை காப்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. மத வழிபாட்டு முறைகள் மனிதனை உடற்பலமும் ஆன்மீக பலமும் பொருந்தியவனாக ஒரு முழுமையான ஆரோக்கியமுள்ள மனிதனாக வாழ்வதற்கு வழிசமைத்து நிற்கின்றது.

ஒழுங்கான அமைதியான இறைவழிபாடு மன அழுத்தம், உயர்குருதி அமுக்கம், மாரடைப்பு, பாரிசவாதம், மனச்சோர்வு போன்ற நோய் நிலைகளை தணிக்க உறுதுணையாக அமைவதுடன் எமது என்புத்தொகுதி பலம்பெறவும் வழிவகுக்கின்றது.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**



## சுற்றாடல் காத்து எம் சுகம் காக்க...



எமது சுகத்துக்கு அடிப்படையாக, ஆணிவேராக இருப்பது எமது சுற்றாடல் என்பது எம் அனைவருக்கும் தெரியும். இந்த இயற்கை வளங்களை காத்து அதனை மெருகேற்றி அதனுடன் ஒன்றி வாழும் வாழ்க்கை முறை ஆரோக்கிய வாழ்க்கை முறை என்று கொள்ளப்படுகிறது.

ஆனால் நாம் இயற்கையிலிருந்து அந்நியப்பட்டு விளம்பரங்களின் தாக்கத்திற்கு ஆட்பட்டு எமது ஆரோக்கியத்தை தொலைத்து வருகிறோம்.

நாம் உடல் ஆரோக்கியத்திற்கு என்று பயன்படுத்தி வருபவற்றை பட்டியலிட்டால் ஓட்ஸ், சத்துக் குளிசைகள், ஆட்டாமா, ரொனிக்குகள், சத்துமாப் பேணிகள், போத்தல்களில் வரும் பானங்கள் போன்றவற்றைக் குறப்பிடலாம். இவற்றை வாங்கி பாவிப்பதில் மனநிறைவும் பெருமையும் கொள்கிறோம்.

எமது மண்ணில் உற்பத்தியாகாத இறக்குமதி செய்து வரும் இந்த பொருட்கள் தான் உண்மையான சத்துள்ளவை என நம்பி பெருமளவு பணத்தை இதற்காக அநாவசியமாக செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

எமது சொந்த மண்ணில் உற்பத்தியாகும் ஆரோக்கியமான.இயற்கையான உணவுப் பொருட்களான தீட்டாத அரிசிமா, ஊர்க்கோழி முட்டை, உடன் பசும்பால், மோர், விளாம்பழம், கொய்யாப்பழம், முருங்கை இலை, வல்லாரை, தவசிமுருங்கை, அகத்திப்பூ, தேசிக்காய், ஒடியல், இராசவள்ளி, இளநீர், இளநீரின் வழுக்கல், நுங்கு போன்ற பல அற்புதமான உணவு வகைகளில் நாம் அக்கறை காட்டாமல் இருந்து வருகிறோம்.

இவற்றை ஒழுங்காக பாவித்து வருவோமாக இருந்தால் சத்துமாப் பேணிகளோ விற்றமின் குளிசைகளோ பாவிக்க வேண்டிய தேவை இருக்காது. அத்துடன் எமது உள்ளூர் உற்பத்தி பெருகி எமது சூழல் வளம்பெறும்.

இயற்கை உர உற்பத்தியிலும் நாம் அக்கறை அற்றவர்களாக இருந்து வருகிறோம். குப்பைகளையும் கழிவுப்பொருட்களையும் எரிப்பதனால் சுற்றாடல் மாசடைவதுடன் எமது சூழலும் வெப்பமடைகின்றது.




இயற்கையான சேதனப் பசளையாக மாறக்கூடிய இந்தப் பொருட்கள் அழிவடைந்து விடுகின்றன..

எனவே வீட்டுக் கழிவுகளையும் குப்பைகளையும் ஓரிடத்தில் சேகரித்து சேதனப் பசளையாக்குவதற்கு முயற்சி எடுப்போம். இதன்மூலம் எமது சுற்றாடலை வளப்படுத்துவோம்.

எமது பிரதேசத்தில் இயற்கையாக மருந்து தெளிக்காது வளரக்கூடிய, ஆரோக்கியமான உணவுப் பயிர்களுக்கு தவறான அவப் பெயர்களை கட்டிவிட்டு செயற்கையான, இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்பட்டு பொதி செய்யப்பட்ட பல பொருட்கள் விளம்பரங்க கொண்டிருப்பது வேதனையான விடயம்.

அகத்தி மரத்தை வீட்டில் வளர்த்தல் கூடாது, தவசிமுருங்கை சாப்பிட்டால் புற்றுநோய் உண்டாகும், சிறுகுறிஞ்சா உட்கொண்டால் சிறுநீரக கோளாறு உண்டாகும், வாழைப்பழம் சாப்பிட்டால் உடல் குண்டாகும்...இவ்வாறாக பல கட்டுக்கதைகள் நம்மத்தியில் பரப்பப்பட்டு வருவதுடன் அதை நம்பி பலர் செயற்கை உணவுகளின் காலடியில் சரணாகதி அடைந்து வருகிறார்கள்.




இந்த நிலை மாற்றமடைந்து எமது வாழ்க்கை முறையையும் எமது உணவு முறையையும் எமது சூழல் சார்ந்ததாக மாற்றம் அடைய அனைவரினதும் ஒன்றுபட்ட முயற்சி தேவையாகி நிற்கின்றது.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 468 5555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்